# தமிழரசு

திங்கள்இருமுறை ழச 1-1971 35 காசு



# அரசு சிமெண்ட்

## வலிவும் வனப்பும் வாய்ந்தது




நீண்டகாலம் மங்காத அழகுடன் விளங்க வேண்டுமென்றே தயாரிக்கப்படுகிறது, புதிய அரசு போர்ட்லண்ட் சிமெண்ட், வெகு அருமையான மூலப் பொருள்களும் அதி நவீன தொழில் நுட்பமும் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்படுவதால், அரசு சிமெண்ட் மிக மிகச் சன்னமாக விளங்குகிறது. கட்டிடம் கட்டுபவர்களில் பெரும்பாலோர் அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குகிருர்கள். நீங்களும் ஏன் கூடாது?

TIDCO

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)**
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம்,
3வது மாடி, தபால் பை நெ. 5205, சென்னை-2.
தொழிற்சாலை: தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

A.C.11.




# தமிழரசு

மலர் 2]      1-12-1971      [இதழ் 11

## இந்த இதழில்


நீறுமிகு மின்ஒளி விளக்கு
மக்களைத் தாக்கும் விந்தை நோய்
முந்திரி ஒரு முழு உணவு
நில், கவனி, புறப்படு
சிலம்பை விளம்பும் பாரதி
வழி காட்டும் வட ஆர்க்காடு
சாமிநாதன் சேவை சமுதாயத்திற்குத் தேவை!
திருச்சி தந்த மேதை
ஏன் இந்தக் காதல்? (தொடர் கதை)
வெண்பாப் போட்டி

மற்றும்

திரைப் படப் பரிசளிப்பு விழாக்காட்சிகள்

4, 5-ஆம் பக்கங்களில்


---

20—11—71 அன்று
தமிழக முதல்வர் கலைஞர்
அமெரிக்காவில்
ஆர்லந்தோ நீரூற்றுக்கள் பற்றிப் பாடிய கவிதை

## முகப்பில்

திரு முரசொலி மாறன் அவர்களால் வழங்கப் பட்டுத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்ற—சிலம்பு தந்த இளங்கோவின் திருவுருவச் சிலை.


செய்திப் படங்கள்
நகரவை சூரமங்கலம்
நகரவை மதுராந்தகம்
இதுவரை நகரப் பஞ்சாயத்துக்களாக இருந்த மதுராந்தகம் (செங்கை-மாவட்டம்) சூரமங்கலம் (சேலம்-மாவட்டம்) இரண்டையும் நகரவைகளாக்க அரசு முடிவு செய்துள்ளது.
மதுரை, கோவை, கரூர் பொள்ளாச்சி, தஞ்சை நகராட்சிகளின் மின்-தொழிலாளர்களுக்கான ஊதியக்குழு சிபாரிசுகளின் அடிப்படையில், 2-10-'70 முதல் ஊதிய உயர்வை நடைமுறைக்குக் கொண்டு வர அரசு முடிவு செய்துள்ளது.
ஊதிய உயர்வு மின் தொழிலாளர்க்கு 2-10-'70 முதல்... அரசு முடிவு
அரியானா
மைசூர்
பஞ்சாப்
தமிழ்நாடு அரசு
வெளி மாநிலப் பரிசுச் சீட்டுகளைத் தமிழகத்தில் விற்பனை செய்யக் கூடாது என்று அரசு தடை-விதித்துள்ளது.
கோபன்


தமிழ்நாடு அரசு
அக்டோபர் 1
புறநகர் பகுதி கோவை
கோவை நகரம், புறநகர்ப் பகுதிகளில் பணியாற்றும் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்பு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு நகர ஈட்டுப் படியையும் வீட்டு வாடகைப் படியையும் அக்டோபர்த் திங்கள் முதல் நாளிலிருந்து தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது.
கிழக்குக் கடற்கரையிலுள்ள மீன்வளப் பகுதிகளில் எங்கெங்கு மீன்கள் கிடைக்கும் என்பதைக் கண்டு பிடிக்கும், ஒவ்வொன்றும் 9 லட்சம் ரூபாய் விலையுள்ள இழுவைப் படகுகள் இரண்டைத் தமிழ்நாடு அரசு வாங்க முடிவு செய்துள்ளது.
பயிர்ப் பாதுகாப்புக்காக 50 லட்சம் ரூபாய் செலவில் ஐந்து ஹெலிகாப்டர் விமானங்களை வேளாண்மைத் துறைக்காக வாங்கத் தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.



# கற்பனை ஊற்று!

இல்லத்தோர் எனும் [illegible] வெயிலே
விடிய [illegible] கண்டேன்
தெளிவாக்கு போட்டுவிட்டு [illegible]
அருவியும் பிசகாமல் [illegible]
நீரோடு [illegible]
தோற்றுப் பெண்ணை சொல்வேன்!

பசும்புல் தரை மீது பால் நிலவுப்
பனித்துளிக்கு உவமை போல் இருக்காதே
- [illegible]
பார்த்துக் கொண்டிருக்கும் போதே
'பட்'டென மறைந்துவிடும் மற்றோர் காட்சி
சிப்பிக்குள் [illegible]
[illegible]
[illegible] வாசனையும் [illegible]
[illegible] பட்டணையில்
பொன் பரப்பும் [illegible]
[illegible] போல
[illegible]





அந்நாள் வெள்ளை [illegible]
கடவுள் [illegible]
காதுக்குள் இன் உவமை வெட்டும் போது
[illegible] போல
[illegible]
[illegible]
மல்லிகைப் [illegible] தேவையில்
[illegible] தேவையில் [illegible]
புயிர்த்து வைத்திருந்து கோலம் போல
[illegible] காட்டி [illegible]

[illegible] -
நினைவாக நிற்கின்ற [illegible]
[illegible] அழகுலே!
பெண் [illegible]
வண்ணத் [illegible] கொத்து - மனமே
வனைக்க என்றும் இடை கேட்பாய்.

அன்பு
கலைஞர்
மு.க.
22/11/71






## வீட்டிற்கோர் மாமரம்

மாம்பழம் சுவையும், சத்தும் மிகுந்தது மட்டுமல்ல; மனித வாழ்வுக்கு இன்றியமையாத சக்தியையும் அளிக்கிறது.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒரு சத்துணவு வல்லுநரின் ஆராய்ச்சியின்படி தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஓர் ஆண்டிற்கு 14,00,000 கலோரி சத்துக் கொடுக்கும் உணவு தேவைப்படுகிறது. அந்த அடிப்படையில் ஒவ்வொருவரும் ஓர் ஆண்டிற்குத் தேவையான உணவை உற்பத்தி செய்து கொள்ள 1·45 ஏக்கரில் கோதுமை அல்லது 0·09 ஏக்கரில் வாழை அல்லது 0·05 ஏக்கரில் மா சாகுபடி செய்ய வேண்டும். இதிலிருந்து மா சாகுபடி செய்வதே மிகுந்த பயனுள்ள சிக்கனமான செயல் என்பது புலனுகின்றது. எனவே அனைவரும் தங்கள் தேவைக்கேற்ப ஒரு சில மாமரங்களையாவது வளர்க்க வேண்டியது மிகவும் அவசியமாகும். அவ்வாறு செய்ய முடியாவிட்டாலும் வீட்டிற்கு ஒரு மாமரம் வளர்ப்பது எளிய செயலல்லவா? வீட்டிற்கோர் மாமரம் வளர்க்க இன்றே விரைந்து செயல்படுவீர்!



# இந்திய நாடு காக்க—

இன்று தோன்றியுள்ள பதட்டமான சூழ்நிலை முற்றி, இந்தியாவில் போர் மூளாமல் இருக்கும் வழி வகைகளை நாம் தேடிக்கொண்டிருந்தாலும் போர் எனும் நெருக்கடியில் நாம் ஈடுபட நிர்ப்பந்திக்கப் பட்டோம் என்றால் இறுதியாக வெற்றியடையும் வகையில் தமிழகத்தின் தியாகம் இருந்தது என்பதுதான் தமிழ் மக்கள் கேட்டு மகிழக்கூடிய செய்தியாகும்.

இந்திய எல்லையில் பகைவர்களால் நேரவிருக்கும் பேராபத்து எத்தகையதாக உருவெடுக்க விருக்கிறது என்பதை இன்றுள்ள சூழ் நிலைகள் நமக்குக் காட்டு கின்றன.

ஆகவே, அந்த ஆபத்தை நீக்கிட—தடுத்திட-தகர்த்திட தமிழ் நாட்டில் பிறந்த ஒவ்வொரு தமிழ் மகனும் சூளுரை எடுத்துக் கொள்ளவேண்டும்!

எத்தகைய ஆபத்து வந்தாலும் இந்தியாதான் வெல்லும் என்ற தன்னம்பிக்கை நமக்கு உண்டு.

எந்த நாட்டினருடனும் நமக்குப் பகைமையில்லை. ஆதிக்க உணர்வோடு யாரிடமும் போரிட நாம் செல்லவில்லை. ஆனால், நம் உரிமைகளுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் வலுச் சண்டைக்கு வருவோருக்கு வகையான பாடம் புகட்டிய வரலாறு நமக்குண்டு.

இந்திய நாட்டிற்காகச் செய்யப்படும் எந்தத் தியாகத்திலும்—அது நாட்டு எல்லைக்கான போராட்டமானாலும் விடுதலைப் போராட்டமானாலும் குறிப்பாகத் தமிழ் மண்—தனது மான உணர்வை-தனது வீரப்பண்பை உலகம் வியக்க நிரூபித்துக் காட்டிடும் பெருமை படைத்தது.

**மீண்டும் அத்தகைய ஒரு வாய்ப்பு வருமாயின் அந்தத் தியாக உணர்வை-வீர உணர்வை-மான உணர்வை நிரூபித்துக்காட்டத் தமிழகம் தயங்காது; தயங்காது என்ற சூளுரையை ஏற்போம்.**

#### வாழ்க [illegible]

அமெரிக்க நாட்டிற்கு உடலாற் பிரிந்து சென்றிருக்கும் உத்தமர் கலைஞர் முதல்வர் டாக்டர் அவர்கள் விடுத்திருக்கும் விடை பெறு முடங்கல் அன்பூற்றினைப் பெருக்கி நிற்கிறது! இதயத் தொலைவில்லா இப்பிரயாணம், ஏந்திச் சென்றிருக்கும் இலட்சியப் பணிகளை நிறைவு செய்து தரும் இனிய பயணமாகத் திகழ எல்லாம் வல்ல தமிழிறையை இறைஞ்சுவோம். தமிழரசியின் தவப்புதல்வன் தாயகம் திரும்பியதும் தனிப் பெருவகைத் திருவிழா நடத்துவோமாக!

—ச. அ. கேசவன்,
புளியங்குடி

#### பயனுள்ள 'சீர்கேடு'

'சூழ்நிலைச் சீர்கேடு' பயனுள்ள கட்டுரை. நம்மை அறியாமலும்-அறிந்தும் காற்றில் பரவுகின்ற நச்சுப் புகைகள் மனித இனத்துக்கு



எத்தகைய கெடுதிகளை உருவாக்குகின்றன என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார் கட்டுரை ஆசிரியர்.

—சே. பத்மநாபன்,
கோவை.

#### விளக்கு வெண்மைப் புரட்சி

பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து உருவாகியுள்ள 'வெண்மைப் புரட்சி' கட்டுரை படித்தேன். பருத்தி உற்பத்தியை வெண்மைப் புரட்சி என்று குறிப்பிட்டுள்ளது. நயமாக இருக்கிறது.

—ஏ. ஞானபாண்டியன்,
சிவகாசி.

#### தமிழரசுக்கு இணை தமிழரசே

கண்ணாடிப் பொருள்கள் செய்வதற்குப் பயிற்சி 'நிலையம் ஒன்று இருப்பதும்-அந்தப் பயிற்சி நிலையம் இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் இருக்கின்றது என்பதும்-அதுவும் சென்னையிலே-கிண்டித் தொழிற்பேட்டையில் இருக்கின்றது என்பதும் தமிழரசு நவம்பர் 16-ஆம் தேதி இதழைப் படித்த பின்புதான் தெரிந்தது. இதுபோன்ற பயனுள்ள செய்திகளைத் தெரிவிப்பதில் தமிழரசுக்கு இணை தமிழரசேதான்'!

—வீரகண்டாமணி,
கோடம்பாக்கம்.

#### முந்திரிச் செலவு!

முந்திரி சிறப்புப் பகுதி வெளியிட்டாலும் வெளியிட்டீர்கள் எனக்கு இரண்டரை ரூபாய் செலவாகிவிட்டது. கருவுற்றிருக்கும் என் மனைவி, முந்திரி பற்றிய கட்டுரைகளைப் படித்ததாலும், சுவையூறும் முந்திரியின் படங்களைத் தமிழரசு ஏட்டில் பார்த்ததாலும், முந்திரி வேண்டுமென்று அடம் பிடித்துவிட்டாள். என்ன செய்வது ? 200 கிராம் வாங்கித் தந்து தொலைத்தேன்!

—எஸ். ஆர். சிதம்பரம்,
மதுரை.

#### செந்தேன் செய்தி

இளங்கோவடிகளுக்குச் சிலை வைத்த அரும்பணிக்கு, மாசு கற்பிக்கும் சில தமிழ் ஏடுகளுக்கு, அறிவுரை கூறும்வகையில் அமைந்திருக்கிறது டாக்டர் கலைஞரின் கட்டுரை. சேரன் செங்குட்டுவனல் எழுப்பப் பட்ட கண்ணகியின் சிலை தமிழ்நாட்டுக்கு விரைவில் வந்து சேரும் என்று முதல்வர் கூறியிருக்கும் செய்தி, செவியில் செந்தேனாக விழுகிறது. வாழ்க கலைஞர்.

—எஸ். ஆர். சந்திரன்,
தஞ்சை.

#### இளைஞரணிக்குப் பாராட்டு

'இலட்சியப் பணி புரியும் இளைஞர் பணி' கட்டுரையைப் படித்தேன். சுவையும் பயனும் நிறைந்திருந்தது; சிற்றூர்கள் செழிப்பதற்கும் அங்கு வாழ்கின்ற மக்கள் சீர் பெறுவதற்கும் தொண்டு புரியும் இளைஞர் அணியினர் பாராட்டுக்குரியவர்கள் என்பதில் ஐயமில்லை. இந்தப் பயனுள்ள திட்டத்தை உருவாக்கிய நமது முதல்வரும் பாராட்டுக்குரியவர்தான்.

—செல்வி மீனாட்சி, திருச்சி.

#### பாராட்டுக்குரிய ஏடு

தமிழரசு ஒரு கட்சி ஏடு போலில்லாமலும் ஆட்சி ஏடு போலில்லாமலும், அரசுச் செய்திகளைக் கதை, கட்டுரை வாயிலாகத் தெரிவித்து வருவதால், ஒரு குடும்ப ஏடு போல எல்லாரும் விரும்பிப் படிக்கும் வண்ணம் வந்து கொண்டிருப்பது பாராட்டும் படியாக உள்ளது.

—எஸ். எஸ். மணி,
திருவனந்தபுரம்.




நிறமிகு மின் ஒளி விளக்கு எனும் பெயரைக் கேட்டதும் வியப்பு ஏற்படுகிறதல்லவா! நியான் விளக்குகளுக்குத்தான் இந்தத் தனித் தமிழ்ப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பெயரைச் சூட்டியவர் யார் தெரியுமா? பேரறிஞர் அண்ணா அவர்கள்தான்! 1967 ஆம் ஆண்டு, காஞ்சி கூட்டுறவு மத்திய வங்கியில் நியான் விளக்கு அமைத்த போதுதான் மேலே குறிப்பிட்ட பெயரைச் சூட்டினார் அவர். தத்தித் தவழும் குழந்தைகளுக்கு மட்டுமல்ல. தரைக்கு ஒளி கொடுக்கும் அஃறிணைப் பொருளான விளக்குக்கும் தமிழ்ப்பெயர் சூட்டி மகிழ்ந்திருக்கிறார் அண்ணா. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற இலட்சியத்தை உருவாக்கியவரல்லவா? அதனால்தான் மின் விளக்குக்கும் தமிழ் விளக்கம் கொடுத்திருக்கிறார்.

இன்று, உலகத்தில், பல நாடுகளும் நிறமிகு மின்ஒளி விளக்குகளைப் பயன் படுத்தி வருகின்றன. குறிப்பாக ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் தெருப்பெயர்களைக் கூட நிற மிகு மின் ஒளி விளக்குகளால் குறிப்பிட்டிருக்கின்றனர்; வீடுகளிலும், சிறு கடைகளிலும் கூட இந்த விளக்குகளைப் பயன் படுத்துகிறார்கள். ஜப்பான் நாட்டில் இந்த விளக்குகள் மிகுதியாகப் பயன் படுத்தப் படுகின்றன.

இப்படி உலகமெல்லாம் புகழடைந்துவரும் இந்த நிற மிகு மின் ஒளி விளக்கின் வரலாற்றைச் சிறிது பார்ப்போம்.

மிகப் பழங்காலத்தில் மக்கள் இரவு நேரங்களில் ஒளியைப் பெறுவதற்கு ஆமணக்கு எண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்தினர். பிறகு மண்ணெண்ணெய் விளக்கு வந்தது. பிறகு சிறிது சிறிதாக விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாகப் பெட்ரோமாக்ஸ் விளக்கு வந்தது.

1879-ல் அமெரிக்க நாட்டு விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன், மின் விளக்கைக் கண்டு பிடித்தார். டங்ஸ்டன் என்ற மெல்லிய கம்பியில் மின் ஓட்டத்தைச் செலுத்தி ஒளியை உருவாக்கினார். வெளிச்சம் கிடைத்தது. ஆனால் பல்பில் சூடு அதிகமாக இருந்தது. ஆகவே, விஞ்ஞானிகள் மீண்டும் சிந்தித்தனர். பல்பின் உள்ளே இருக்கும் காற்றை அப்புறப்படுத்தி அதனை வெற்றிடமாக்கி எரிய வைத்தால் சூடும் இருக்காது. ஒளியும் அதிக அளவில் கிடைக்கும் என்று முடிவு செய்தார்கள். அவ்வகையில் உருவான முதல் விளக்கை ஜெர்மானிய விஞ்ஞானி உலகுக்கு அறிமுகப் படுத்தினர். விஞ்ஞானிகள் மேலும் சிந்திக்கத் தொடங்கினார்கள். வாயுக்களைப் பயன்படுத்தி விளக்குகளை எரிய வைக்கலாம் எனும் முடிவுக்கு வந்தார்கள்.

1910-ஆம் ஆண்டு, ஜார்ஜ் கிளாட் என்பவர் முதல் குழாய் விளக்கைப் பாரிசில் உருவாக்கிக் காட்டினார். துவக்கத்தில் அந்தக் குழாய் விளக்குக்குள்ளே நியான் வாயு இடையாது. நைட்ரஜன், கார்பன்-டை-ஆக்ஸைடு இரண்டும் சேர்ந்த வாயுக்களே முதலில் பயன் படுத்தப்பட்டன. ஆனால் அந்த வாயுக்களினால் உருவாக்கப்பட்ட குழல் விளக்குகள் நீண்ட காலத்துக்குப் பயன்படவில்லை. கிளாட் மேலும் சிந்தித்தார். நீண்ட காலத்துக்குப் பயன்படும் குழாய் விளக்குகளை அதிக அளவில் உருவாக்கிவிட வேண்டும் எனும் முயற்சியில் மிகமிகத் தீவிரமாக ஈடுபட்டார். அவரது முயற்சி வீண் போகவில்லை. 1925-ஆம் ஆண்டில், அநேக நிறுவனங்கள், நியான் வாயு செலுத்தப்பட்ட ஒளிமிகு விளக்குகளைத் தயாரிக்கத் தொடங்கின.

இந்த விளக்கிலே சில புதுமைகள் உண்டு.

மற்றப் பல்புகளைப் போல இதில் ஃபிலமண்ட் கிடையாது.

வாயுக்களினால்தான் மின்சாரம் பாய்கிறது.

'டிரான்ஸ்பார்மர்' எனச் சொல்லப்படும் கருவி தேவையான மின் ஆற்றலை உற்பத்தி செய்து கொடுக்கிறது.

சாதாரண விளக்குகளை விட 5 மடங்கு அதிக ஒளியைக் கொடுக்கிறது.

வணிக நிறுவனங்கள், ஆலயங்கள், வங்கிகள் இங்கெல்லாம் விளம்பரங்களுக்காகப் பயன் படுத்தப் படும் இந்த விளக்குகள் கவர்ச்சியாக இருப்பதுடன், மின் செலவைக் குறைப்பதற்கும் பயன்படுகின்றன. அது மட்டுமல்ல. மிகக் குறைந்த பராமரிப்பு இருந்தால் கூடப் போதும். ஒரு 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு நீடித்து உழைக்கக் கூடியது.

இந்த நிறமிகு மின் ஒளி விளக்குகளை எப்படி உருவாக்குவது? அந்தப் பயிற்சியை, இங்கு தொழிற் பேட்டையில் உள்ள

"விஞ்ஞானக் கண்ணாடிப் பொருட்கள் உருவாக்கும் பயிற்சி நிலையம்" கற்றுத் தருகிறது. பயிற்சியாளர்களுக்குக் கற்றுத் தருவது மட்டுமல்ல. வெளியாரின் தேவைகளுக்கேற்ப நிறமிகு மின்னொளி விளக்குகளை உருவாக்கி வினியோகம் செய்கிறது இந்தப் பயிற்சி நிலையம்.

தஞ்சையில்—அறிஞர் அண்ணா மன்றம், கலைஞர் கருணாநிதி நகராட்சி அங்காடி, தஞ்சை நகராட்சி, சென்னையில் கலைவாணர் அரங்கம் ஆகிய இடங்களில் உள்ள நிற மிகு மின் ஒளி விளக்குகள் எல்லாம் இந்தப் பயிற்சி நிலையத்தால் உருவாக்கப்பட்டவையே !

அரசினர் காதி கிராமத் தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசினர் விற்பனை நிலையங்கள்—இன்னும் எத்தனையோ இடங்களிலும் இந்த நிலையத்தார் செய்த நிற மிகு மின் ஒளி விளக்குகள்தான் காட்சி தருகின்றன.

ஆந்திரம், மைசூர் ஆகிய மாநிலங்களுக்குக் கூட, இந்தப் பயிற்சி நிலையம் நிறமிகு மின் ஒளி விளக்குகளைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறது. ஆந்திரத்திலுள்ள அநேக வங்கிகளில் இந்த நிலையத்தார் செய்து தந்த விளக்குகள்தான் இடம் பெற்றிருக்கின்றன.

குறித்த தேதியில் செய்து கொடுப்பது இந்தப் பயிற்சி நிலையத்தின் குறிப்பிடத்தக்க சாதனை. இந்தச் சாதனையினால் தான் வெளி மாநிலத்தார் தங்கள் தேவைகளுக்கு இந்த நிலையத்தை நாடி வருகிறார்கள் ! பயிற்சி நிலையத்துக்கு மட்டுமல்ல—நமது தமிழ் நாட்டு அரசுக்கும் பெருமை தேடித் தரும் செய்தியாகும். தமிழ் நாட்டைப் பொறுத்த வரை நிறமிகு மின்ஒளி விளக்கினைத் தயாரிப்பதில் இந்தப் பயிற்சி நிலையம் தனிச் சிறப்புடனும் தனித் திறமையுடனும் காட்சி தருகிறது.

என்றாலும் நமது உள்ளத்திலே ஓர் ஏக்கம் !

"தமிழ்நாட்டில் இந்த விளக்குகள் அதிக அளவில் காணப்படவில்லையே! ஏன் ?"

இந்தக் கேள்வியை நிலையத்தின் கண்காணிப்பாளரிடம் கேட்ட போது அவர் சொல்லிய பதில்—

"நியான் விளக்குகள் என்றவுடன் சிலர் பயப்படுகிறார்கள். அதிக மின் ஆற்றல் தேவை என ஒதுக்கி விடுகிறார்கள். பலர், அதிக மின்சாரக் கட்டணம் கொடுக்க நேரும் என்றெல்லாம் தப்புக் கணக்குப் போடுகிறார்கள். சாதாரண விளக்குகளைவிட மிகக் குறைந்த அளவு மின்சாரச் செலவுதான் ஆகும். அதை அறியாமல், அச்சப்படுகிறார்கள். அதனால் தான் தமிழ் நாட்டில் இந்த விளக்குகள் அதிகமாக இல்லை"

மற்றொரு செய்தியையும் அவர் குறிப்பிட்டார்.

"மேல் நாடுகளில் 8 முதல் 10 வோல்ட் வரை மின் சக்தியைப் பயன்படுத்தி நியான் விளக்குகளை எரியவைக்கிறார்கள். நாம் 220 வோல்ட் பயன்படுத்துகிறோம். இது உச்ச அளவு ஆகும். எனவே நாம் ஆய்வு செய்து பார்த்து மேல் நாடுகளைப் போலக் குறைந்த அளவு வோல்ட்டுகளைக் கொண்டு இந்த விளக்குகளைப் பயன்படுத்துவதற்கு வழி வகை செய்தால் மின் செலவு இன்னும் குறையும்." எனச் சொல்லும் நிலையக் கண்காணிப்பாளரிடம் ஆராய்ச்சி உள்ளம் அமைந்திருப்பது தெளிவாகிறது.

இந்த விளக்குகள் உருவாகும் விதத்தைப் பார்ப்போம்.

முதலில், தேவைப்படும் எழுத்துக்களின் வரை படங்களை உருவாக்கிக் கொள்ளுகிறார்கள். 12 மி. மீட்டர் சுற்றளவுள்ள கண்ணாடிக் குழாய்களை 'ரிப்பன் பர்னர்' என்று சொல்லப்படும் விளக்கின் உதவியால் சூடாக்கி, உருக்கித் தேவையான எழுத்துக்களின் வரைபடங்கள் மீது வைத்து மடக்கி, வடிவங்களை உருவாக்குகிறார்கள்.

குழாய்களின் இரு முனைகளிலும் மின் கடத்திகளைப் பொருத்திக் குழாய்களின்

---

# வெண்பாப் போட்டி—24

முறிப்படி : தைமொழியைப் போற்றல் தலை

முடிவு நாள் : 16—12—1971

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

**விளக்கம் :**

மூன்றும் அடியின் இறுதிச் சீரின் எழுத்து, அல்லது சொல், கொடுக்கப்பட்டுள்ள நான்காம் அடியோடு பொருந்திப் பொருள்தரும் வகையில் நேரிசை வெண்பா அமைத்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டு :

...... ...... ...... ......
...... ...... ...... ......
...... ...... ...... அன்ன
மெனவே நடந்திடுதல் மேல்

**நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் !**

அஞ்சலட்டையில் எழுதப்படும் வெண்பாவே கவனிக்கப்படும்.

மற்ற விதிகள் வழக்கம் போல்:
ஆசிரியர் (வெண்பாப் பேட்டி),
"தமிழரசு"
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

உள்ளே உள்ள காற்றின் அழுத்தத்தைச் சூடாக்கி, வெளியேற்றுகிருர்கள். சூடு ஆறிய பின்னர், தேவையான நியான் அல்லது ஆர்க்கான் வாயுவை மிகமிகத் துல்லியமான அளவு, கண்ணுடிக் குழாய்க்குள் செலுத்துகிருர்கள். பிறகு வெற்றிடமாக்கப்பட்ட முனையிலிருந்து கண்ணுடி வடிவத்தைத் திரித்து விடுகிருர்கள். பிறகு இவைகளை ட்ரான்ஸ்பார்மருடன் பொருத்தும் போது, சீரான வாயுக்கள், எழுத்து வடிவக் கண்ணுடிக் குழாயின் எல்லா முனைகளிலும் சமமாகப் படிகிறது. இவ்வாறு படிந்த பின்பு தேவைப்படும் வரி வடிவ எழுத்துள்ள நிறமிகு மின் ஒளி விளக்கு உருவாகி விடுகிறது.



கண்ணுடிக் குழாய்க்குள் நியான் வாயுவைச் செலுத்தினுல் சிவப்பு வண்ணமும், நியான் ஆர்கான் இரு வாயுக்களையும் இணைத்துச் செலுத்தினுலும் பாதரசத்தைத் தனியாகச் செலுத்தினுலும் நீல வண்ணமும், ஹீலியம் வாயுவைச் செலுத்தினல் மஞ்சள் வண்ணமும் கிடைக்கிறது. இன்னும் வெவ்வேறு விதமான வண்ணங்களையும் உருவாக்குகிருர்கள்.

ஜப்பான் நாட்டில் ஒரே குழாய்க்குள் பல வண்ணங்களையும் உருவாக்கி வருகிருர்கள்.

ஓர் அடி உயரத்திலிருந்து நான்கு அடி உயரம் வரைதான் எழுத்துக்களை உருவாக்க முடியும். அதற்கு மேற்பட்ட உயரத்திற்குச் செய்ய வேண்டுமென்ருல், இரண்டு அல்லது மூன்று தனித் தனித் துண்டுகளாகச் செய்து இணைத்துக் கொள்ள வேண்டும். தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் 1 அடி உயர எழுத்து ஒன்று செய்வதற்கு 25 ரூபாய் ஆகிறது. 1 அடி உயரத்துக்கும் மேலுள்ள எழுத்துக்கள் என்ருல், மொத்த நீளத்தை அளந்து கணக்கிடுகிருர்கள். ஓர் எழுத்து, சுமார் 30 ரூபாய் ஆகலாம். சாதாரணமாக ஒரு விளம்பர விளக்கு 400 ரூபாய்க்குள் அடங்கி விடும். ஆனுல் அதனுடைய உழைப்பு-குறைந்தது 10 ஆண்டுகளுக்காவது கிடைக்கும்! அப்படியென்ருல், ஆண்டுக்குச் சராசரி 33 ரூபாய்தான். செலவாகிறது.



இந்த நிறமிகு மின் ஒளி விளக்கிலே குறிப்பிடத்தக்க செய்தி ஒன்று உண்டு. மழை பெய்து கொண்டிருக்கும் போது கூட இதனைப் பயன்படுத்தலாம். ஆனுல், மழை பெய்வதற்கு முன்பு இது பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடாது.

இந்த விளக்குகளைத் தயாரித்து வரும் இந்தப் பயிற்சி நிலையத்தில் தேர்ச்சி பெற்ற ஒருவர் ஜெர்மனிக்குச் சென்று வந்திருக்கிருர். இங்கே தயாரிக்கப்பட்ட சில கண்ணுடிப் பொருட்கள், ஜப்பான் நாட்டுக்குச் சென்றிருக்கின்றன. ஜப்பான் நாட்டினரைத் திருப்தி செய்திருக்கின்றன. அந்த நாட்டினரின் புகழ் மொழியை— பாராட்டுரையைப் பெற்றிருக்கின்றன.

தமிழ்நாட்டில் நிறமிகு மின் ஒளி விளக்கைத் தயாரித்து வரும் இந்தப் பயிற்சி நிலையம் விரைவில் மாபெரும் புகழை அடையப் போவது உறுதி.


டான்சி
தனது பணியின்
7வது ஆண்டு
துவக்கம்
துறைகள்
கட்டுமான கட்டமைப்புகள்
இரும்பு மர சாமான்கள்
விவசாய கருவிகள்
காலணிகள்
தோலணிப் பொருட்கள்.
கண்ணாடி உபகரணங்கள்
பீங்கான் பொருட்கள்
உப்பு மெருகிட்ட குழாய்கள்
பொறியியல் உதிரி உருப்புக்கள்
TANSI
தமிழ்நாடு சிறு தொழில்
நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2
53 தொழிற் கூடங்களை தன்னகத்தே கொண்ட
ஓர் வலிமையான அமைப்பு

இளம்பிள்ளை வாதம் என்னும் நோய்வருவதற்கு ஒரு நுண்ணிய கிருமியே காரண மாகிறது. இந்தக் கிருமியை மின்சாரத்தால் இயங்கும் உருப்பெருக்கிக் கருவியின் மூலம்தான் (Electro microscope) காணமுடியும். இது அவ்வளவு சிறியது.

இந்த நோயினால் பலபேர் பாதிக்கப்படுகின்றனர். ஆனால் மிகக் குறைந்த சதவீதத்தினருக்கே நோய் முற்றி இளம்பிள்ளை வாதமாக வெளிப்படத் தோன்றுகிறது. இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்களில் 2 முதல் 10 சதவீதத்தினர் தான் மரணம் அடைகின்றனர். இந்த நோய் ஒரு வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு மிகுதியாக வருவதில்லை. ஒரு வயதுக்கு அதிகமான பேர்களுக்குத் தோன்றுகிறது. பொதுவாக உலகில் எல்லாப் பகுதிகளிலும் இந்நோய் பரவிய போதிலும் தொழில் வளம் மிக்க நாடுகளில் மிகுதியாய்த் தோன்றுகிறது. இந்தியாவைப் போன்ற முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளில் இந்த நோய் குறைவாகவே இருந்து வருகிறது.




### விந்தை நோய்

ஆனால் சுகாதாரம் வளர, வளர இந்த நோய் அதிகமாகக்காணப் படுகின்றது. சுருங்கக் கூற வேண்டுமானால், சுற்றுப்புறத் துப்புரவு வளர்ந்துள்ள நாடுகளில் இந்த நோய் மிகுதியாக வருகிறது. சுற்றுப்புறத் துப்புரவு ஏற்பாடுகள் குறைவாக உள்ள நாடுகளில், இளம் வயதினருக்கு இந்நோய் பிடிப்பதுகுறைவாகவே உள்ளது. சுற்றுப்புறம் துப்புரவாக இருக்கும் நாடுகளில் மிகுதியாக வருவதென்பது விந்தையானது தான்.

இளம்பிள்ளை வாதம் இங்கு மங்குமாகத் தனித்தனியே வருவதுண்டு. பெரிய அளவில் கொள்ளை நோய் போல வருவதுமுண்டு.

பொதுவாக இது சிறுகுழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் வரும் நோயாகும். செயற்கையில் அல்லது இயற்கையில் நோய்த் தடுப்புச் சக்தி பெறாத பெரியவர்களுக்கும் இந்நோய் வரலாம்.

இதற்கு முன்பெல்லாம் இந்தியா போன்ற நாடுகளில் இந்த நோய் குறைவாகத் தோன்றி வந்தது. ஆனால் இப்பொழுது இங்கும் இந்நோய்சற்று அதிகரித்துள்ளது.

### தடுப்பு ஊசியின் பலன்

தடுப்பு ஊசி போடப்படும் நாடுகளில்இந்நோய் தோன்றுவது குறைவாக இருக்கிறது. இளம் பிள்ளை வாதம் நோயாளியிடமிருந்து உடல் நலமுள்ளவருக்குப் பரவுகிறது. நோயாளியின் மூச்சுக் காற்றில், தும்மலில், பேசும் போது, வாய் வழி வெளியேறுகின்ற நோய்க்கிருமிகள் உடல் நலமுள்ளவர்களைப் பாதிக்கிறது. மேலும் மலத்தின் மூலம் வெளியேறும் கிருமிகளும் மற்றவர்களை பாதிப்பது மற்றொருவழி. பால் முதலான உணவுப்பொருள்களின் மூலமும். புழுப்பூச்சிகள் மூலமும் இந்தநோய் பரவுகிறது என்பதற்கான ஆதாரம் ஏதும் இல்லை. சுற்றுப்புறத் துப்புரவு முன்னேறியுள்ள நாடுகளில் இந்த நோய் வாயுவழியாகவும், குறைந்த துப்புரவு வசதியுள்ள நாடுகளில் மலத்தின்மூலமாகவும் பரவுகிறது எனலாம்.

ஒருவருக்கு நோய் தொற்றிய பின் ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் கழிந்த பின்னரே நோயின் அறிகுறிகள்வெளிப்படத் தோன்றும். இந்தக் காலத்தைத் தான் நோய் உருவாகும் காலம் என்பார்கள். இந்த நோய்க் கிருமிகள் அநேகமாக எல்லாரையும் தாக்கலாம்; எல்லாருக்கும் நோய் தொற்றலாம்; ஆனால் நோய் தொற்றிய எல்லாருக்கும் நோய் வருவதில்லை. ஆனால் சிலருக்கே, குறிப்பாக மிகச் சிலருக்கே வாதமாக உருவெடுக்கிறது. இது "Ice-Borne phenomenix" எனப் பெயர்படும். அதாவது நமக்குத் தெரிகிற நோய்வாய்ப் பட்டவர்கள், கிருமிகளால் தாக்கப்பட்டவர்களைவிட மிகக் குறைவு.

### வாய்வழி மருந்து

எல்லாருக்கும் நோய் தொற்றிய போதும் மிகச் சிலரே வாதத்துக்குட்படுகின்றனர். இதற்குக் காரணம் என்ன? சமீப காலத்தில் தொண்டையில் டான்சில், அடினாய்டு முதலான அறுவைகள் செய்து கொண்டவர்கள், மூன்று நோய்த் தடுப்பு ஊசி போட்டுக் கொண்டவர்கள், அளவுக்கு மீறிய உடற்பயிற்சி செய்பவர்கள் முதலியவர்களுக்கு வாதம் வருகின்ற ஆபத்து மிகுதி. கர்ப்பிணிகளுக்கு எளிதில் வாதம் வரக்கூடும். இளம்பிள்ளை வாத நோய்க்கு இரண்டு விதத் தடுப்பு மருந்துகள் உள்ளன. ஒன்று, ஊசி மருந்தாக உடலில் செலுத்துவது. மற்றது வாய் வழிக்கொடுப்பது. ஊசி மருந்தில் மூன்று வகை நுண் கிருமிகள் உள்ளன. வாய் வழிக்கொடுக்கும் மருந்து சிரப் அல்லது, சிறு துளிகள் அல்லது இனிப்பு மாத்திரை வடிவத்தில்இருக்கும். இவற்றில் மூன்றுவகை நுண் கிருமிகள் உள்ளன. இவை எளிதில் குழந்தைகள் உட்கொள்ளும் வகையில் உள்ளன.

இந்த மருந்து மூன்று தடவை மருந்தாகக் கொடுக்கப்படும். முதலில் குழந்தையின் மூன்றாவது மாதத்திலும் அடுத்த இரண்டு தடவை மருந்துகள் ஆறு வாரக் கால இடைவெளிகள் விட்டு விட்டும் கொடுக்கப்படும். பின்னர் பள்ளி செல்லும் பருவத்தில் மிகுதி அளவாக (Booster Dose) ஒரு வேளை மருந்து கொடுக்கப்படும்.

### முன்னெச்சரிக்கை முறைகள்

இந்த மருந்துகளைக் கொடுக்கும் கால அளவு நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. இந்தியாவி

வரையறுக்கப்படவில்லை. கூடுதலாக மற்றொரு முறையும் இந்த மருந்தை, நோய் பரவுகின்ற காலங்களில் தரலாம். மக்களுக்கு இந்நோயின் தன்மைகளையும், பரவும் வகையையும் முன்னெச்சரிக்கை முறைகளையும், சிறு குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து கொடுப்பதனால் ஏற்படும் நன்மைகளையும் எடுத்துக் கூறி விளக்கவேண்டும். இந்த நோய் விஷயத்தில் ஏனைய தொற்று நோய்களுக்குச்செய்வது போல் நோயாளியைத் தனிப்படுத்தல், தொற்றுத் தடுப்பு முறைகள், ஏனையவர்களைப் பிரித்து வைத்தல் முதலான நடைமுறை பயனற்றதாகும். ஏனெனில் இளம்பிள்ளை வாதம் நோய் வெளிப்பட்டு அறிவிக்கப்படும் நிலையில் ஏற்கனவே மற்றவர்களுக்கு அது தொற்றிக் கொண்டிருக்கும்.

இந்த நோய்க்குக் குறிப்பிடத் தக்க சிகிச்சை ஏதும் கிடையாது. நோயாளியை உடனே மருத்துவ மனையில் சேர்ப்பதன் மூலம் அவருடைய உபாதை குறையும். மேற்கொண்டு ஏற்படத் தக்க விளைவுகளைத் தவிர்க்கவும் முடியும். பெரிய அளவில் நோய் பரவும்போது சமுதாயத்தில் குறிப்பாக இளம் குழந்தைகளுக்கு வாய் வழித் தடுப்பு மருந்து கொடுக்கும் இயக்கத்தை நடத்தவேண்டும். இவ்வாறு சமுதாய அளவில் தடுப்புமருந்து கொடுக்கும் போது, பள்ளிக் கூடங்களை மூடிவிடுதல், மக்கள் கூடும் பிற பொது நிகழ்ச்சிகளை நிறுத்திவிடுதல் முதலியன தேவையற்றவை.

## குன்னூர் நிலையம்

இத்தகைய நிலைமைகளில் தொண்டை அறுவைகள், மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடுதல் முதலியவற்றை நிறுத்தி வைக்க வேண்டும். அதிகத் தேகப்பயிற்சி செய்தல் கூடாது. கர்ப்பிணிகளைக் கவனமுடன் பராமரிக்க வேண்டும். குறிப்பிட்ட இடங்களில் சிகிச்சை வசதிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

குன்னூரிலுள்ள இளம்பிள்ளை வாதத் தடுப்பு நிலையம்தான் ஆசியாவிலேயே முதன் முதலாக வாய் வழிக்கொடுக்கும் தடுப்பு மருந்து தயாரித்துள்ளது. 1967 ஜூன் மாதத்தில் இந்த நிலையத்தில் இத் தடுப்பு மருந்து உற்பத்தி தொடங்கியது.

1960-ஆம் ஆண்டிலிருந்து இது நாள் வரையில் உலகெங்கும் சுமார் இலட்சக்கணக்கான பேருக்கு வாய்வழி இளம் பிள்ளை வாதத்தடுப்பு மருந்து கொடுக்கப் பட்டுள்ளன. இதனால்இம்மருந்து கொடுக்கப்பட்ட பகுதிகளில் சுமார் 95 சதவிகிதம் நோய் வருவது தடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக அமெரிக்கா போன்ற நாடுகளில் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பேர்களை நோய் தாக்கும் நிலை இருந்தது. இப்போது மிகக்குறைவான வர்களுக்கே நோய் ஏற்படுகிறது. அதுவும் தடுப்பு மருந்துபோட்டுக் கொள்ளாதவர்களே இந்நோயினால் தாக்கப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.**

19/20, லிங்கி செட்டித் தெரு, சென்னை–1.

தந்தி முகவரி : 'அர்பாங்க்'
அஞ்சல் பெட்டி எண்: 226

தொலைபேசி எண் : 20367

| | (வருடத்திற்கு சதவீதம்) |
|---|---|
| கரண்ட் அக்கௌண்ட் | 0·50 |
| சேவிங்ஸ் பாங்க் அக்கௌண்ட் | 4·00 |
| சீசன் டெபாஸிட்டுகள்—1,000-ம் அதற்கு மேலும் | |
| 15 நாட்கள் | 2·00 |
| 46 நாட்கள் | 3·00 |
| பிக்செட் டெபாஸிட்டுகள்—ரூ. 100-ம் அதற்கு மேலும். | |
| 91 நாட்கள் | 4·75 |
| 6 மாதங்கள் | 5.25 |
| 12 மாதங்கள் | 6·25 |
| 2 வருடங்கள் | 6·75 |
| 3 வருடங்கள் | 7·25 |
| 5 வருடங்கள் | 7·50 |

குறைந்த பட்ச கால அளவாக ஓராண்டுக் காலத்திற்கு ரூ. 1,000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள டெபாஸிட்டுகளுக்கும் மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம, கல்வி ஸ்தாபனங்களின் டெபாஸிட்டுகளுக்கு மேலே குறிப்பிட்ட வட்டி விகிதத்தை விட ½ சதவிகிதம் கூடுதல் வட்டி தரப்படும்.

ரெக்கரிங் டெபாஸிட்டுகள்: தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

| மாதத் தவணை | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
|---|---|---|---|---|---|---|---|
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

ஆர். கனகசபை,
தலைவர்.

பி. என். டி. சாரி,
செயலாளர்.

திரு சந்திர சேகர வெங்கட்ட ராமன் என்ற முழுப் பெயருக்குச் சொந்தக்காரரான சர். சி. வி. ராமன் 1888-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7—ஆம் தேதி, திருச்சியில் பிறந்தார். அவருக்கு நான்கு வயதாகும் போது, அவரது தந்தையார் விசாகப் பட்டினத்திலுள்ள கல்லூரி ஒன்றில் இயல்பியல் விரிவுரையாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இராமனின் உயர் நிலைப் பள்ளிக் கல்வி விசாகப்பட்டினத்தில் தான் முடிவுற்றது. தனது கல்லூரிக் கல்வியை, 1903-ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் தொடர்ந்தார். பி. ஏ., எம்.ஏ. தேர்வுகளில் தனித்தன்மை பெற்றுப் பரிசுகளை வாங்கினார். மாநிலக் கல்லூரியில்மாணவராக இருந்த காலத்திலேயே அறிவியல் ஆராய்ச்சியில்இராமனுக்குத் தனி அக்கறையும் ஆர்வமு இருந்து வந்தது. அந்நாளில் அந்த ஆராய்ச்சி இந்தியாவிற்குப் புதுமையான செய்தி தான்! என்றாலும் இராமன் தனது ஆராய்ச்சிகளின் முடிவுகளைப் பற்றியசெய்திகளை அவ்வப்போது, அகில உலக ஏடுகளில் எழுதி வந்தார்.

அவர் அன்போடு பேணி வந்த விஞ்ஞானத் துறையிலிருந்து விலகிச் செல்ல வேண்டிய ஒரு சூழ் நிலை அவருக்கு 1907-ல் ஏற்பட்டது. இந்திய நிதித் துறையினரால் நடத்தப்பட்ட அலுவல் போட்டித் தேர்வில் கலந்து கொண்ட இராமன் முதல் இடத்தைப் பெற்றதால் கலகத்தாவில் உதவி மாநிலக் கணக்காயராக (Assistant Accountant General) நியமிக்கப் பட்டார்.

ஏறக்குறையப் பத்தாண்டுகள் இந்திய நிதித் துறையில் பணியாற்றிய இராமன், தனதுபணிக் காலத்தில் விஞ்ஞானத்தை மறந்துவிடவில்லை. எப்படியாவது அறிவியல் துறைக்குப் பணி புரிவதற்கு அவகாசத்தை ஏற்படுத்திக் கொண்டார். இயல்பியலின் ஒவ்வொரு கிளையைப் பற்றியும் பல பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதி வந்தார்.

.1917—ஆம் ஆண்டு, கல்கத்தாப் பல்கலைக் கழகம் இயல்பியல் துறையின் தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி திரு இராமன் அவர்களைக் கேட்டுக் கொண்டபோது, அவர் மனப் பூர்வமாக ஒப்புக் கொண்டார். கணக்காயர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டுப் பல்கலைக்கழக இயல்பியல் துறைத் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில், புதிய பொறுப்பில் அவருக்குப் பண நஷ்டம்தான் ஏற்பட்டது. என்றாலும் '' இலட்சியம் ஈடேறுகிறது '' என்ற இதய மகிழ்ச்சி அவரிடம் காணப்பட்டது.

1917—ஆம் ஆண்டு முதல் 1932—ஆம் ஆண்டு வரை 16 ஆண்டுகள், இராமனின் விஞ்ஞானப் பணிகளின் தீவிரமான காலம். இந்தப் பொற்காலத்தில் இராமனைச் சுற்றிலும் எண்ணற்ற இளைஞர்கள் குழுமியிருந்தார்கள். குறிப்பிடத்




தக்க அவரது சாதனைகளில் பல நிறைவேறியதும் இந்தக் காலத்தில்தான்.

1928-ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஒளிச் சிதறல் பற்றி ஒரு புதுக் கொள்கையை அவர் கண்டு பிடித்தார். ''இராமன் விளைவு '' என்று அதற்குப் பெயர் சூட்டப்பட்டது. 1930-ம் ஆண்டு, இயல்பியல் துறைக்குரிய நோபல் பரிசு அவருக்குக் கிடைத்தது.

அடுத்தடுத்து வெளி நாட்டிலிருந்தும் — உள் நாட்டிலிருந்தும் இராமனுக்குப் புகழ் மாலைகள் கிடைத்தன. புதிய புதிய கௌரவப் பட்டங்கள் அவரைச் சரணடைந்தன. 1924-ஆம் ஆண்டு இலண்டன் நகரத்திலுள்ள அரசர் கழகத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வீரர் பட்டம் 1929-ல் கிடைத்தது.

1934—ஆம் ஆண்டு இராமன் இந்திய விஞ்ஞான நிலையம் (Academy of sciences) ஒன்றினைப் பெங்களூரில் நிறுவினார். இந்த நிறுவனத்தைத் தனது இறுதிக்காலம் வரை நடத்தினார். 1933—ஆம் ஆண்டு இந்திய விஞ்ஞானப் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநராக நியமிக்கப் பட்டார்.

1948-ஆம் ஆண்டு முதல் அவரது கடைசி மூச்சு இருக்கும் வரையிலும் அவர் பெங்களூரில் உள்ள ''இராமன் ஆராய்ச்சி நிலையத்தின் '' இயக்குநராக இருந்தார். இந்த நிலையத்திற்கு அவரே பலவகையிலும் உதவி செய்திருக்கிறார். குறிப்பாகப் பண உதவி நிறையச் செய்திருக்கிறார். மனத்தைச் கவரும் வைரங்கள், உப்புகள் ஆகியவற்றைச் சேர்த்து வைத்திருக்கும் சிறப்புக்குரியது இந்த நிலையம். இவற்றை உலகெங்கிலும் இருந்து திரட்டிக்கொண்டு வந்து சேர்த்தவர் திரு இராமன் அவர்கள்தான் ! தமது பிற்காலத்தில் வைரங்களின் அமைப்பைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார் இராமன்.

சர். சி.வி. ராமன் எதையும் பரபரப்போடும் வேகமாகவும் செய்து முடிப்பார். எவருடனும் உரையாடும் போதும் கூட அவரது கரங்கள் அமைதியாக இருப்பதில்லை; புத்தகத்தை எடுப்பார், பூதக் கண்ணாடியை எடுப்பார்; சாவிக் கொத்தை எடுப்பார் இப்படி ஏதாவது செய்து கொண்டிருப்பார் இராமன்.

நாடகங்கள், திரைப்படங்கள் என்றால் இராமனுக்குப் பிடிக்காது. இசையில் அவருக்குப் போதிய அறிவு கிடையாது. என்றாலும் ஒரு காலத்தில் வயலின் கருவியை வைத்துக்கொண்டு இரவு பகலாக வாசித்துக்கொண்டே இருந்தார். நூலின் அதிர்வு (Vibration of String) பற்றிய நூல் எழுதுவதற்காகவே அந்த வயலின் கருவியை இசைத்துப் பார்த்து ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்.

மிகப் பெரிய விஞ்ஞானிகளுக்குண்டான ஞாபக மறதி சி.வி.இராமனிடமும் இருந்திருக்கிறது. சில சமயங்களில், உலாவச் செல்வதாகச் சொல்லிச் செல்வார். பல மைல் தூரம் சென்று விடுவார்; பிறகு யாராவது அவரைத் தேடிச் சென்று அழைத்து வருவார்கள்.

காலில் போட்டுக் கொள்ளும் 'ஸாக்ஸ்' இரண்டும் ஒரே நிறத்தில் அமைந்திருக்கின்றனவா என்பதைக் கூடப் பார்க்காமல் வெவ்வேறு நிற 'ஸாக்ஸை' அணிந்து கொண்டு வெளியே சென்று விடுவார்.

வானொலி இசையும், தொலைபேசி மணி ஓசையும் கூட அவரது அறைக்குள் ஒலிக்கக் கூடாது.

அவரது உள்ளத்தைக் கவர்ந்த மேலை நாட்டு ஞானாசிரியர்கள்: தாமஸ் ஹார்டி, ஆர்.எல். ஸ்டீவன்ஸன்.

சிறந்த அறிவியல் துறை மேதையாகத் திகழ்ந்த இராமன் ஆற்றல் படைத்த மேடைப் பேச்சாளராகவும் இருந்தார். அவரது சொற்பொழிவு பொது மக்களைக் கவர்ந்து வந்தது. அவரது எளிய தன்மை-நகைச்சுவை உணர்வு இசைப் பற்று அவருக்குப் பலதுறைகளைச் சேர்ந்த பல நண்பர்களை உருவாக்கித்தந்தன. சென்ற ஆண்டு இராமன் திடீரென்று நோய்வாய்ப்பட்டார். மிகக் குறுகிய நாட்களுக்குள் அவரது நோய் அதிகரித்து விட்டது. 1970-ஆம் ஆண்டு நவம்பர் 21-ஆம் நாள் அவர் இயற்கை அடைந்துவிட்டார். அவரது உடல், அவரால் உருவாக்கப்பட்ட விஞ்ஞான நிலையத்திலேயே புதைக்கப்பட்டிருக்கிறது.

நவீன உலகம் எனும் வரைபடத்தில் இந்தியாவையும் எழிலுடன் இடம் பெறச் செய்த அந்த மேதையின் முதலாம் நினைவு நாளை நினைவுறுத்தும் வகையில் இந்திய அஞ்சல் தந்தித் துறை, அஞ்சல் தலையும், உறையும் வெளியிட்டுப் பெருமை சேர்த்திருக்கிறது. அஞ்சல் தலையில் திரு இராமனின் உருவமும்— வைரக்கல்லின் படமும் அச்சிடப்பட்டிருக்கிறது. வைரத்தின் அமைப்பை ஆராய்ந்தார் என்பதற்காக மட்டுமல்ல. வைரமுள்ள நெஞ்சு படைத்தவராக அவர் விளங்கினார் என்பதையும் தெரிவிப்பதற்காக!

---




# முந்திரி ஒரு முழு உணவு

முந்திரிப் பருப்பில் ஊட்டச் சத்துகள் மிகுந்து காணப்படுவதால், முந்திரிப் பருப்பும், பால், முட்டை, இறைச்சி ஆகியவைகளைப் போன்று ஒரு முழு உணவாகக் (A complete food) கருதப்படுகிறது. முந்திரிப் பருப்பில் உள்ள சுவையும், மணமும் மற்றெந்த முழு உணவுக்கும் இல்லாத தனிச் சிறப்பாகும்.

முந்திரிப் பருப்பில் 20·80 சதம் தாவரப் புரதச் சத்து உள்ளது. இப்புரதச் சத்தில் அதிக அளவு 'அமினோ அமிலங்கள்' (Amino Acids) அடங்கியுள்ளன. எனவே முந்திரிப் பருப்பு, சோயா மொச்சைக்கு இணையானதாகக் கருதப்படுகிறது. புரதப் பொருள் அடிப்படையில் முந்திரிப் பருப்பில் உள்ள புரதச் சத்து பால், முட்டை, இறைச்சி ஆகியவைகளில் உள்ள புரதச் சத்துக்கு ஈடானது.

முந்திரிப் பருப்பில் உள்ள புரதச்சத்தில் 50 சதம், விரைவாக நமது உடலால் தன்வயப் படுத்தப்படுகிறது. முந்திரிப் பருப்பிலிருந்து எடுக்கப்பட்ட புரதச் சத்தில் பின்கண்டவாறு முக்கிய அமினோ அமிலங்கள் அடங்கியுள்ளன.—

| | சதம். |
|---|---|
| குளுட்டாமின் அமிலம். | 6·51 |
| லியூசின் .. .. | 2·62 |
| அலமைன் .. | 2·35 |
| ஆர்ஜினின் .. .. | 2·14 |
| டைரோசின் .. | 1·42 |
| கிளைசின் .. .. | 1·12 |
| இஸ்டீடின் .. .. | 0·88 |
| லைசின் .. .. | 0·20 |
| சிஸ்டின் .. .. | 0·21 |

முந்திரிப் பருப்பில் பின்கண்ட வைட்டமின்கள் அடங்கியுள்ளதாக ஆராய்ச்சி மூலம் தெரியவருகிறது.—

வைட்டமின் பி. 1.
வைட்டமின் பி. 2.
வைட்டமின் பி. 6.
வைட்டமின் பி.பி.
பென்டோடெனிக் அமிலம்.
வைட்டமின் ஏ.
வைட்டமின் டி.
வைட்டமின் இ.

முந்திரிப் பருப்பில் உள்ள கொழுப்புச்சத்து உயிரியல்படி முழுத்தன்மை வாய்ந்தது; திறன் மிகுந்தது; வெகு எளிதில் செறிக்கப்படக் கூடியது. இதில் முக்கியமாக வைட்டமின் "ஏ", வைட்டமின் "டி", வைட்டமின் "இ" ஆகியவை உள்ளன. இவ்வைட்டமின்கள் மனித வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதவைகளாகும். இம்மூன்று வைட்டமின்களும் கொழுப்புச்சத்து உடலில் தன்மயமாவதற்கும், சுண்ணாம்புச் சத்து கிடைப்பதற்கும், வழவழப்பான தசைகள் பாதுகாக்கப்படுவதற்கும், தொற்று நோய்களின் தாக்குதலிலிருந்து உடலைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் பயன்படுகின்றன.

முந்திரிப் பருப்பில் சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ் சத்து, இரும்புச் சத்து ஆகியவைகள் [illegible] உள்ளன. இம்மூன்று சத்துக்களும் அன்றாட உணவில் இல்லாவிட்டால் 'அனிமியா' (Anaemia) நோய் ஏற்படும். இதைத் தவிர்க்க முந்திரிப் பருப்பு மிகவும் துணை புரியும். அத்துடன் இம்மூன்று சத்துக்களும் நம் உடல் நலம் பேணவும், நரம்பு மண்டலம் பாதுகாக்கப் படவும் வழி வகுக்கும்.

முந்திரிப் பருப்பில் 1 சத அளவுக்கே மாவுப் பொருள் உள்ளது. இவ்வாறு மிகவும் குறைந்த அளவு மாவுப்பொருள் உள்ளதனாலேயே முந்திரிப் பருப்பு நமது உடலைக் கொழுக்க வைக்காமல், ஒரே அளவில் சீராகவும், அழகாகவும் வைத்திருக்கிறது. இதன் காரணமாகவே வெளிநாட்டினர் முந்திரிப் பருப்பை விரும்பி உண்கின்றனர்.

உடல் நலத்திற்குத் தேவையான ஊட்டச்சத்துகள் அனைத்தையும், இன்றைய ஊட்டச் சத்து ஆராய்ச்சிக் கேற்ப, தேவையான அளவில், இயற்கையிலேயே முந்திரிப் பருப்பு பெற்றுள்ளது. நீண்ட நெடுநாள், வலிவோடும், வனப்போடும், நலமாகவும், வளமாகவும் வாழ்வதற்கு, மனித இனத்திற்குத் துணை செய்யும் நல்ல நண்பனாக முந்தி வருவது முந்திரிப் பருப்பே!



# முந்திரியில் விண்பதியம்

செடிப் பெருக்கம் செய்தால், மகசூலில் மாபெரும் வேறுபாடுகள் ஏற்படுகின்றன. ஒரே தாய் மரத்திலிருந்து கிடைத்த விதைகளிலிருந்து வளர்க்கப்பட்ட மரங்களுக்குள்ளும், மாபெரும் மகசூல் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மகசூலில் காணப்படும் வேறுபாடுகளைப் போக்கவும், தேர்ந்தெடுக்கப்பட்ட தாய் மரத்தினைப் போன்று மகசூல் அளிக்கும் தன்மையுடைய சந்ததிகளைத் தோற்றுவிக்கவும் விண்பதியம் ( Air-layering ) மூலம் முந்திரி தாவரப் பெருக்கம் செய்யப் பரிந்துரைக்கப்படுகிறது.

நடுத்தரப் பருமனும், கனமானதுமான கொட்டைகள், அதிக மகசூல் அளிக்கும் தன்மை, வீரியமாக வளரும் தன்மை, பூச்சி பூஞ்சாளங்களின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் சக்தி ஆகிய விரும்பத்தக்க ஆதாய விகிதம் மிகுந்த (பொருளாதார) குணங்களைக் கொண்ட நல்ல தாய் முந்திரி மரத்தினைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

தேர்ந்தெடுத்த தாய்மரத்தில், பென்சில் அளவு தடிப்புள்ள தண்டில், நுனியிலிருந்து 15 முதல் 25 செ.மீ. தூரத்தில் 0.3 முதல் 0.6 செ.மீ. அகலமுள்ள பட்டையை வளையம்போல் நீக்கிவிட வேண்டும். பட்டை நீக்கப்பட்டப் பகுதியில் வெட்டுப்பட்ட பட்டை வளருவதைத் தடுக்கவும், வெட்டுப்பட்ட இடம் குணமாகவும், முறுக்கிய நூலினால் சுற்றப்படுகிறது. நனைக்கப்பட்ட தேங்காய் நார்த்தூளையோ, அல்லது மரத்தூளையோ வெட்டுப்பட்ட பாகத்தின் மேல் வைத்து அதைச் சுற்றிலும் ஆல்கத்தின் துண்டுத் தாளினை (150 கேஜ்) வைத்து, ஆல்கத்தின் தாளின் முனைகளை (23 செ.மீ. நீளத்திற்கும் 15 செ.மீ. அகலத்திற்கும்) ஒன்று சேர்த்து அடியிலும் நுனியிலும் நன்கு கட்டப்படுகிறது. இவ்வாறு விண்பதியம் அமைத்தபிறகு, பதியம் போடப்பட்டுள்ள பகுதிக்கு அவ்வப்போது தண்ணீர்விட வேண்டிய அவசியமில்லை. சுமார் 20 நாட்களில் வெட்டுப்பட்ட பாகத்தின் முனை வீக்கம்போல் பெருத்துவிடுகிறது (கேலஸ்). 45 முதல் 50 நாட்களுக்குப் பிறகு இளஞ்சிவப்பு—வெண்மையான நுனியுடன் கூடிய சிறு வேர்கள், வளையம்போல் வெட்டப்பட்ட பட்டையின் மேற் பரப்பிலிருந்து கொத்துக் கொத்தாகத் தோன்றுகின்றன.

இச்சமயமே வேர்விட்ட பதியத்தை வெட்டிப் பிரிப்பதற்கு ஏற்றதாகும். 'பதியம்' என்று வழங்கப்படும் வேர்விட்ட கிளையைத் தாய் மரத்திலிருந்து ஒரே தடவையில் வெட்டிப் பிரித்துவிடக் கூடாது. அப்படிச் செய்தால் பதியத்திற்கு அதிர்ச்சி ஏற்பட்டுத் திடீரென இறந்துவிடும். ஆல்கத்தீன் தாள் கட்டப்பட்டுள்ள முடிச்சுக்குக் கீழே பருமனின் பாதி அளவுக்குச் செல்லுமாறு 'V' வடிவமாக வெட்டி எடுக்க வேண்டும். ஒரு வாரம் கழித்து முதலில் வெட்டப்பட்ட இடத்திலேயே மேலும் அதிகமாமாக வெட்டி எடுக்க வேண்டும். அடுத்த 4-வது நாளில் இறுதியாக வெட்டிப், பதியத்தை தாய்ச் செடியிலிருந்து பிரித்துவிடலாம். விண்பதியம் அமைக்க ஆரம்பித்த நாளிலிருந்து, அதைத் தாய்ச் செடியிலிருந்து பிரித்தெடுக்க ஏறத்தாழ 75 நாட்கள் ஆகக் கூடும்.

முந்திரி மரத்தில் விண் பதியம் ஏற்படுத்த மார்ச்சு, ஏப்ரல் மாதங்களே சிறந்த பருவமாகும்.



விண்பதியத்தைத் தாய் மரத்திலிருந்து பிரித்தெடுத்து, தொட்டிக்கு மாற்றும் வேலையை ஜூன், ஜூலை மாதங்களில் செய்யலாம். தாய் மரத்திலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட விண்பதியத்தின் மேல் சுற்றப்பட்டுள்ள ஆல்கத்தின் தாளை, வேர்களுக்குத் தீங்கு ஏற்படாமல் எடுத்து, செம் மண்ணும், இலைமக்கும் சம அளவில் கலந்து நிரப்பப்பட்டுள்ள மண் தொட்டிக்கு அல்லது ஆல்கத்தின்பைக்கு மிகவும் கவனமாக மாற்ற வேண்டும்.

வயலில் நடுவதற்கு முன்பு சுமார் 4 வாரங்கள் வரை விண்பதியத்தை மண் தொட்டியில் அல்லது ஆல்கத்தின் பையில் வைத்துப் பாதுகாக்க வேண்டும். தாய் முந்திரி மரத்திலிருந்து பிரித்த உடனேயே நேரடியாகவும் விண் பதியத்தை நடலாம். ஆனால் இம்முறையில் ஏராளமான கன்றுகள் இறந்து விடக்கூடும்.

விண்பதியம் சரியான முறையிலும், கவனமாகவும் ஏற்படுத்தப் படுமானால், ஒவ்வொரு 100 பதியங்களிலிருந்தும், குறைந்தது 80 வேர்விட்ட பதியங்கள் தொட்டிகள் அல்லது ஆல்கத்தின் பைகளுக்கு மாற்றுவதற்குக் கிடைக்கும். அவைகளிலிருந்து குறைந்தது 65 நல்ல பதியங்களாவது வயலில் நடுவதற்குக் கிடைக்கும்.

விண்பதியங்களை நடுவதற்கு 2 அடி நீளம், 2 அடி அகலம், 2 அடி ஆழம் உள்ள குழிகள் தோண்டுதல் சிறந்தது. விண்பதியங்களை வயலில் நடுவதற்கு ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்கள் மிகவும் ஏற்றது.

மேற்கூறிய முறையில் ஒரு விண்பதியம் தயாரிக்க 30 காசு செலவு ஆகக்கூடும். எனவே, விண்பதியங்கள் தயாரித்து, முந்திரித் தோப்பு ஏற்படுத்தி, முந்திரி மகசூலைப் பெருக்குமாறு உழவர் பெரு மக்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

முந்திரிச் சாகுபடி வரலாற்றில் சென்ற செப்டம்பர் மாதம் வரை யாரும் பெருந் தொகையைச் செலவு செய்து இரசாயன உரம் வாங்கி முந்திரி மரங்களுக்கு வைத்துள்ளதாகச் சான்று கிடையாது! ஏன்? இந்தியாவின் முந்திரிச் சாகுபடி வரலாற்றில் கூடச் சான்று இல்லை! ஆனால், அக்டோபர் மாதம் விருத்தாசலம் பக்கத்தில் உள்ள ஊத்தங்கால் மங்கலத்தில் வாழும் திரு தா. இராஜசுந்தரம் அவர்கள் முந்திரி மரங்களுக்கு உரமிடுவதற்காக ரூபாய் 2,009 செலவு செய்து இரசாயன உரம் வாங்கி வைத்துத் தமிழ் நாட்டின் முந்திரி வரலாற்றிலும், இந்தியாவின் முந்திரி வரலாற்றிலும் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியுள்ளார்.

# உரமிட்டு மருந்து தெளித்தால் உயர்ந்திடும் மகசூல்

திரு. இராஜசுந்தரம் அவர்களுக்கு முதனை என்ற கிராமத்தில் 35 ஏக்கர் முந்திரித் தோப்பு உள்ளது. அதில் உள்ள முந்திரி மரங்களுக்கு இரசாயன உரமிட 1 டன் 975 கிலோ அமோனியம் சல்பேட், 1 டன் 700 கிலோ சூப்பர் பாஸ்பேட், 400 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை வாங்கி வைத்துள்ளார்.

இதுவரை முந்திரி மரங்களுக்கு அவர் இரசாயன உரமிட்டதில்லை. ஆயினும், அவர் துணிந்து ரூபாய் 2,009-க்கு இரசாயன உரம் வாங்கி அதனை முந்திரி மரங்களுக்கு இடப்போகிறார்.

“முந்திரி மரங்களுக்கு இரசாயன உரமிடவேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?” என்று “தமிழரசு” இதழின் சார்பில் 31—10—71 அன்று பேட்டி கண்டபோது கேட்டேன்.

“முதனை கிராமத்தில் திரு ரெங்கசாமி என்பவர் முந்திரித் தோப்பில் சென்ற ஆண்டு செயல் விளக்கத்தளை ஒன்றை வேளாண்மைத் துறையினர் அமைத்திருந்தார்கள். சென்ற ஆண்டு அந்தச்செயல் விளக்கத்தளையில் ஏக்கருக்கு 3½ மூட்டை (80 கிலோ கொண்ட மூட்டை) மகசூல் கிடைத்தது. இந்தச் செயல் விளக்கத்தளை அமைப்பதற்கு முன்பு திரு ரெங்கசாமி அவர்களுக்கு ஏக்கருக்கு 2 மூட்டைதான் மகசூல் கிடைத்தது. அவருடைய செயல் விளக்கத்தளையில் இரசாயன உரமிட்டதையும், மருந்து தெளித்ததையும் நான் கவனித்து வந் [illegible] தாலும், மருந்து தெளித்ததாலும் தான் செயல் விளக்கத் தளையில் ஏக்கருக்கு 1½ மூட்டை அதிக மகசூல் கிடைத்தது என்று எனக்குத் தெளிவாகியது. அதனாலேயே என் முந்திரி மரங்களுக்கும் இரசாயன உரமிட வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது” என்றார்.

“இவ்வளவு ஆர்வத்துடன் முந்திரிக்கு இரசாயன உரமிட முன் வந்துள்ளீர்களே, உங்களால் ஏக்கருக்கு எவ்வளவு மகசூல் எடுக்க முடியும் என்று நம்புகின்றீர்கள்?” என்றேன்.

“நான் இரசாயன உரமிடுவதுடன், மருந்தும் தெளிக்கப் போகின்றேன். என்னுடைய முந்திரித் தோப்பில் 4 சால் ஊடு உழவு செய்துள்ளேன். அத்துடன் ஊடு பயிராகக் கொள்ளும் விதைத்துள்ளேன். இந்த ஊடு உழவும், ஊடு பயிரும், இரசாயன உரமிடுதல் பயிர்ப் பாதுகாப்பு முறை ஆகியவைகளுடன் சேர்ந்து முந்திரி மகசூலைப் பெருக்கும். என்னால் குறைந்தது ஏக்கருக்கு 4மூட்டை முந்திரிக் கொட்டை விளைவிக்க முடியும் என்று நம்புகின்றேன்” என்றார்.



அவர் முந்திரி மரங்களைச் சுற்றிலும், உரமிடுவதற்காக கிடங்கு வெட்டி வைத்துள்ளார். இன்னும் ஒரு வாரத்தில் உரம் வைக்கப்போகிறேன் என்றும் குறிப்பிட்டார்.

“முந்திரி பயிரிடுவதைக் காட்டிலும், மற்றப் பயிர்களைச் சாகு

''மற்றையப் பயிர்கள் சாகுபடி செய்யச் செலவும் அதிகம்; கஷ்டமும் அதிகம். முந்திரிச் சாகுபடி செய்யச் செலவும் குறைவு; அதே நேரத்தில் அதிகம் பாடுபட வேண்டிய அவசியமும் இல்லை. முந்திரிக் கொட்டைகளைப் பொறுக்கி எடுப்பதுதான் கொஞ்சம் சிரமம். காவலும் வேண்டும். மற்றபடி முந்திரி பயிரிடுவதில் எந்தத் தொல்லையும் இல்லை. தற்பொழுது என் முந்திரித் தோப்பில் சராசரியாக 2 மூட்டை முந்திரிக் கொட்டை கிடைத்து வருகிறது. மூட்டை ரூபாய் 140 விற்கிறது. எனவே, ஒரு ஏக்கர் முந்திரியின் மூலம் ரூபாய் 280 கிடைக்கும். இதில் செலவெல்லாம் போகக் குறைந்தது ரூபாய் 200

### முந்திரி மகிமை

மனித இனத்தின் இனப் பெருக்கப் பண்பை விரைவு படுத்த முந்திரிப் பருப்பு உதவுகிறது. அதாவது ஆண் பெண் இருபாலரிடையேயும் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பின்பே இனப்பெருக்கத் திறன் ஏற்படுவதை, தொடர்ந்து முந்திரிப பருப்பு உண்பதால் விரைவு படுத்த முடிகிறது. முந்திரிப்பருப்பில் அடங்கியுள்ள வைட்டமின் 'இ' தான் இதற்குக் காரணம்.

கிடைக்குமுங்க. ஆனல் மானுவாரியாக மற்றப் பயிர்ச் சாகுபடி செய்தால் இவ்வளவு சுலபமாக ரூபாய் 200 கிடைக்காதுங்களே.

அத்துடன் எந்தப் பயிரும் சாகுபடி செய்ய முடியாத நிலையிலும், ஆள் வைத்துச் சாகுபடி செய்ய முடியாத நிலையிலும் முந்திரியே இலாபம் தருகிறது!'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினர்.

''முந்திரி பற்றி வேறு ஏதாவது கூறுகின்றீர்களா?'' என்றேன்.

'' உரமிட்டு மருந்து தெளித்தால், உயர்ந்திடும் முந்திரி மகசூல் என்பதை விளக்க வேளாண்மைத் துறையினர் நடத்தும் செயல் விளக்கத்தலை மிகவும் பயனுடையது! எனவே அவர்களது பணி பாராட்டிற்குரியது!'' என்ருர்.

## 'பொய்ப்பழம்' சாப்பிட்டிருக்கியளா?



''சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?'' எனக் கேட்பது போல், முந்திரியைப் பொறுத்த வரையில் ''பொய்ப்பழம் வேண்டுமா? உண்மைப்பழம் வேண்டுமா?'' எனக் கேட்க முடியும்! வியப்பாக உள்ளதா? விளங்கவில்லையா? விளக்கம் இதோ!

தாவர இயலின்படி முந்திரிக் கொட்டையே உண்மையான பழமாகும் (True fruit). ஆனல் முந்திரிப் பழம் எனத் தற்பொழுது கூறப்பட்டு வரும் பழம், உண்மையிலேயே பழமல்ல; அது உண்மையான பழமான முந்திரிக் கொட்டையின் காம்புதான்; ஆனல், பருத்துப் பழத்தைப் போல் காணப்படுகிறது.

பருத்துக் காணப்படும் காம்புதான் (Swollen peduncle) பழமாகப் பயன்படுவதால், தாவர இயல் வல்லுநர்கள் முந்திரிப் பழத்தைப் '' பொய்ப் பழம் '' (False fruit) எனக் கூறுகின்ருர்கள். இதற்கு '' முந்திரி ஆப்பிள் '' (Cashew apple) என்றும் பெயர் வழங்கப் படுகிறது. இப்பழம் உண்மையான பழத்தைத் (முந்திரிக் கொட்டை) தாங்கும் பீடமாக (Receptacle) அமைந்துள்ளது.

பொய்ப்பழமான முந்திரிப் பழத்தில் வைட்டமின் 'சி' நிறைந் துள்ளது. அத்துடன் சர்க்கரையும். உலோகச் சத்துகளும் உள்ளன. இந்தியாவில் ஆண்டு தோறும் 3,00,000 டன் முந்திரிப் பழம் உற்பத்தியாகிறது. ஆனல் அவற்றில் பெரும் பகுதி, பயன்படுத்தப் படாமல், வீணாக்கப்படுகிறது. முந்திரிப் பழத்திலிருந்து காடி, பழக்கூழ், பழச்சாறு, ஊறுகாய், சர்பத் முதலியன தயாரிக்கலாம். கோவாவில் ''ஃபெனி'' (Feni) என்ற ஒருவகை மதுபானம் செய்யவும் முந்திரிப் பழம் பயன்படுத்தப்படுகிறது.



கோடி ரூபாய் குவிந்தது!
பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு!
ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் இப்புனிதப் பணிக்கு அன்புள்ளங் கொண்டோர்
ஐந்தே திங்களில்
அள்ளிக் கொடுத்த தொகை இது!
தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு இல்லம்
பரனூரில்...
தொடர்ந்து...
பருகூர்
உளுந்தூர்ப்பேட்டை
புதுக்கோட்டை
இராமநாதபுரம்
திருவண்ணாமலை
ஆகிய இடங்களில்...
விரைவில் உருவாகும்!
ஒரு கால கட்டத்துக்குள்
இப்பணிகள் ஈடேற -
இரந்து வாழ்வோர்
இல்லாத நிலையை உருவாக்க...
அள்ளித் தருவோம் பெரு நிதியை!
பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி...

# காராதேன்® நீரில் கலங்கும் பொடி செம்பேன்களை அழிக்கிறது, தூள் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த வல்லது.

முன்று விவசாயப் பல்கலைக் கழகங்களின் பண்ணைப் பரிசோதனைகள், சர்வதேச ஆராய்ச்சியின் நிருபணங்களை ஆதரித்து காராதேன் ஒரு பூஞ்சண நாசினி, தூள் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்தவல்ல பூஞ்சண நாசினிகளில் பலவற்றுள் உயர்ந்தது என்றும், காய்கறிப் பயிர், புகையிலை, சீரகப்பயிர், கோதுமை, பட்டாணி, திராட்சை, பருத்தி, மா, ஆப்பிள் மற்றும் பல புஷ்பச் செடிகளில் தோன்றும் செம்பேன்களைக் கட்டுப்படுத்துவதிலும் சிறந்தது என்று உறுதி கூறியுள்ளது.

முப்புரவாக நோய்களைக் கட்டுப்படுத்த பயிர்நோய், பயிர்களில் பரவும் முன்பே மருந்து பிரயோகத்தைத் தொடங்கவும்.

**இண்டோபில் கெமிகல்ஸ் லிமிடெட், பம்பாய்-25.**

® காராதேன் மற்றும் ஃப்ளாஸ்க் சின்னம் ரோம் அண்ட் ஹாஸ் கம்பெனி, ஃபிலடெல் ஃபியா, பா., அவர்களின் ட்ரேட் மார்க்குகள். யூ. எஸ். பேட்டண்ட் ஆபீஸிலும் இதர நாடுகளிலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.




**இண்டோபில் கெமிகல்ஸ்—பசுமை நிறைந்த வருங்காலத்திற்கு**



# செலவைக் குறைக்கும் உழவுக் கருவி - 2

"தமிழ்நாட்டில் அறிவுக்கும், திறமைக்கும் பஞ்சமில்லை. ஆனால், நிதிக்குத்தான் பஞ்சம். எந்தத் திட்டமானாலும் அதைச் சிறப்புற ஆற்றிக் கொடுக்கும் அலுவலர்கள் இங்கே இருக்கின்றார்கள்!'' என அன்றொரு நாள் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதை மெய்ப்பித்துக் காட்டியுள்ளனர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் ஆராய்ச்சிப் பிரிவில் பணியாற்றும் அலுவலர்கள்.

ஆமாம்! அவர்கள் புதிதாகக் கண்டு பிடித்துள்ள நெல்லடிக்கும் பொறி தமிழ்நாட்டில் அறிவுக்கும், திறமைக்கும் பஞ்சமில்லை என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

''ஜப்பானிய நெல்லடிக்கும் பொறியைவிடவா இப்புதியநெல்லடிக்கும் பொறி உயர்ந்தது?'' என்று ஒரு சிலர் கேட்கலாம்.

ஜப்பானியநெல்லடிக்கும்பொறியைவிட, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் வேளாண்மைப் பொறியியல் ஆராய்ச்சிப் பிரிவினர் கண்டுபிடித்துள்ள புதிய நெல்லடிக்கும் பொறி சிறந்தது மட்டுமல்ல, சிக்கனமானதும் கூட ! 'எப்படி?' எனவினா எழுப்புவோர்க்கு இதோ விளக்கம்!

ஜப்பானியக் கதிரடிக்கும் பொறியைக் கொண்டு நெல் அடிக்கலாம். ஆனால் அப்பொறியில்நெற்கதிர்களை மட்டுமே சுழலும் பாகத்தில் கொடுத்து நெல் மணிகள் பிரிக்கப்படுகின்றன. மணிகள் பிரிக்கப்பட்ட பின்பு தாள்களைப் பரப்பி மாடு கட்டிப் போரடிப்பதால் கிடைக்கும் வைக்கோலை மாடுகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்த முடியும். மாடுகட்டிப் போரடிக்கா விட்டால் தாள்கள் விறைப்பாகவே இருக்கும். அவைகளை மாடுகள் விரும்பி உண்ணுவதில்லை. தமிழ்நாட்டு மாடுகளுக்கு வைக்கோலே முக்கிய உணவாக இருப்பதால், ஜப்பானிய நெற்கதிரடிக்கும் பொறியைக் கொண்டு நெல் மணிகளைப் பிரித்த பின்பு, மாடுகட்டிப் போரடிக்க வேண்டியது அவசியமாகிறது. ஆனால் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக வேளாண்மைப் பொறியியல் ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப் பட்டுள்ள இப்புதிய பொறி நெல்மணிகளைப் பிரித்தல், தாள்களை நசுக்கி வைக்கோலாக்குதல் ஆகிய இரண்டு பணிகளையும் ஒருங்கே செய்து விடுகிறது. அறுவடை செய்யப்பட்ட நெல்தாள்களை அப்படியே இப்பொறியில் கொடுத்து நெல் மணிகள், பதர், வைக்கோல் ஆகியவைகளைத் தனித்தனியே பிரிக்கலாம். நெல்மணிகளைத் தூற்றும் பணியினையும் இப்பொறி திறம்படச் செய்கிறது. இப்பொறியிலிருந்து வெளியே வரும் வைக்கோலை மீண்டும் மாட்டுக் காலடியில் போட்டு மிதிக்கத் தேவையில்லை. வைக்கோல் நன்றாக நசுக்கப்பட்டு, கசங்கியே வெளியேற்றப்படுவதால், மாடுகள் விரும்பி உண்ணும்.

## நெல்லடிக்கும் பொறி

தற்பொழுது நெல் அடிப்பதில் பின்கண்ட சிரமங்களை உழவர் பெருமக்கள் அனுபவித்து வருகின்றனர்.

1. ஆடுதுறை-27, ஐ.ஆர். 8, ஐ.ஆர். 5, கருணா, காஞ்சி, காவேரி, பெண்ணை, ஐ.ஆர். 20, ஐ.ஆர். 22 ஆகிய உயர் விளைச்சல் தரும் நெல்வகைகளின் நெற் கதிர்களிலிருந்து நெல் மணிகள் எளிதில் தாமாக உதிர்வதில்லை. சாதாரண நெல் வகைகளைப் போன்று அடித்தாலும் மணிகள் எளிதில் பிரியா.

2. குறிப்பாகக் குறுவை நெல் அடிக்கும்பொழுதும், முன்சம்பா நெல் அடிக்கும் பொழுதும் அடை மழை பெய்வதால், நெல்லடிப்பது, மாடுகளைக் கொண்டு போரடிப்பது, தூற்றுவது ஆகிய பணிகளைச் செய்ய முடிவதில்லை.

3. நெல்லடிக்கும் சமயத்தில் ஆள் பற்றாக்குறை ஏற்படுவதால், நெல்லடிக்கும் பணியைக் காலத்தில் செய்ய முடியாமல், காலங்கடந்தே மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு காலங் கடத்தினால், நெல்மணிகள் பலவிதச் சேதத்திற்கு உள்ளாகின்றன. அறுவடை செய்யப்பட்ட உடனேயே அடிக்க வேண்டுமென்றால், ஆள் பற்றாக்குறையின் காரணமாக, அதிகக் கூலி கொடுத்தே நெல்லடிக்க வேண்டியுள்ளது.

இச்சிரமங்களையும், சேதத்தையும், அதிகச் செலவையும் தவிர்க்கப் புதிதாதக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள நெல்லடிக்கும் பொறி பெரிதும் துணை செய்கிறது.

இப்புதிய பொறி, ரம்பம் போன்ற பற்கள் கொண்ட சுழ

வைக்கோலை வெளியே கொண்டுவரும் பகுதி (conveyor) ஆகிய 3 பகுதிகளைக் கொண்டது. அறுவடை செய்யப்பட்ட தாள்கள் அப்படியே இப்பொறியில் செலுத்தப் படுகின்றன. அப்பொழுது சுழலும் பாகத்தி



லுள்ள ரம்பம் போன்ற பற்கள் கொண்ட உருளைகளின் இடையில் நெற்கதிர்கள் நசுக்கப்பட்டு நெல்மணிகள் தனியே பிரிக்கப்படுகின்றன. பிரிக்கப்பட்ட நெல் மணிகள் சல்லடை வழியே வெளியே வரும்போது, தூற்றும் பகுதியினல் பதர் நீக்கப்பட்டுத் தூய்மைப்படுத்தப்படுகின்றன.

சுழலும் பகுதி 3 அல்லது 5 குதிரைத் திறன் (H.P.) கொண்ட மின்சார மோட்டாரால் இயங்குகிறது. இப்பகுதியில் ஏறக்குறைய எல்லா நெல் மணிகளும் நெற்கதிரிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு விடுகின்றன.

நெல்மணிகள் பிரிக்கப்பட்ட பிறகு வைக்கோல், வெளியே கொண்டுவரும் பகுதிக்கு வருகிறது. இப்பகுதி சிறு மரப் பலகைகளாலும், தோல்பட்டை (பெல்ட்) யினலும் ஆனது. மரப் பலகைகள் இரண்டு அங்குல இடைவெளியில் தோல் பட்டையினல் ஒன்ருேடொன்று இணைக்கப்பட்டுள்ளன. சுற்றும் தோல் பட்டையின் மீது வைக்கோல், செல்லும்போது வைக்கோலில் சிக்கியுள்ள நெல்மணிகள் மரப் பலகைகளுக்கு இடையில் இருக்கும் இடைவெளிகளின் வழியாகக் கீழே விழுந்துவிடுகின்றன. பிறகு வைக்கோல் தோல்பட்டை சுழலும் வேகத்தினல் தூக்கியெறியப்படுகிறது.

இவ்வாறு இப்புதிய பொறி நெற்கதிர்களிலிருந்து மணிகளைப் பிரித்து, தூற்றிக்கொடுப்பதுடன், வைக்கோலையும் தனியே பிரித்துக் கொடுக்கிறது.

ஒருமணி நேரத்தில் இப்பொறி 2,500 கிலோ நெல்லைப் பிரித்துக் கொடுக்கும். இதன் விலை (மின்சார மோட்டாரின் விலை சேர்க்கப்படாமல்) ரூபாய் 1,500 ஆகும். இது, நெல்லடிக்கும் மற்றப் பொறிகளைவிட விலை மலிவானது. எனவே, இதை வாங்கிப் பயன்படுத்தினல் உழவர் பெருமக்கள் நலம் பெறுவது திண்ணம்.


# காலக் கண்ணடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள்.
அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன.
நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.
மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ!

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB
உயர் ரகத்தைக் குறிக்கும்
வாட்டர் மார்க்



SOL/SPB 777 TMA

# தமிழகக் கடற்கரையின் கருமணல் — அணு சக்திக்கான அரிய கனிப்பொருள்!



கேரள நாட்டு ஆல்வாயில் 1952 டிசம்பரில் ஏற்படுத்தப்பட்டகனிப் பொருள் திட்டம், இப்பொழுது பிஃலோரைட் தேவை சம்பந்தமாக உலகத் தேவையில் மூன்றில் ஒரு பங்கைப் பூர்த்தி செய்கிறது. இது இந்தியாவிற்கு அந்நியச் செலாவணி சம்பாதித்து அளிப்பதோடு நாட்டின் தேவைக்கான டிரிசோடியம் பாஸ்பேட் முழுமையாகக் கிடைக்கச் செய்கிறது.

அணுசக்திக் கமிஷன் 1948-ல் அமைக்கப்பட்டது. அந்தக் கமிஷன் இந்தியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தை அமைத்தது. அது மோனஜைட்டை ஆராய்ந்து தோரியம், யுரேனியம், அரிய கனிப் பொருள் ஆகியவற்றைப் பிரித்தெடுக்கும். இதில், இரண்டு நிறுவனங்கள் உள்ளன. அரிய கனிப் பொருள் பிரிவு, ஆல்வாயைக் களமாகக் கொண்டும் இயங்கும். தவிர, டிராம்பேயில், மைய அரசுக்காகத் தோரியம் சம்பந்தமான நிறுவனத்தையும் நடத்தும். இதில் ஆராய்ச்சிப் பிரிவும் இணைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் 1948-ஆம் ஆண்டில் பிரஞ்சு நிறுவனம் ஒன்றுடன் தொடர்பு கொண்டு இங்கே இயந்திர அமைப்புக்கான வேலை துவங்கியது. டிசம்பர் 1952-ல் காலஞ்சென்ற ஜவாஹர்லால் நேரு இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அன்று முதல் உற்பத்தி ஆரம்பமாகியது.

அரிய கனிப் பொருளான க்ளோரைட், பார்வைக் கண்ணாடிகளுக்கு மெருகிடவும், உலோகங்களைப் பதப்படுத்தவும், உலோகக் கலப்புகளுக்கும் பயன்படுகிறது. உலகத் தேவையின் மூன்றில் ஒரு பங்கை இந்தத் திட்டம் நிறைவு செய்யும்.

இதே திட்டம் செரியம் ஆக்ஸைட், செரியம் பிஃலோரைட், லேந்தனம் நைட்ரேட் போன்றவற்றையும் தயாரிக்கின்றது. இங்கே தயாராகும் அரிய கனிப் பொருள்களைப் பக்குவமாகச் சேர்த்து வைக்க அவசியமான பீப்பாய்களையும் தயாரிக்கிருர்கள்.

## உலோகப் பொருட்கள் சேமிப்பு

இத்தொழிற்சாலைக்கான கச்சாப் பொருள் தமிழக, கேரள நாட்டுக் கடற்கரையில் காணப்படும் கருப்பு மணலேயாகும். இம்மணல், நாட்டின் உலோகப் பொருளைப்போல் வளமிக்கது. இந்த மணல் உலகத்திலேயே வளமிக்க மணலாகும். காயங்குளத்தின் நீண்டகரை கேரளத்தில் உள்ளது. இது இரண்டு மைல் அளவிற்குப் பரவித் தமிழ் நாட்டைச் சேர்ந்த மணவாளக் குறிச்சிவரை எட்டியுள்ளது. இதில் இல்மனைட், ஜிர்கான், ருடைல், மோனேஜைட், சிலிமனைட், கார்னெட் போன்றவை அடங்கியுள்ளன.

## மணவாளக்குறிச்சியில்

இந்திய அரிய கனிப்பொருள் நிறுவனம் மணவாளக் குறிச்சியிலும் ஓர் இயந்திரச் சாலையை நடத்துகிறது. இதில் ஆண்டு தோறும் 50,60,000 டன் இல்மனைட், 3,300 டன் மோனேஜெட், 1,500 டன் ருடைல், 5,700 டன் ஜிர்கான், கார்னெட் 1,200 டன், லிமனைட் 300 டன், 350 டன் லியூகாக்சீன் (..........னைட்) உற்பத்தியாகின்றன.

சாவராவில் உள்ள தொழிற்சாலையில் 1,00,000 டன் இல்மனைட், 5,850 டன் ருடைல், 7,000 டன் ஜிர்கான், 585 டன் மோனேஜெட், 4,000 டன் சிலிமனைட் ஆண்டுதோறும் தயாரிக்கப் படுகின்றன.

## தோரியம் தொழிற்சாலை

ஆல்வாயில் உற்பத்தியாகும் மட்ட ரக தோரியம் ஹைட்ராக்ஸைடைப் பயன்படுத்த டிராம்பேயில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது 1955 முதல் உற்பத்தியில் இறங்கியுள்ளது.

ஆல்வாய் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் தோரியம், ஹைட்ரோக்ளோரிக் அமிலத்தில் கரையக்கூடியது. சுத்தமான தோரியம் சல்பேட் ஹைட்ராக்ஸைடாகச் சுருங்கி, நீரில் கரையக் கூடிய அசுத்தங்களை அகற்றி விடுகின்றன. சுத்தப்படுத்தப்பட்ட ஹைட்ராக்ஸைட் மிகச் சுத்தமான நைட்ரிக் அமிலத்தில் கரையக்கூடியது. பிறகு முறையாகக்கெட்டிப்படுத்தப்பட்டுப் பீப்பாய்களில் அடைக்கப்பட்டுப் பிறகு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

தோரியத்தையும் யுரேனியத்தையும் பூரணமாகப் பெற ஆதார திரவமாகிய தோரியம் சல்பேட், ஹைட்ரோ குளோரிக் அமிலத்தினுல் பதப்படுத்தப்படுகிறது. தோரியம், அரிய கனிப் பொருள் ஹைட்ராக்ஸைடாகவும் யுரேனியம் பிலோரைடாகவும் மாறிய பிறகு மறுபடியும் பதப்படுத்தப்படுகிறது.




நாளையத் தலைமுறைகளான இன்றையப் பிள்ளைகளுக்குச் சாலை விதிமுறைகளைக் கற்றுத் தருவோமானால், நாளை விபத்துக்கள் ஓரளவு குறையும் அளவுக்கு நாம் வழி செய்தவர்களாவோம்.

படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், ஏழை, பணக்காரர் இப்படி எல்லாத் திறத்தாரும் விபத்தென்னும் கோரப் பிடியில் சிக்கிச் சீரழிகின்றனரே; இந்த அவல நிலைக்கெல்லாம் காரணம் என்ன?

'நில், கவனி, புறப்படு' என்ற திருவாசகங்களைக் கடைப் பிடிக்காததே காரணம் என்றால் அது முற்றிலும் உண்மை. எல்லாருடைய நன்மைக்காகவும் ஏற்பட்டதே சாலை விதிமுறைகள். பலர் வேலைக்காக ஏதோ படித்துவிட்டு, விதி முறைகளைக் கடைப்பிடிக்காதகாரணத்தாலும், அவற்றைத் தெரிந்திருந்தும், தெரியாதவர்கள் போல நடந்து கொள்வதாலும் விபத்து என்னும் படுகுழியில் வீழ்ந்து அவர்கள் பலியாகிறார்கள். சாலை விதியே தெரியாதவர்கள், ஏதோ அனுபவ வாயிலாகக் கொஞ்சம் அறிந்தவர்கள் கூடச் சாலைகளில் 'கன்னாபின்னா' வென்று நடப்பதை நாம் பார்க்கிறோம்.

அண்மையில் ஒரு செய்தி வெளிவந்திருந்தது.

பட்டப் படிப்புப் படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவர் ஓடும் பஸ்ஸில் ஏறியபோது, கீழே விழுந்து இறந்தாராம். இப்படி 1970-ல், ஓடும் பேருந்தில் ஏறிக் கீழே விழுந்து இறந்தவர்கள் பதினோரு பேராம்; நடப்பு ஆண்டிலோ பத்துப் பேர். ஆகவே, 'ஓடும் பேருந்தில் ஏறாதீர்கள்' என்று எச்சரிக்கிறார் காவல்துறை ஆணையாளர்.

இன்று சுமார் 150 பேர் வரை சாலை விபத்துக்களில் உயிரிழந்திருக்கிறார்களென்றால், இது அவர்கள் தலைவிதியாலா? அல்லது ஆயுள் முடிந்துவிட்டது என்பதாலா? இதெல்லாம் வெறும் மூடநம்பிக்கை. 'நில், கவனி, புறப்படு' என்னும் மந்திரத்தை மனத்தில் கொள்ளாததே அதற்குச் சரியான, உண்மையான காரணம்.

இதனை முற்றிலும் உணர்ந்த ஓர் உயர்நிலைப்பள்ளி—சென்னை மாநகரின் மையமாம் அண்ணா சாலையிலுள்ள கிறித்தவ சர்ச் உயர்நிலைப்பள்ளி ( Christ church high school ) சாலை விதி முறைகளை மாணவர்களுக்குக் கற்றுத் தருகிறது; அத்தோடு நின்றுவிடவில்லை. அவர்களையே போக்குவரத்துள்ள இடங்களுக்கு அனுப்பி, போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பணிகளில் ஈடுபடவும் செய்கிறது.

காலை 8 மணியிலிருந்து 8-45 வரையிலும், பிற்பகல் 3 மணியிலிருந்து 4-30 வரையிலும், இந்தப் பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகள், அண்ணா சாலையில் மட்டும் இத்தகு பயனுள்ள பணிகளில் ஈடுபடுகின்றனர். இந்த அருமையான காட்சியை நாம் நாள்தோறும் பார்க்கிறோம். போக்குவரத்துப் போலீசாரின் உதவியோடு இந்த மாணவர்கள், அதுவும் போக்குவரத்து மிகுதியுள்ள இடங்களில் கடமையாற்றுகின்றனரென்றால் அவர்களின் ஆர்வத்தை, அக்கறையை என்னென்று சொல்வது!

பள்ளிப் பருவத்திலேயே இப்படி ஒரு நல்ல பழக்கத்தை ஊட்டி வளர்த்து வரும் இந்தக் கிறித்தவ சர்ச் உயர்நிலைப் பள்ளியின் வயது என்ன தெரியுமா? 130 ஆண்டுகள். பழைமையான இப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் பயனுள்ள இந்தப் பணிகளில் எப்படி ஈடுபடுகின்றனர்? அது ஒரு சுவையான கதை!

''மாணவர்கள் வெறும் ஏட்டுக் கல்வியால் மட்டும் பயனடைய முடியாது. அனுபவ வாயிலாக அவர்கள் பல செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அப்போது தான் அவர்கள் தாம் கற்ற கல்வியில் முழுமை அடைகிறார்கள். இந்த வகையில்தான் எங்கள் பள்ளி மாணவ, மாணவிகளை நாங்கள் தயார் செய்கிறோம். சமூகத் தொண்டில் ஈடுபடுவது போன்றதே இப்பணியும். மாணவர்கள் தனித்து வாழாமல் ஒருவரோடு ஒருவர் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். போலீசாருக்கும் மாணவர்க்கும், பொதுமக்களுக்கும் தொடர்பும், ஒத்துழைப்பும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் எழுந்ததுதான், மாணவர்கள் போக்குவரத்துக் கண்காணிப்புக் குழு'' என்கிறார் இப்பள்ளியின் முதல்வர் திரு டேவிட் சாமுவேல். இவர் இதே பள்ளியில் 15 ஆண்டுகள் ஆசிரியராகவும், 12 ஆண்டுகளாக முதல்வராகவும் இருந்து வருகிறார்.

1966 ஏப்ரலிலிருந்து இந்தப் பள்ளி மாணவர்கள், சாலைப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இப்போது மொத்தம் 120 மாணவ, மாணவிகள் இந்தப் பணியைச் செய்து வருகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் ஐம்பது பேருக்குச் சாலைப் போக்குவரத்து விதிமுறைகளைக் கற்றுக் கொடுத்துத் தயார் செய்கிறார்கள்.

திங்கள் முதல் வெள்ளிவரை, காலையிலும் மாலையிலும் இந்த மாணவ, மாணவிகள் தங்கள் பணியினை அனைவரும் பாராட்டும் வகையில் செய்து வருகிறார்கள். ஒரு வாரத்தில் ஒரு மாணவருக்கு ஒருநாள் மட்டுமே இந்தப் பணி வருமாறு, பல பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். இதனால் மாணவர்கள் உற்சாகமாக இதனைச் செய்ய முன் வருகின்றனர்.

''பள்ளியில் எல்லாப் பாடங்களையும் போல, வாரத்துக்கு ஒரு முறை சாலைப் போக்குவரத்து விதிமுறைகள் பற்றி ஒரு பாடத்தையும் நடத்தலாம். இதனால் பெரும்பயன் விளையும். எங்கள் பள்ளியைப் போலவே மற்றப் பள்ளிகளும் இந்தத் தொண்டில் மாணவர்களை ஈடுபடுத்தலாம்'' என்று தம் கருத்தினைத் தெரிவிக்கும் பள்ளியின் முதல்வருக்கு இந்த யோசனை எப்படித் தோன்றியது?

பள்ளி முதல்வர் திரு டேவிட் சாமுவேல் அவர்களே இதைப் பற்றிச் சொல்கிறார்:

''நானும், முன்னாள் காவல் துறை ஆணையாளர் திரு சிங்காரவேலுவும் ஒன்றாகப் படித்தவர்கள். ஒரு சமயம் திரு சிங்காரவேலுவிடம் நான் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது எங்கள் பள்ளி பற்றியும் பேச்சு வந்தது. அப்போது அவர் சொன்னார்: 'புது தில்லியிலும், பம்பாயிலும் மாணவர்கள் சாலைப்போக்கு வரத்து ஒழுங்குக் கட்டுப்பாட்டுப் பணியைக் காவல்துறை ஒத்துழைப்போடு செய்கிறார்கள். சென்னையிலும் அதைப்போலச் செய்தால் மிக்கப் பயனுள்ளதாக இருக்கும்; ஏன் நீங்களே அதைச் செய்ய முயற்சிக்கலாமே!' என்றார்.

''எனக்கு ஒரே மகிழ்ச்சி. போக்குவரத்துச் சாதனங்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வரும் இவ்வேளையில், குறிப்பாகத் துள்ளித் திரியும் மாணவர்கள் சாலை விதிமுறைகளைத் தெரிந்திருக்க வேண்டியது மிக மிக அவசியம் என்பதை உணர்ந்தேன். உடனே அவரிடம், உங்கள் உதவி இருந்தால் நாளையே இதனைத் தொடங்குகிறேன் என்றேன், உற்சாகமாக. அவரும் அதற்கு ஆவன செய்வதாக வாக்களித்தார்!

அதன் விளைவு?

அடுத்த நாளே ஒரு துணை ஆணையாளர் இந்தப் பள்ளிக்கு வந்தார். முதல்வரிடம் கலந்தாலோசித்துக் காவல்துறைப் போக்குவரத்துத் துணை ஆணையாளர் அலுவலகத்திலிருந்து ஒருவரை இப்பள்ளிக்கு அனுப்பிச் சாலை விதிகளைப் பற்றி மாணவ, மாணவிகளுக்குக் கற்றுத்தர ஏற்பாடு செய்தார். அன்றுமுதல் இன்றுவரை இப்பள்ளி மாணவர்கள், தம் படிப்புப் போக மற்ற நேரங்களில் இப்பணியைச் செவ்வனே செய்து வருகின்றனர். இப்போதுங்கூட ஆண்டுக்கொரு முறை, காவல் துறையிலிருந்து ஒருவர் வந்து மாணவர்களுக்குப் போக்குவரத்துச் சம்பந்தமான விதிமுறைகளை விளக்கிச் சொல்கிறார்.''



காவல்துறை சம்பந்தப்பட்ட விழாக்களுக்கு வருமாறுஇப்பள்ளி மாணவர்கள் அழைக்கப்படுவதை இங்குக் குறிப்பிட வேண்டும். காவல்துறைக் குறிப்பேட்டிலும்கூட இம்மாணவர்களைப் பற்றி நல்ல கருத்துக் கூறப்பட்டுள்ளது; மாணவர்கள் சிறந்த முறையில் இப்பணியைச் செய்து வருகின்றனர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மக்கள் நடமாட்டம் மிகுதியுள்ள அண்ணாசாலையில் மாணவர்கள், அதுவும் மாணவிகள் இப்பணியைச் செய்வது எளிதான செயலல்ல. தில்லியிலும், பம்பாயிலும் மாணவர்கள், சாலையில் குறுக்கே செல்பவர்களுக்கு மட்டுமே வழி காட்டுகின்றனர். ஆனால், இப்பள்ளி மாணவர்களோ அதற்கும் ஒருபடி அதிகமாகச் சென்று, அதாவது அண்ணா சாலையின் நாற்சந்திக்கும் மத்தியில் நின்று, மிகத் திறமையாக ஊர்திகளுக்கு வழி காட்டுகின்றனர். அறிஞர் அண்ணா சிலையின் பக்கம் இந்தக் காட்சியை நாம் நாள்தோறும் கண்டு களிக்கலாம்.

தமிழ்நாட்டிலேயே இந்தப் பள்ளி ஒன்றுதான் இத் துறையில் ஈடுபாடு கொண்டு செயல்படுகிறது. ஆனால், 'நாற் சந்தியில் நின்று' போக்குவரத்தை ஒழுங்கு படுத்துவது, இந்தியாவிலேயே, இந்தப் பள்ளி மாணவர்கள்தான் என்று அறியும்போது நமக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது.

இதைவிடப் பெருமைப்படுகிறார், இந்தப் பள்ளியில் பத்தாவது படிக்கும் மாணவி டி. பத்மினி. அவர் தம் அனுபவத்தை இங்கே கூறுகிறார்:

''போக்குவரத்து நெரிசலான அண்ணா சாலையில் நின்று, சாலை விதிமுறைகளைக் காட்டியபோது, முதலில் கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது. போலீசாரின் உதவியால் நான் படிப்படியாகக் கற்றுக்கொண்டேன். இப்போது மிக எளிதாக இதனைச் செய்கிறேன். இந்தப் பணியைச் செய்வதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது''.

பத்தாவது படிக்கும் மாணவர் கே. பால்ஜெயகர் என்ன சொல்கிறார்?

''அண்ணா சிலையின் பக்கம் நாற்சந்தி கூடுமிடத்தில் நான் பணியாற்றியிருக்கிறேன். என்னைப் போல ஒவ்வொரு பள்ளி மாணவரும், மாணவியரும் இது போன்ற பணிகளில் ஈடுபடுவது நாட்டுக்கும் நமக்கும் நல்லது. ஒவ்வொருவரும் சாலை விதிகளைத் தெரிந்து கொண்டு, அதன்படி நடந்து வந்தால், நாளை விபத்தே இல்லை என்ற நிலையை உருவாக்கலாம்''.

பாடுபட்டுத் தேடிப் பணிபல புரியும் மக்கள், சாலை விபத்தென்னும் அகால மரணத்தால் ஆட்கொள்ளப்படுவதேன்? படித்துப் பட்டம் பெற்று, நாளைய உலகின் நாயகர்களாக விளங்கவேண்டியவர்கள் ஒரே நொடியில் விபத்தென்னும் மடியில் வீழ்வதேன்? துள்ளியோடும் பள்ளிப் பிள்ளைகள் வீடு திரும்பும்போது, விபத்தில் சிக்கிச் சீரழிவதேன்?

எல்லாவற்றுக்கும் ஒரே பதில்:

நில்! கவனி!! புறப்படு!!!


நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
''கோபுரம்'' மார்க்
மைதா, சூஜி
மற்றும்
''கப்பல்'' மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath



தங்கபஸ்பம் சிட்டுக்குருவி லேகியம்



DR. S. K.

கலந்து சாப்பிடுங்கள். அதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கைப் பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள், முதலியவற்றைக் குணப்படுத்திப் புதிய சக்தி, புத்துணர்ச்சிதந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00 பாதியளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்.

டாக்டர் S. காளிமுத்து, R.M.P. (IND.), V.V.S., A.M.I.H.
பழனி சித்தர் வைத்தியசாலை (REGD.) பழனி. S.I.
போன்: 16
தந்தி: சித்தர்

சென்னை கிளை ஆபீஸ்;
41, நைனியப்பன் தெரு, G.T., சென்னை-1
போன்; 21448



# பத்து மலைகடந்து பறித்துவந்த அதிசயப் பூ!

ப. தேவகுரு

தாய் உள்ளத்திலே ஊற்றெடுக்கும் கவிதை இன்பம், இயல்பான பண் வடிவம் பெறும்போது தாலாட்டுப் பிறக்கின்றது. அது அன்றும் இன்றும் என்றும் உள்ள இயற்கை இசை. குழந்தை அழுகையும் அதை ஆற்றத்துடிக்கும் தாய்உள்ளமும் இருக்கும் வரை தாலாட்டும் இருக்கும்.

ஒரு தாய் தன் குழந்தைக்கு நீராட்டித், தலைசீவிப், பொட்டிட்டு அமுதூட்டித் தூங்காத கண்ணுக்குத் துரும்பு கொண்டு மையெழுதித், தொட்டிலிலே போட்டு உறங்க வைக்கிறாள். அந்தச் செஞ்சொற்களில் தான் எத்துணைச் சுவை!

கண்ணே கருமணியே
கற்கண்டே கனிரசமே
பொன்னே புதுமலரே
பொற்சரமே பூச்செண்டே
முத்தே பவளமே
முக்கனியே சர்க்கரையே
முத்திரைப் பசும்பொன்னே
முழுநிலவே கண்வளராய்!

தான் பெற்றெடுத்த செல்வத்துக்குக் கண்ணிலிருந்து விண்ணிலவு வரை எத்தனை உவமைகளைக் காட்டுகிறது அந்த உள்ளம்.

மேலும் அந்தத் தாய் பாடுகிறாள் :

பத்து மலைகடந்து
பறித்துவந்த அதிசயப்பூ
கொத்து மருக்கொழுந்தே
கோமளமே கண்வளராய்!

உடல் நோக நோக ஐயிரு திங்கள் சுமந்துபெற்றதைப்பத்து மலைகள் கடந்துவந்ததாகக் குறிப்பிடுவதில் எத்தகைய கவிதை நயம் !

நூற்றுக்கல முத்திலே
தூற்றியெடுத்த முத்தே
மாற்றுயர்ந்த பொன்னே—இந்த
மண்டலத்து அதிபதியே!

சதுரகிரி மலையேறிச்
சாதிலிங்கக் கட்டைவெட்டிப்
புதிதாக ஆசாரி
பார்த்துச் செய்திட்ட
சித்திரப்பூந் தொட்டிலிலே
சிங்காரப் பட்டுடுத்தி
நித்திரைசெய் நித்திரைசெய்
நித்திலமே நித்திரைசெய்!

பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவது போலத், தன் குழந்தை படுத்திருக்கும் தொட்டிலும் உயர்த்தப் படுகிறது. மேலும் அந்தச் செல்வன் தனக்குச் சேர்த்த சிறப்புகளையும் தாயுள்ளம் கணக்கிடுகிறது.

வாடிய நாளெல்லாம்
வருந்தித் தவமிருந்து
தேடிய நாள்தன்னில்
செல்வமாய் வந்தகண்ணே
மலடி மலடிஎன்று
வையகத்தார் ஏசாமல்
மலடி என்றசொல்லை
மாற்றப் பிறந்தவனே!

குழந்தை தூங்கவில்லை ; எனவே பாட்டும் நிற்கவில்லை.

யாரடித்து அழுகின்றாய்
அழுதகண்ணில் நீர்ததும்ப !
பேரை உரைத்தக்கால்
பெருவிலங்கு பூட்டிடுவேன்!
தாத்தா அடித்தாரோ
தாலாட்டும் கையாலே!
பாட்டி அடித்தாளோ
பாலூட்டும் கையாலே!
அத்தை அடித்தாளோ
அமுதூட்டும் கையாலே!
மாமி அடித்தாளோ
மல்லிகைப்பூச் செண்டாலே !

துறைமுகத்து வியாபாரி
துரைமார்கள் உங்களம்மான்
திரைகடல் கடந்துமே
தேடிவருவார் உங்களம்மான்
கோட்டை அதிகாரி
கொடிகாரர் உங்களம்மான்
கேட்டதெல்லாம் தருவார்
கண்மணியே நீயுறங்கு!
பக்குவத்து மாங்கனியும்
பருவத்துப் பலாச்சுளையும்
கோதுபடா நெற்றும்
கொண்டுவருவார் நீயுறங்கு!
சின்னஞ்சிறு விரலுக்குச்
சித்திரம்போல் மோதிரங்கள்
பொன்னால் உனக்களிப்பார்
புத்திரனே கண்வளராய்!

கடைசியிலே குழந்தையின் அழுகைக்கு ஒரு காரணம், முத்தாய்ப்பான காரணம் சொல்லி முடித்து வைக்கிறது அந்தத் தாய் உள்ளம். தம்பி துணை வேண்டுமென்று அழுதானாம் அந்தப் பாலன்!

யாரும் அடிக்கவில்லை
எவர்விரலும் தீண்டவில்லை
தானே அழுகின்றான்
தம்பிதுணை வேண்டுமென்று ;
சீக்கிரமே நான்பெற்றுச்
செல்வமே உனக்களிப்பேன்
பிள்ளைக்கலி தீர்க்கவந்த
பெம்மானே கண்வளராய்!

அந்தப் பையன் மிக நல்ல பையன். தம்பிகள், தங்கைகள் வேண்டுமென எண்ணிக்கையைப் பெருக்கிக் கேட்கவில்லை. ஒரே ஒரு தம்பியைப் பெற்றுத் தருவதாகக் கூறி நிறைவு காண்கிறது தாயின் நெஞ்சம்.


விளைச்சலைப் பெருக்கி
வளமுடன் வாழ்வீர்!
பாங்க் ஆஃப் பரோடா
தரும்
விவசாயக்
கடன் உதவியால்!
உங்கள் நிலம் செழித்து வளம் கொழிக்க, நல்ல விதைகள், சிறந்த உரம், நவீன பண்ணைக் கருவிகள் ஆகியவை அவசியம். ஆனால் அவற்றை வாங்கப் பணம் வேண்டும். அந்தப் பணத்தை கடனாகத் தருகிறது பாங்க் ஆஃப் பரோடா. அதனைப் பெற்று, வேண்டியவற்றை வாங்கி, வளம் காண்பீர்!
நீங்கள் என்றென்றும் வளமையுடன் வாழ
பாங்க் ஆஃப் பரோடா
தலைமை காரியாலயம்: மாண்ட்வி, பரோடா.
அநேகமாக இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்திற்கும் சேவை செய்ய, 550-க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன. மற்ற கிளைகள்: யு.கே., கிழக்கு ஆப்பிரிக்கா, மொரிசு, பிஜி தீவுகள், மற்றும் கயானா
BANK OF BARODA

# சிலம்பை விளம்பும்

பாரதியாரின் தமிழ்ப்பற்றும், இலக்கியப் பேரார்வமும் ஓர்ந்து கண்டு மகிழத்தக்கவை. அவர் தமக்குக் கிட்டிய தமிழ் இலக்கியங்களை ஆர்வ உள்ளத்தோடு அணுகினர்; அமுதச் சுவைகளை நுகர்ந்தார்; நுகர்ந்தவற்றை எண்ணிப் பெருமிதங் கொண்டார்.

அந்தப் பெருமிதத்தின் வெளிப்பாடுதான்,

'' யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை ''

எனும் அடிகள். தமிழ்ப் புலவர்களை நினைந்து பெருமிதம் கொள்ளும் பாரதி அப்புலவர்களை நினையாத தமிழரை நினைந்தவராய்

'' ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்
களாய் வாழ்கின்றோம் ''

—என்று குரல் தாழ்த்திப் பாடினர்.

இவ்விடத்தில் அவர் இலக்கியத்தின் திறவுகோலராய் வெளிப்படுகிறார். அவர் புகழ்ந்த புலவர்களையும், அவர் தம் இலக்கியங்களை அணுகாதவர்களையும் அறிமுகப்படுத்தியுள்ள முறையைப் பொதுவாகவும், சிறப்பாகவும் நினைத்தால் ஓர் இலக்கியத் திறவுகோல் கிடைக்கும். ஓர் இலக்கியத்தின் முழுப்பயனையும் பெற அதனை முதலில் வாயாரப் பேசி, அடுத்துச் செவிகுளிரக் கேட்டுப் பின் கண்குளிரக் கண்டு பயின்று சுவைக்க வேண்டும் எனும் குறிப்பை ''ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்'' என்பதனுள் வைத்துள்ளார். இக்குறிப்பு இலக்கியங்களைப் பொதுவாக அணுகுவதற்கும், சுவைப்பதற்கும் அவர் கொடுக்கும் திறவுகோல்.

இதற்குமேலும் அவர்தம் சொல்லமைப்புகளைக் கூர்ந்து நோக்கினால் மற்றொரு திறவு கோலையும் தருவார்.

மூன்று புலவர்களை அறிவித்த அவர் அம்மூவரை அணுகாதவர்களை மூவகையினராக அறிவித்தமையைக் கூர்ந்து நோக்கவேண்டும். அவர்களை அமைத்துள்ள வரிசையை நிரலே காணவேண்டும். கம்பரை அணுகாதவர் ஊமையராம்; வள்ளுவரை அணுகாதவர் செவிடர்களாம்; இளங்கோவை அணுகாதவர் குருடர்களாம்.

கம்பரது கலை இலக்கியத்தைச் சுவைத்துப் பயன் கொள்ள அவ்விருத்தங்களை வாயாரப் பாட வேண்டும்—பேச வேண்டும் என்கிறார். வள்ளுவரது அறவுரை இலக்கியத்தைச் செவியாரக் கேட்டு, அக்கேள்வியறிவால் வாழ்வைச் செம்மை செய்து கொள்ள வேண்டும் என்கிறார். இளங்கோ வடிகளது நாடக இலக்கியத்தை மனக்கண் குளிரக் கண்டு மகிழ வேண்டும் என்கிறார்.

## இலக்கியத்தின் வல்லமை

பொதுவாக, வாழ்வினைச் செம்மை செய்யும் வல்லமை பெற்றது இலக்கியம். சிறப்பாகத் தமிழ் இலக்கியம் அகவாழ்வு, புறவாழ்வு என்னும் வாழ்வியற் சட்டகத்தைக் கொண்டெழுந்த வளமார் பெட்டகம். ஒருபெரும் மன்பதையான தமிழ்மக்கட்குச் சாவா வாழ்வளித்து வருவன தமிழ் இலக்கியங்கள். இவ்வுண்மை பாரதியா



ரின் உள்ளத்தில் ஆழப் பதிந்திருந்தது. தமிழரால்—தமிழ் இலக்கியங்களால்—அவற்றினும் சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பராமாயணம் என்னும் மூன்று செம்மாந்த இலக்கியங்களின் துணை வலியால் தமிழர் வாழ்வு செழித்திருந்தது—செழிக்க வேண்டும் என்னும் உறுதிப்பாடு பாரதிபால் புளிச்சிடுகிறது.

தமிழ் மன்பதைக்குச் சாவா வாழ்வளிக்கும் வல்லமை சிலப்பதிகாரச் செய்யுளுக்கு உண்டென்று பாரதி திண்ணங் கொண்டிருந்தார். திருக்குறள் அதற்கேற்ற உறுதியையும், தெளிவையும் கொண்டிருப்பதை உணர்ந்தார். திருக்குறளின் பொருளாழமும், விரிவும், கருத்தழகும், தமிழ் மன்பதையின் ஊட்டச் சத்துக்கள் என்று உறுதி கொண்டிருந்தார். தமிழ்ச் சாதியின் மேம்பாட்டிற்குக் கம்பன் தனியொரு புதுமுயற்சி செய்துள்ளான் என்று நம்பினர். இத்திண்ணத்தையும், உறுதியையும், நம்பிக்கையையும் ஒன்று கூட்டிச் செம்மைக் குரலெடுத்து,

'' சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்,
திருக்குற ளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்,
எல்லையொன் றின்மை எனும்பொரு ளதனைக்
கம்பன் குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும் முன்புநான் தமிழச்
சாதியை அமரத் தன்மை வாய்ந்ததென்
றுறுதி கொண்டி ருந்தேன்.''

—என்று தமிழச்சாதி எனுந் தலைப்பில் பாடினர். பாடும் போக்கில், '' உறுதி கொண்டிருந்தேன் ''

—என இறந்த காலத்திற் கூறும் போக்கில் இன்றையத் தமிழ் மக்களது இழப்பை மின்ன விட்டுக் காட்டுகின்றார். தமிழகத்துத் தலையாய இலக்கியங்களைப் படைத்துத் தன்னுள்ளங் கவர்ந்த மூவரையும் குறித்தார். அத்துடன் அவர்க்கெல்லாம் முதுகெலும்பாய் உதவிய தமிழ் மன்னர்களையும் குறித்தார்.

'' கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும் ''

—என்று தொடங்கி, இடையே, காளிதாசன், பாஸ்கரன், பாணினி, சங்கரன் ஆகியோரைச் சுட்டிக்காட்டி,

'' சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்'

—எனத் தொடர்ந்து

'' அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர் ''

—என்று முடிவு கூற எண்ணியவர் உள்ளம் எரிகிறார். ' இவையாவும் அறியாது பேடிக் கல்வி பயின்று உழல் பித்தர்கள் ' என்று மக்களைச் சாடுகிறார். சாடிவிட்டு,

'' என்ன கூறிமற் றெங்ஙன் உணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ளம் எரிவதே.''

—என நொந்து கொள்கிறார்.

தான் தேர்ந்தெடுத்த முப்புலவரது தன்மைகளையும், அவர்தம் இலக்கியங்களின் இயல்புகளையும் வாய்ப்பு நேரும் போதெல்லாம் முறையாகப் பதித்துள்ளார் என்பதும் வெளிப்படுகின்றது.

ஆம், 'முறையாகப் பதித்துள்ளார்' என்றே அதனைக் குறிக்க வேண்டும். ' மறவாமல் மேற்கோள் காட்டியுள்ளார் ' எனக் குறித்தல் பொருந்தாது.

நம் நாட்டு மக்களது தன்னுணர்வற்ற போக்கையும், குறிக்கோளற்ற கோணலையும் பலதுறைகளிலும் கண்டு நொந்த அவர் மிக வெறுத்துச் சாடுகின்றார். அச்சாடலில் காப்பியம் கற்போர்தம் நுனிப்புல் மேயும் முறையை,

'' அணிசெய் காவியம் ஆயிரங் கற்கினும்
ஆழ்ந்தி ருக்கும் கவியுளங் காண்கிலார் ''

—எனக் கூறிக் கவல்கின்றார். இக்கவற்சியுடையவர் இலக்கியத்தில் தம் பார்வையை எவ்வாறு செலுத்தியிருப்பார் என்பதை அறிய முடிகிறது. மேற்கண்ட அடி பாரதியாரது தன்வரலாற்றுப் பாடலில் உள்ளது. அவர் தன் வரலாற்றுப் பாடல்களில் தனது உள்ளுணர்வுகளையே வடித்துள்ளார். எனவே, அவர் தாம் கற்றுச் சுவைத்த இலக்கியங்களில் அவற்றை யாத்த கவிஞர்களது உள்ளம் ஆழ்ந்து கிடப்பதைக் கண்டு உணர்ந்தவர் எனக் கொள்ளலாம்.

தம் உள்ளங் கவர்ந்த மூன்று புலவர்களது உள்ளங்களை அவரவரது இலக்கியங்களில் கண்டிருப்பாரன்றே ? அவ்வுணர்வை அவர் வெளிப்படுத்தியுள்ள பாங்கைக் காணலாம்.

தனது இராமாயணத்தைப் படிப்பதன் வாயிலாக மனிதத்தன்மை புலனுகை வேண்டும் எனும் குறிக்கோளைக் கம்பர் கொண்டுள்ளார் எனக் கருதுகிறார். அதனுல் கம்பன் மனித இனத்தின் செம்மைப்பாட்டை விளக்குங் குறிக்கோளில் ஊன்றி நிற்கிறுன் எனக் கூறுபவராய்

'' கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும் ''

—எனக் குறித்தார்.

இதனையொட்டித் தொடர்ந்து நோக்கினுல் இராமாயண வாயிலாகச் சில மனிதத் தன்மைகளைக் குறித்துக் காட்டும் நோக்கோடு கம்பர் இலக்கியத்தை யாத்துள்ளார் என்று பாரதி கருதுகின்றார் என்பது தெளிவாகும்.

இராமாயணக் கதையும், தெய்வம் மனிதப் பிறவி எடுத்து; அம்மனிதப் பிறவியின் மேம்பட்ட தன்மைகளுக்குக் குறியாக விளங்குகிறது எனும் அடிப்படையைக் கொண்டது. இதனை யாவரும் ஒப்புவர். இறையோ எல்லையற்றது. அவ்வெல்லையற்றதைக் கம்பன் தான் எடுத்துக் கொண்ட கதையின் வாயிலாகத் தன் திறமையையும் குழைத்துச் சில குறிகளால் தெளிவாக்கிவிட-

முயல்கிறர். இதனைப் பாரதி கண்டு கொள்கிறர்; இதனையே,

" எல்லையொன் றின்மை எனும்பொரு
ளதனைக்
கம்பன் குறிகளால் காட்டிய முயற்சி."

—என்று பாடுகிறர்.

மேலும், " கல்வியிற் பெரியன் கம்பன் " எனும் இலக்கண நூலின் மேற்கோள் தொடர் பாரதிக்கு நினைவில் நிற்கிறது. அந்நினைவினைச் செந்தமிழ் நாட்டைப் பாடிப் பூரிக்கும்போது முன்னே இழுத்துத் தொடர்புப் படுத்தி,

" கல்வி சிறந்த தமிழ்நாடு ; புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு "

—என்று பாடுகிறர்.



## தெய்வ வள்ளுவன்

இதுபோன்று திருவள்ளுவப் பெருந்தகையை அவர் காணும் முறையும் நோக்கற்பாலது. 'திருக்குறளைச் செவியாரக் கேட்டு நல்லுணர்வும், நல்லறிவும் பெற்று வாழ்வைச் செம்மை செய்யவேண்டும்; அவ்வாறு செம்மை செய்யாதவர் செவிடர்' என்று பாரதி அறிவித்த பாங்கை முன்னர்க் கண்டோம்.

" திருக்குற ளுறுதியும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் "

கருதினேன் என்று விரித்துப் பாடுகின்றர். இக் கருத்துக்களால் திருவள்ளுவர் மக்களை எந்நிலைக்குக் கொண்டு செல்லுகிறர் என்பதையும் பாரதி எண்ணிப் பார்க்கிறர். திருக்குறளுக்குள் புகுந்து நின்று நோக்குகிறர். வள்ளுவர், மக்கள் வாழ் வாங்கு வாழ வகை சொல்லுவதைக் காண்கிறர். அவ்வாறு வாழ்வாங்கு வாழ்பவன் மனித நிலையைக் கடந்த வானுறையும் தெய்வமாக ஆவான் என்னும் அறிவிப்பு பாரதியை அகல விழுதுதுமநாகக வைக்கிறது. 'தெய்வ வள்ளுவன் வான்குறள் செய்ததும்' என்று வள்ளுவரைத் தெய்வமாக்கு கிறர்.

" வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு."

—என்று செந்தமிழ்நாட்டை நினைத்துப்பூரித்துப் பாடினர். வான்குறள் செய்தவரைத் தந்து தமிழ் நாடு வான்புகழ் கொண்டதாகக் குறித்த பொருத் தம் நினைந்து மகிழத் தக்கது.

## முத்தமிழுக்கும் மூன்று சொல்

கம்பரை மானிடனுகவும், வள்ளுவரைத் தெய்வமாகவும் உணர்த்திய பாரதியார் இளங்கோவடிகளைப் புலவராகக் கண்டு உணர்த்துகின்றர்.

இளங்கோவடிகளது சிலப்பதிகாரத்தை மனக் கண் குளிரக் கண்டு சுவைக்காதவர் குருடர்கள் என்று குறித்ததை முன்னர்க் கண்டோம்.

" தமிழச்சாதி " என்னுந் தலைப்பில் சிலம்பின் திறத்தை எண்ணி ஓர் அடியை அமைத்தார் :

" சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும் "

—என்பது அது. இவ்வடியில் சிலப்பதிகாரத்தினைச் செய்யுளின் குறியோடு குறித்துள்ளமை நோக்கத்தக்கது. இளங்கோவடிகளைப் புலவராக அறிமுகப்படுத்துவதாக அதனைக் கொள்ளவேண்டும்.

சிலம்பில் பல்வகைச் செய்யுட்களும் அமைந்துள்ளன. ஆசிரியப்பாவும், வெண்பாவும், கலிப்பாவும் இவற்றின் வகைகளும், சில இனங்களும், இக் காலத்து வழக்கிறந்து போனசெய்யுட்களும் சிலம்பில் உள்ளன. உரைப்பாட்டு மடை, கட்டுரை, கொளு என்பனவும் செய்யுள் யாப்பு முறையை ஓரளவு ஒத்து அமைந்தவை. இசையிலக்கணச் செறிவு கொண்ட வரிப்பாடல்களும் தனியான செய்யுள் யாப்பு முறை கொண்டவை. அவை, கூடை, வாரம் எனத் தனித்தனியான யாப்பிலக்கணம் பெற்றவை. இவ்வாறு பல வகைச் செய்யுட்களும் அமைந்த தொடர்நிலைச் செய்யுள் இலக்கியம்-அதாவது காப்பிய இலக்கியம் இதுபோன்று வேறென்று அமைந்ததில்லை எனலாம்.

இவ்வாறு செய்யுள் என்று குறித்ததன் வாயிலாக இளங்கோவின் புலமைத் திறம் அவர்தம் இலக்கியத்தில் ஆழ்ந்துகிடப்பதைக் கண்டு உணர்த்தியவராகிறர். செய்யுளைச் சுட்டிக் கூறியதால் இளங்கோ இயற்றமிழ்ப் புலவர் என்பதையும் குறித்தவராகிறர்.

இளங்கோ இயற்றமிழில் எத்துணை வல்ல புலவராக மிளிர்கின்றரோ அத்துணை இசைத்தமிழிலும் வல்லுநர். சிலப்பதிகார அரங்கேற்றுக் காதை தமிழிசை இலக்கணத்தின் வடிவம் ; பலவகை இசை நுணுக்கங்களை வியப்புறும் வண்ணம் கொண்டு மிளிரும் இசைத்தமிழ்க் கருவூலம்.

அம்மனைவரி, கந்துகவரி, ஊசல்வரி என்பன சிலம்பின் இறுதிப் பகுதியாகிய வாழ்த்துக்காதையில் அமைந்துள்ளன. இவை பெண்கள் விளையாடுங்கால் பாடப்படுபவை. வள்ளைப்பாட்டு என்று ஒன்று உண்டு. இது பெண்கள் உலக்கை கொண்டு குற்றும் போது பாடப்படுவது. தேவந்தி அரற்று, அடித்தோழி அரற்று என அமைந்துள்ள பாடல்கள் துக்க மேலீட்டால் கையற்றுப் பாடப்படுவன. இவை இக்காலத்தே நாட்டு வழக்கில் கூறப்படும் 'ஒப்பாரி' வகையன.

விளையாட்டு, இல்லத் தொழில், துயரநிலை ஆகியவற்றிற்காகும் இசை முறைகளையும் கொண்டு சிலப்பதிகாரம் இசையிலக்கியப் பெட்டகமாகத் திகழ்கிறது. இதுபோன்று இசை நிறைவாய் அமைந்த வேறொரு தொடர்நிலைச் செய்யுள்— காப்பியம் இல்லை எனலாம். இவற்றின் வாயிலாக இளங்கோ வடிகளின் இசைப் புலமையையும் இசை உணர்வையும் சிலம்பில் காணலாம். பாரதி சிலம்பில் ஆழ்ந்திருக்கும் இளங்கோவடிகளது இசைஉணர்வைக் கண்டார்;

''சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்'' என்று பாடினார்.

சேரன் தம்பி சிலம்பை எழுதியதும்' என்று பாடவில்லை; 'சிலம்பை யாத்ததும்' என்று பாடவில்லை. ''சிலம்பை இசைத்ததும்'' என்று பாடினார். இளங்கோவடிகள் சிலம்பில் இசைத்திருப்பனவற்றை எல்லாம் பாரதி நிரலே காண்கிறார்.

சிலம்பில் இளங்கோவின் இயற்றமிழ்ப் புலமையையும், இசைத்தமிழ்ப் புலமையையும் இரு சொற்களால் குறித்தவர் அவரது கூத்துத்தமிழ் அதாவது நாடகத் தமிழ்ப் புலமையைக் காணாது விடுவரோ? கண்டார்; சிலம்பில் பலவகையான வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் இளங்கோவடிகள் கூத்தை அமைத்துள்ளதைக் கண்டார்.

அரங்கேற்ற காதையில் கூத்தின் முழு இலக்கணமும், இலக்கியமும் அமைந்துள்ளன. ஆடல் ஆசிரியனும் நட்டுவனின் இலக்கணத்தைப் புலப்படுத்தும் வாயிலாகக்கூத்தின் அடிப்படை குறிக்கப்பட்டுள்ளது. ஆடும் அரங்காம் மேடையின் அமைப்பு வியக்கத்தகும் வண்ணம் கட்டப்பட்டுள்ளது.

யாவற்றிலும் மேலாகச் சிலம்பில் ஆங்காங்கு நாடகக் காட்சிகளாகப் பல பகுதிகள் அமைந்துள்ளன. அவை படிப்போர் மனக்கண்முன் நிழற்படங்களாகக் காட்சியளித்து உள்ளத்தை இழுக்கின்றன. பாரதியார் அவற்றைக் கண்டுள்ளார்.

எத்தனையோ சுவைக் காட்சிகள். ஒன்பான் சுவைகளும் மாறி மாறித் தலை தூக்குகின்றன. உள்ளத்தை உலுக்குகின்றன; குலுக்குகின்றன. மனத்தை மகிழ்விக்கின்றன; நெகிழ்விக்கின்றன. நெஞ்சத்தை நயப்பிக்கின்றன; வியப்பிக்கின்றன. எல்லாக் காட்சிகளும் சேர்ந்து பாரதியின் நெஞ்சை அள்ளுகின்றன. அள்ளிவிட்ட நெஞ்சோடு துள்ளி எழுந்து பாடுகிறார்.

''நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரமென்
றோர்—மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு.''

—என்று.

ஏன் சிலப்பதிகாரத்தை நெஞ்சை அள்ளும் என்னும் அடைமொழியால் சிறப்பித்தார்? எது நெஞ்சை அள்ளும்?



இயற்றமிழ் உள்ளத்தைத் தொடும். இசைத்தமிழ் மனத்தை மீட்டும். நாடகத்தமிழ் நெஞ்சை அள்ளும்.

இவ்வாறாக,

''சிலப்பதிகாரச் செய்யுள்''
''சிலம்பை இசைத்தது''
''நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்''

—என இத்தொடர்களை அமைத்த பாங்கு எண்ணி எண்ணி மகிழத்தக்கது. சிலப்பதிகாரத்தின் இயற்றமிழ்க் கடலில் மூழ்கித் திளைத்த அவர் 'செய்யுள்' என்னும் முத்தான சொல்லைத் தேர்ந்தெடுத்துள்ளார். அச்சொல்லாற் சிலம்பின் இயற்தமிழ்ப் பெருமையைப் பறைசாற்றுகிறார். சிலப்பதிகாரத்தின் இசைத்தமிழ் ஓடையில் நீந்தித் திளைத்த அவர் 'இசைத்தது' என்னும் முத்தான சொல்லைக் கண்டுள்ளார். அச்சொல்லால் சிலம்பின் இசைத்தமிழ்ப் பெருமையை முழக்குகிறார். சிலப்பதிகாரத்தின் நாடகத்தமிழ் அருவியில் ஆடிக்களித்த அவர் ''நெஞ்சை அள்ளும்'' என்னும் முத்துத் தொடரைத் தேர்ந்துள்ளார். அத்தொடரால் சிலம்பினது நாடகத் தமிழின் பெருமையைக் கொட்டி முழக்குகிறார். முத்தமிழின் அமைப்பை மூன்று முத்துச் சொற்களால் குறித்துள்ள திறம் நோக்கத்தக்கது.

அம்மூன்று சொற்களையும் சிலப்பதிகாரம் என்னும் நூற்பெயரோடு சேர்த்தே அமைத்திருப்பது மேலும் மேலும் எண்ணி மகிழ்தற்குரியது.

''தமிழ்நாட்டு நாகரிகம்'' எனும் தலைப்பில் அமைந்த கட்டுரையில் அவரது தமிழ் இலக்கிய ஈடுபாட்டைப் பளிச்சென்று காணமுடிகிறது. 'இந்

நியப் பெருநாட்டின் ஆட்சி உரிமையை இழப்பினும் இழப்போம்; எம் சேக்சுபியரின் இலக்கியத்தை இழக்க ஒப்பமாட்டோம்' என்னும் மெக்காலே பெருமகனுரின் கருத்தைக் காட்டிப் பின் வருமாறு தொடருகிறுர்....

''இந்த மாதிரியாகப் பெருமைப்படுத்தி நம்மவர், கம்பனைச் சொல்லலாம்; திருவள்ளுவரைச் சொல்லலாம்; சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளைக் கூறலாம். இன்னும் பல புலவர்களைக் காட்டலாம் .. .. .. .. தமிழ்நாட்டின் மற்றச் செல்வங்களையெல்லாம் இழந்துவிடப் பிரியமா; ஒளவையார் நூல்களை இழந்துவிடப் பிரியமா, என்று நம்மிடம் கேட்பார்களாயின் 'மற்றச் செல்வங்களையெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை; அவற்றைத் தமிழ்நாடு மீட்டும் அமைத்துக் கொள்ள வல்லது. ஒளவைப்பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப் படமாட்டோம். அது மீட்டும் அமைத்துக் கொள்ள முடியாத தனிப்பெருஞ்செல்வம்' என்று நாம் மறுமொழி உரைக்கக் கடமைப் பட்டிருக்கிறேம்.''



இதனைக் காண்போர் பாரதியார் தமிழ் இலக்கியம்பற்றிக் கொண்டிருந்த பூரிப்பை உணரலாம்.

இவற்றிற்கெல்லாம் முடி சூட்டுவதுபோல் பிறிது ஓரிடத்தில்,

''கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகா கவிகளுக்கு ஞாபகச் சிலைகளும், வருஷோத்சவங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும்''

—என்று குறித்துத் தன் பேரார்வத்தை வெளிப்படுத்தியுள்ளார். இக் கருத்து இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. தமிழ் இலக்கியத்திற்கு அக்காலத்தில் இருந்த வரவேற்பை உள்ளத்தில்கொண்டு இக்கருத்தை எடை போடவேண்டும்.

(மூன்று கவிகளுக்கும் சிலைகள் வைக்கவேண்டும் என்னும் பாரதியாரின் கனவை அறிஞர்பெருந்தகை அண்ணு அவர்கள் கம்பருக்கும், திருவள்ளுவருக்கும் சிலையமைத்து நனவாக்கினுர்கள், இதுபோது டாக்டர் கலைஞர் அவர்கள் இளங்கோவடிகளார்க்குச் சிலையமைத்து, பாரதியாரின் கனவை நிறைவேற்றி வைத்திருக்கிறுர். எங்கிருந்தோ பாரதியார் வாழ்த்தொலிக்கிறுர்).

''கள்ளையும் தீயையும் சேர்த்து—நல்ல
காற்றையும் வான வெளியையும்சேர்த்துத்,
தெள்ளு தமிழ்ப்புலவோர்கள்—பல
தீஞ்சுவைக் காவியம் செய்துகொடுத்தார்''

—என்று அவர் பாடியிருப்பதில் தமிழ்க் காப்பியம் பற்றிய அவரது உள்ளுணர்வு கொப்புளிக்கிறது.

எதை நோக்கினும் அதில் பொதிந்து கிடக்கும் உண்மையை உடனே விரைந்து அறியவேண்டும் என்னும் துடிப்பான, கூர்த்த அறிவுடையவர் பாரதியார். இதனை, ''அறிவு வேண்டுகிறேன்; எந்தப் பொருளை நோக்குமிடத்தும் அதன் உண்மையை உடனே தெரிந்துகொள்ளும் நல்லறிவு வேண்டுகிறேன்'' எனக் குறித்த அவரது தொடர் நுணுகி நோக்கத்தக்கது.

தன் அறிவுப் பார்வையில் படுகின்றவற்றின் உள்ளீட்டை, பார்வை பட்ட அளவிலேயே உணரும் திறன் வாய்ந்தவர் பாரதியார் என்பதை அவரது கவிதைகளாலும் உணரலாம். சிலம்பில் அவ்வாறு அவர் கண்ட இழையோட்டமான கருத்து ஒன்றை இத்துறை கொண்டு காணலாம்.

சிலப்பதிகாரத்திற்கு 'நெஞ்சை அள்ளும்' எனும் அடைமொழி கொடுத்தார். அதே மூச்சில் என்ன பாடினுர்?

''சிலப்பதி காரம் என்றோர்
மணி ஆரம் படைத்த தமிழ்நாடு''

என்று சிலப்பதிகாரத்தை ஒரு 'மணி ஆரமாக' உருவகித்துப் பாடினுர். தமிழ் நாட்டிற்கு ஒரு 'மணி மாலை' சூட்டிப் பூரித்தார்.

சிலப்பதிகாரத்தை ஓர் அணிகலனுக உருவகம் செய்தவர் ஏன் மணி ஆரம்—மணிமாலை என்றுர்? ஏன் பவளமாலை என்று பாடியிருக்கக் கூடாது? பொன் மாலை என்று பாடியிருக்கலாமே? மலர் மாலை என்று தொடுத்திருந்தால் மணக்காதா? செய்யுள் அமைதிக்கும் ஒத்திசைக்கும் வகையில்,

'சிலப்பதிகாரம் என்றோர்
துகிர் ஆரம் படைத்த தமிழ்நாடு'
'சிலப்பதிகாரம் என்றோர்
பொலன் ஆரம் படைத்த தமிழ்நாடு'
'சிலப்பதிகாரம் என்றோர்
மலர் ஆரம் படைத்த தமிழ்நாடு.'

—என்று பாடியிருக்கலாம். ஏன் மணிகள் கோத்த கோவையாகப் பாடினுர்? மணியாகச் சிலப்பதிகாரத்தைக் குறித்துள்ளதுதான் நோக்கத்தக்கது. நம் நோக்கம் கூர்ந்து நுழைய நுழையப் புதுப் புது வியப்புக்கள் மேலிடுகின்றன.

'மணிஆரம்' என்ற தொடரில் 'மணி' என்னும் சொல் ஒரு திறவு கோலாகப் புகுந்து சிலப்பதிகாரப் பேழையைத் திறக்கிறது.

கவிமாமன்னன் பாரதி கையாண்ட இந்த மணிச் சொல் அமைப்பு, சிலம்பை மற்றெரு முனையில் விளம்புவதாகும். அது தனிக் கட்டுரையாகக் காணத்தக்கது.

# செல்வி கன்னுவின் வாழ்க்கையில் பெருமைக்குரிய நிகழ்ச்சியாகும் இது




தங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள பணியில் செலவிட்டால் எந்தப் பெண்ணும் பெருமை பெறலாமே! ஆமாம் **செல்வி கன்னு** தனது ஓய்வு நேரத்தைச்சிறுசேமிப்பு முகவராகப் பணியாற்றுவதில் செலவிட்டார்.

மேலே உள்ள படத்தைப் பாருங்கள். **1970-71** ஆம் ஆண்டில் சிறுசேமிப்பு வாடிக்கை யாளர்களைச் சேர்ப்பதில் பெருஞ் சாதனையைச் செய்தமைக்காக மத்திய அரசு துணை நிதியமைச்சர் திருமதி **சுசிலா ரோஹட்கி** யிடமிருந்து பரிசு பெறுகிறார்.

செல்வி கன்னுவின் தனிப்பட்ட முயற்சியால் கூடுதலான வருவாய் கிடைத்ததை நீங்கள் அறிவீர்கள். சிறு சேமிப்புக்காக வாடிக்கையாளர்களைச் சேர்ப்பது சுலபமானது. நீங்கள் கூடச் சிறுசேமிப்பு வாடிக்கையாளராகப் பணியாற்றலாம். அதன் மூலம் வருவாய் பெறுவதுடன் பரிசுகளையும் பெறலாமே!

உங்கள் ஓய்வு நேரத்தை இப்படிப் பயனுள்ள பணியில் செலவிட்டு நாட்டுக்கும் சமுதாயத்துக்கும், நற்றொண்டாற்ற இன்றே சிறுசேமிப்பு முகவராகச் சேருங்கள்.

விவரங்களுக்குத் தொடர்பு கொள்க

வட்டார இயக்குநர்
**தேசிய சேமிப்பு நிறுவனம்**
எண் 1/18 அண்ணா சாலை
சென்னை - 2.
தொலைபேசி: 85962

சிறுசேமிப்பு இயக்குநர்
**தமிழ்நாடு அரசு**

# வெண்பாப் போட்டி

## 21. ஞாலமே கைகூப்பும் நன்கு

தற்சுகம் போக்கியே தன்னரிய செய்கையால்
பற்பல செய்து பணிபுரிந்த—நற்காந்தி
ஞாலம் நனிவாழச் செய்த செயலுக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—சா. காளியப்பன், மத்திய சிறை, சென்னை.

உலகத் தலைவீர் ! உவந்தொருசொற் கேளீர் !
கலகங்கள் நீங்கிக் களிக்கப்—பலகாலும்
சீலத்தைக் காட்டுங் குறள்நெறியிற் சென்றீரேல்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் கி. காளியப்பன், பி.ஏ., காரைக்குடி-4.

நீலப் பெருங்கடல் நீர்சுமந்த கார்மேகக்
கோலங்காண் மஞ்ஞை குதூகலிக்கும்—சீலமுடன்
காலந் தவறாமற் காக்கும் பெருமழைக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கோ. கலியாணசுந்தரன், திருமணமங்கலம்.

மாற்றாரின் தோட்டத்து மல்லிகைக்கும் உண்டுமணம்
ஏற்ற இறைவன்தான் ஏழையர்கள்—ஏற்றமுற்ற
கோலச் சிரிப்பதுவாய் கொண்டஅண்ணா கொள்கைக்கே
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—என். சி. கிருஷ்ணசாமி, பொன்மலை.

என்றோ மறைந்திட்ட ஏசுவையுங் காந்தியையும்
இன்றும் உலகத்தார் எண்ணுவதேன் ?—அன்றவர்கள்
காலத்தி னாற்செய்த நன்றி தனக்கிந்த
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—பொ. வேலம்மாள், கொட்டாரம்.

சென்னை அரசைத் தமிழ்நா டரசாக்கி
அன்னைத் தமிழையே ஆட்சியிலும்—இன்னுமின்(று)
ஆலயத்தும் வைத்தார்க்கே அல்லால்யார்க் கித்தமிழர்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—எம். மார்கபந்து, அரக்கோணம்.

போர்தொடுத்து மக்களெல்லாம் பூமிதனில் யாங்கணுங்கண்
நீர்சொரியும் காட்சிகள்தாம் நெஞ்சுறுத்த—ஓர்ந்திங்கு
மேலாம் அறப்போரால் வென்றிட்ட காந்தியார்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—ஆர். கோபாலகிருஷ்ணன், அளக்குடி.

வறுமை நெருப்பினில் வாடுகின்ற மக்கள்
வெறுமை வாழ்வென்று வெம்பப்—பொறுமையுடன்
காலமெலாம் ஏழையின் கண்ணீர் துடைப்பார்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கு. கிருட்டிணமூர்த்தி, பி.ஏ., கரூர்.

காய்த்த மரமே கனிகளை உண்பதில்லை
மாய்த்ததனை உண்டுவப்பர் மானிடர்கள்—வாய்த்திடவே
காலமே வான்மழையுந் தண்ணொளியுந் தந்ததற்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் சோ. கருப்பசாமி, ஷாநகர்.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—

திரு சா. காளியப்பன்,
எண்: 7483,
மத்திய சிறை,
சென்னை—1.

காவிரியிற் கல்லணை காவலன் கட்டியதால்
பூவிரியச் செய்து புகழ்படைத்தான்—பாவிரிக்கும்
கோலக் கலைஞரின் கொள்கையாலிந் நாடுயர்ந்தால்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் இரா. அங்கப்பன், அளவிபடகாண்.

ஒற்றைத் தமிழேட்டில் ஓரா யிரங்கவிதை
எற்றைக்கும் காணு இனியசெயல்—மற்றுமிதில்
கோலக் குயில்பாடிக் கொஞ்சிக் குலவுவதால்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—நா. நாகப்பன், கோனுபட்டு.

மெழுகுவர்த்தி போல்நாளும் மேனி யழுகும்
தொழுநோயர் துன்பந் துடைக்க—முழுநிறைவாய்க்
காலத்தால் திட்டமிட்டுக் காக்குங் கலைஞருக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—க. துளசிங்கம், திருநின்றவூர்.

நாட்டிலுள்ள மக்களுக்கு நல்ல சுதந்திரத்தை
வாட்டுந் துயரேற்று வாங்கியதால்—ஏட்டிலெல்லாம்
காலத்தை வென்றுநிற்குங் காந்தி புகழ்பாடி
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—க. முத்துசாமி, மணப்பாறை.

நாடி வருவாரை நண்ணி வரவேற்றுத்
தேடி இடங்கொடுக்குந் தேன்மொழியே !—கூடியே
காலமெலாம் வாய்மையே காட்டிவரும் நம்மவர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் பூமாலை நடராசன், சேத்துப்பட்டு, (வ.ஆ.)

மக்கள் நலனை மதித்தொழுகும் நம்மரசே
தக்க அரசென்றார் தாரணியோர்—எக்காலுஞ்
சீலமே கொண்டொழுகும் செந்தமிழர் நாட்டுக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—சி. இராமகிருட்டிணன், மேல்பட்டாம்பாக்கம்.

வைகறைபின் வந்துதித்து வையத்தோர் வாழ்ந்திடவே
கைகள் வளங்காணக் காய்வித்துப்—பெய்வித்துக்
கோலஞ்செய் ஞாயிற்றைக் கொண்டேத்திப் பொங்கலன்று
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—தன. குணசேகரன், சிதம்பரம்.

சாதி முறையிருப்பின் சட்டங்கள் சாவதுடன்
நீதியும் நில்லாவாம் நெஞ்சமே—ஆதலினுல்
சாலப் பகையதனைச் சாய்த்திட்ட போதுனக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—எஸ். சுப்பிரமணியன், சிவகாசி.

தேனெனவே பாலெனவே தீங்கரும்புச் சாறெனவே
ஊனில் ஒளிரும் உயர்தமிழால்—வானுர்ந்த
கோல அழகு கொழிக்குங் குறளுக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—இரா. உமா (சக்தி), சின்னுளப்பட்டி.

கற்கண்டே ! நற்கனியே ! கன்னல் நறுஞ்சாறே !
பொற்குவையே! பூவுடலே! பூந்தமிழின்—சொற்சுவையே
கோலமே என்றனுக்குக் கொஞ்சம் இரங்குனக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கு. பெருமாள்சாமி, அருவன்காட்டுவலசு.

காலத்தைப் பொன்னுக்கிக் காட்டும் உழைப்பாளி
சீலத்தை யாவருமே சிந்தித்தால்—கோலப்பொற்
காலமே தோன்றும் கடும்முயற்சி செய்வார்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கே. சந்திரமணி, ஈரோடு-6.

நல்லவர்க்குங் கெட்டவர்க்கும் நற்பாலம் போலிருந்த
வல்லவர்கள் தோன்றி வளர்கின்ற—நல்லுலகில்
ஆலம் விழுதினைப்போல் அன்புதனை ஈவோர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் தெ. மு. முத்துக்கிருட்டிணன், இராசபாளையம்.

இன்றும் வருங்கொல் எனவஞ்சிக் கொல்நிரப்பால்
குன்றும் வறியோர் குலமகிழ—நன்ருற்றும்
நீலமேய் கண்மலராய் ! நேர்தமிழர் ஆட்சிக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் த. வாசுதேவன், பி.ஏ., கள்ளக்குறிச்சி.

சின்ன மனத்தில் சினத்தை வளர்த்திட்டால்
என்ன பயன்விளையும் எண்ணத்துள்—அன்பென்னும்
பாலமே கட்டிப் பகையைக் கடந்திட்டால்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் மு. இரத்தினம், அலங்காநல்லூர்.

தமிழுந் தமிழருந் தாழ்வுற்ற போதில்
அமிழ்தெனத் தோன்றிட்டார் அண்ணா—இமிழ்கடல்சூழ்
ஞாலத் தமிழர்க்கு நாளுமுழைத் தாரதனால்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் ச. ஆதிமூலம், பி.ஏ., தேவகோட்டை.

கால விழுதூன்றிக் கன்னித் தமிழர்க்கே
கோல நிழல்விரிக்கும் கொள்கைக்கோர்—பாலமிடும்
ஆலங் கிளைபோலும் ஆளுங் கலைஞர்க்கிஞ்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—காவிரி நாடன், சென்னை-34.

கண்ணின் கருமணியே! கன்னித் தமிழ்வழங்கும்
மண்ணில் வறுமையை மாய்த்திட—எண்ணிலா
ஆலை திறக்கும் அருமைக் கலைஞர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—சுப. அறவாணன், முதலிபட்டி.

தொண்டுந் தியாகமுந் தூய்மையும் வாய்மையும்
கண்டுதன் வாழ்வில் கடைப்பிடிக்கும்—தொண்டரைக்
காலம் அழித்திடினும் கார்கால மாரிபோல்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—டாக்டர் பி. போத்தி, பெரியகுளம்.

காலத்தாற் செய்தபெரு நன்றிக்கும் கல்வியொடு
சீலத்தைத் தந்தபெருஞ் சிந்தைக்கும்—சேல்விழியீர்!
ஓலமிடும் ஏழைவாழ் வோங்கவழி செய்தவர்க்கும்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—சி. மாணிக்கம், காரமடை.

விதியென்ற நம்பிக்கை வேர்பறியச் சாய்க்கும்
'விதியொன்றைக்' கண்டறிவார் மீண்டும்—மதிசிறப்பக்
காலத் தொடும்பொருந்தாக் கற்பனையாம் என்பார்க்கிஞ்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் கரு. சுப்பையா, கல்லூரணி.

இன்சொல்லே கூறி இருநிலத்து மன்னுயிர்கள்
வன்பசியை யும்போக்க வல்லாரேல்—அன்னவரைச்
சீலராய்ப் போற்றுஞ் சிறப்பதுவே எஞ்ஞான்றும்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் மு. துரைசாமி, திருச்சி.

வங்கக் கடலோரம் வாழ்கின்ற அண்ணாவின்
தங்கத் தமிழகத்துத் தம்பியரே!—எங்கெங்குங்
காலத்தை வெல்லுங் கடமையினை ஆற்றிடுவீர்!
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—இரா. முருகன், ச. பே. புதூர்.

பொன்னி வளநாட்டிற் பூத்த புதுமலரே
கன்னித் தமிழகத்தின் கண்மணியே—என்மகனே
காலத்தை வெல்லுங் கனித்தமிழை நாங்காப்போம்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—ந. நல்லம்மாள், நாமக்கல்.

ஞாலத்தில் மக்கள் நலமுடனே வாழவைக்குங்
காலத்தால் மங்காநற் கார்முகிலே!—சீலத்தாற்
காலமெலாம் நீமிதமாய் காரீந்தா லுன்றனுக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—ந. மாயகிருட்டிணன், சென்னை-13.

ஏழை இனிதுயர எப்பாடு பட்டேனுங்
கூழை நனிவார்த்துக் கூட்டுறவால்—மேழிபிடி
சீலக் குடிமக்கட் சிந்தை மகிழ்ந்தக்கால்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—பெ. இராசசுந்தரம், திருவேற்காடு.

கேட்ட பொருளனைத்துங் கேட்பார்க்குத் தாமளித்து
வாட்டும் வறுமைப் பிணியகற்றி—நாட்டினரைக்
காலமெல்லாந் தம்முயிர்போற் காக்கும்நல் லாட்சியர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—தி. செ. கந்தசாமி, சங்ககிரிதுர்க்கம்.

வீட்டு வருவாய்க்கு வேண்டியன செய்கின்றோம்
நாட்டு வருவாய்க்கு நாமென்ன—காட்டுகின்றோம்?
காலத்தை எண்ணிக் கருத்துடை செய்திட்டால்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—சாந்தா தர்மலிங்கம், புதுச்சேரி-4.

வாழ்வில் உடலில் வளத்திற் குறையுடையோர்
தாழ்ந்தே இரந்து தவிக்கின்ற—சூழ்நிலையின்
மூலத்தை நீக்க முனைந்த கலைஞருக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—இரத்தின-மணியரசன், தெ. நெடுஞ்சேரி.

தாயகமுந் தாய்மொழியுந் தானுந்தன் கண்ணிரண்டாய்
நேயமுடன் காத்திடவே நீவந்தாய்—தூயவனே
காலமே வாடாத காவியப் பூவாக்கி
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கலாவதி தென்னவன், பெரியகுளம்.

வாழ்கின்ற மாண்பனைத்தும் வாழ்வோர்க் கெடுத்துரைத்துக்
தாழ்கின்ற மக்களினந் தாமுயர—ஆழ்ந்தநற்
சீலமுகும் நல்லுரையைச் செப்புந் தமிழ்மறைக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கு. மங்கையர்க்கரசி, திருச்செங்கோடு.

இல்லாருங் கல்லாரும் இல்லையென நம்முதல்வர்
நல்லாற்றில் ஆட்சி நடத்துதலால்—நல்வழியிற்
சாலவே போற்றித் தகுபட்டந் தானளித்து
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—வித்துவான் பெ. அண்ணாமலை, சென்னை-1

போற்றற் குரியசெயல் பொன்போலாற் றுவிடினும்
தூற்றித் திரியாதே தூயோரை—காற்றூடி
வாலறுந்தும் நூலிருந்தால் வானந்தா னேற்பதுபோல்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் அரிமதி தென்னகன், புதுச்சேரி-1.

ஈன்று பெரிதுவந்(து) இன்பமுறும் வாழ்வளித்(து)
ஆன்ற பெருமையெல்லாம் ஆற்றுவித்துச்—சான்றோனாய்க்
காலமெல்லாம் நல்வழியைக் காட்டிநிற்கும் பெற்றோர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—தி. செ. குப்புசாமி, திருச்செங்கோடு.

அருமைக் கனியே! அயலாரால் எல்லை
கருகா திருக்கக் கடுகிப்—பொருதுவதில்
காலறு பட்டாலென் ? கையறு பட்டாலென் ?
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—சு. தருமர், மேலான்மறைநாடு.

போர்மேகஞ் சூழ்கின்ற போதெல்லாம் பாரதத்தின்
சார்பெல்லாம் எங்குஞ் சமாதானம்—பார்வெல்லுங்
காலமே ஆயினுங் காட்டும் பொறுமைக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—ஆ. பாலகிருட்டிணன், அறந்தாங்கி.

அன்போ டமுதளிப்பார் ஆதரிப்பார் மக்கள்தம்
துன்பந் துடைப்பார் துணையிருப்பார்—இன்புறவே
நாலா நலன்களை நன்கமைப்பர் அன்னவர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—எம். சி. சுப்பையா பிள்ளை, நாகர்கோயில்.

விண்ணிற் பறக்கின்றோம் ; வெண்ணிலவில் நிற்கின்றோம்
கண்ணிற் பலவிந்தை காண்கின்றோம்—மண்ணில்மாக்
கோலமே காட்டிடும் புத்துலகங் கண்டோர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—மு. சம்பந்தன், கோவை-18.

'நாமிருவர் பிள்ளை நமக்கிருவர்' போதுமென்று
பூமியில் பின்னோர் புகழ்ந்துரைக்க—நாமினிமேல்
சால நலங்காணச் சார்ந்தே எடுத்துரைப்போம்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கே. சின்னசாமி, திருக்கோயிலூர்.

கட்டுப்பா டின்றிக் கணக்கற்ற பிள்ளைகளைச்
சிட்டுஞ் சிமிழுமாய்ப் பெற்றெடுத்துக்—கெட்டிருக்குங்
கோலமே காட்டாத கொள்கை வழிநடந்தால்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் காவிரிக்கயலன், இளங்காடு.

இதயத்தின் நன்றி எழிற்கவிதை ! காலை
உதயத்தின் நன்றி ஒளித்தேன்—புதுமலரே!
பாலமாம் அண்ணா பணிக்கருணைப் பண்புக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் முத்து வெங்கடேசன், திருமயம்.

உண்ண உணவும் உடுக்க உடையுமின்றிக்
கண்ணீர் வடிப்பாரைக் காப்பதற்கு—மண்மீது
கோலமிகு திட்டங் குவித்திட்டார் அன்னவர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் இல. கிருட்டிணன், ஈரோடு.

காதலனைக் கைப்பிடித்துக் காலமெலாந் துன்பமின்றி
மாதரின் வாழ்க்கை மணம்வீசச்—சாதலிலும்
பாலமெனக் காதலையே பாடிவைத்த பாரதிக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கோ. ப. முருகநாதன், பி.ஏ., சென்னை-5.



# 1970-ஆம் ஆண்டின் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள்-கலைஞர்களுக்குத் தமிழ்நாடு அரசின் பரிசளிப்புவிழா நிகழ்ச்சிக் காட்சிகள்








































நேரு
பிறந்தநாள்
விழா!









இளங்கோவடிகள்
சிலைத்
திறப்பு விழா!

*



குழந்தைகள்
புத்தகக்
கண்காட்சி

*



# ஏன் இந்தக் காதல்?

அ. மறைமலையான்

## 10. இருளின் மடியில்......!

'....நான் ஏன் அப்படி அழுது புலம்பினேன்—கதறித் துடித்தேன்—தெரியுமா?

என் ஆருயிர் அக்காள் பழைய அக்காளாகவே இல்லை; அதனுடைய எழில் மிக்க மலர் மேனி எவ்வாறெல்லாமோ மாறிப்போயிருந்தது.

ஆரஞ்சுச் சுளை என்போமே, அந்த மென்மையான உள்ளடங்கிய உதடுகள், இப்போது ஓடு நீங்காத புளியம்பழம் போல வெளியே பிதுங்கிக் கொண்டு வீங்கிப் பளபளத்தன.

எள்ளுப் பூ நாசி என்போமே, அந்த எடுப்பான மூக்கு, இப்போது தஞ்சாவூர்க் குடமிளகாய்ப் பழம்போலத் தடிப்பேறித் தோன்றியது.

நாவற்பழக் கண்கள் என்போமே, அந்தக் கரிய பெரிய விழிகள், இப்போது புகை படிந்து புழுதியில் விழுந்து விட்ட சோடாக் கோலிகள் போல ஒளிமங்கி உள்ளுக்குப் போய்விட்டன.

பாதியாகப் பிளந்தெடுத்த பலாச்சுளைகள் என்போமே, அந்தக் காதுகள், இப்போது வாழைப் பூவின் மடல்களின் அடிப்புறத்தில் வளையமிட்டிருக்கும் செந்நிறத்தைத் தாங்கித் தளதளவென்று மின்னின.

'பால் நிலவோ — — — ? பப்பாளிப் பழமோ......?' என்றெல்லாம் பாவலர்கள் பாடுவார்களே, அந்தப் பொலிவு மிதந்த ஒளிமுகம், இப்போது, சிறுத்தும் பெருத்தும், சிலிர்த்தும் சிதைந்தும், வெடித்தும் விரிந்தும் சின்னாபின்னமாய்க் கண்ணுக்குத் தெரிந்தது!

நண்டு வளையைச் சுற்றிலும் சரி—கரையான் எடுத்த புற்றிலும் சரி—பூத்துக் கிடக்குமே மண், அப்படித்தான் பூத்துப் போயிருந்தது அதன் உடம்பு முழுதும்!

அழகாய் நீண்ட ஊமத்தம் பூ மொட்டுப்போல் விளங்கிய கை-கால் விரல்களோ, பள்ளி ஆசிரியர் இனிமேல் எழுதவே முடியாது என்று தூக்கியெறிந்த 'சாக்-பீசு'த் துண்டுகள் போலக் கரைந்தும் குறைந்தும் காணப்பட்டன!

பசும்பொன்னால் ஆன சிலை போல வளர்ந்துகொண்டிருந்த என் அக்காள் இப்போது, பழுக்கத் தொடங்கிவிட்ட பாகற் காய்களின் சிலையாகவே காட்சி அளித்தது!

உளுத்த மூங்கிலாக—உப்பிருந்த மட்குடமாக—வெடித்த வெள்ளரிப் பழமாக—வீசியெறியப்பட்ட குருவிக்கூடாக—ஒரு மனித உருவம் மாறக்கூடும் என்று என்னால் கற்பனையே செய்ய முடியவில்லை!

''அய்யய்யோ! உனக்கு ஏனக்கா இந்தக் கோலம் வந்தது? உனக்கு எப்படியக்கா இந்தக் கோரம் வந்தது?''—என்று குமுறிக் குமுறிக் கதறினேன் நான்.

சுவரிலும் தூணிலும் என் தலையைப் போட்டு முட்டிக் கொண்டேன்; மோதிக் கொண்டேன்.

தரையிலும் படியிலுமாக உருண்டு புரண்டேன்; ஓலமிட்டு அழுதேன்.

என்னைப் பார்த்துவிட்டு, என் தாயும் தமக்கையும் என்னைப் போலவே கதறித் துடித்தனர்; பெருங்குரல் பாய்ச்சி அழுதனர்.

எங்கள் வீடு நொடிப்பொழுதில் இழவு வீடாகவே மாறிவிட்டது.

எங்களுடைய அழுகுரலைக் கேட்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாரும் ஓடோடி வந்து விட்டனர்.

ஒரு முதியவர் வந்து என்னைத் தூக்கி நிமிர்த்தித் தன் தோள் மீது சாய்த்துக்கொண்டு அவருக்குத் தெரிந்த ஆறுதல் மொழிகளைக் கூறினார்.

ஆனால் அவருடைய வார்த்தைகளால் என்னுடைய ஆத்திரத் தீ—துயரக் குமுறல்—அவ்வளவு எளிதில் அடங்குவதாக இல்லை.

''நாங்கள் யார் குடியைக் கெடுத்தோம்? எவரை ஏமாற்றினோம்? யாருக்குத் துரோகம் செய்தோம்? எவர் சோற்றில் மண்ணை அள்ளிப் போட்டோம்?...என் அக்காவுக்கு ஏன் இந்தக் கதி?.... ஏன் இந்த இடி?.... எங்கள் குடும்பத்துக்கே ஏன் இந்தச் சிதைவு—சீர் குலைவு......?''

—என் கதறலுக்கிடையே வெடித்த இந்த வினாக்களுக்கு அந்தப் பெரியவரால் என்ன விடையைத்தான் கூறமுடியும்?

சமயத்துக்கு என்னை இழுக்காவிட்டாலும், அவர் அடிக்கடி எடுத்துக் கூறிய கருத்துரைகளால் கவரப்பட்ட நான், இந்த உலகத்தை இயக்குகின்ற 'பேராற்றல்' ஏதோ ஒன்று இருக்கத்தான் இருக்குமோ என்று எண்ணியதும் உண்டு.

அந்தப் பேராற்றலுக்குத்தான் பெரியவர்கள் 'கடவுள்' என்னும் பெயர் சூட்டி இருப்பார்களோ என்று நான் கருதியதும் உண்டு.

அத்தகைய 'கடவுள்' ஏழைகளுக்கு இனிய தோழராக — பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பாக—நோயாளிகளுக்கு



என் தந்தைக்குத் தெய்வ பக்தி இருந்ததில்லை என்று முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்.

அண்ணன்-தம்பிகளாக அரவணைத்துக் கொண்டு வாழவேண்டிய சமுதாயத்தில், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், பணக்காரன்-பரம ஏழை என்கிற பாகுபாடுகளும் சாதி பேதங்களும் வெடிப்புகளாக விழுவதற்கு விதைகளைத் தூவியவர்களின் விருப்பப்படி எழுந்தவைகள் தாமே இந்தத் தெய்வங்கள் என்கிற எண்ணமும், என் தந்தை அவற்றை வணங்காமல் ஒதுங்கியதற்குக் காரணமாக இருக்கலாமோ என்னவோ ?

ஆனால், நானும் என் தமக்கையும் தெய்வ பக்தி உள்ளவர்களாகவே வளர்ந்தோம்—வளர்க்கப்பட்டோம் என் அன்னையினால்.

அதோடு, எங்கள் குடும்பத்திற்கு ஒரு காலத்தில் குளிர் நிழலாக—புகலிடமாக—இருந்த கிறித்துவ உபதேசியாரின் அன்புத் தழுவலும் ஆண்டவனை நிந்திக்குமாறு என்னைத் தூண்டவில்லை. பெருந்தன்மை மிக்க அந்தக் கிழவர் தம்முடைய கிறித்துவச்

மருத்துவராக — குருடர்களுக்கு வழித்துணையாக —எல்லாரிடமும் இரக்கமுள்ளவராக — நடுநிலையாளராக—இருப்பார் என்றும் நான் உறுதியாக நம்பியதும் உண்டு.

ஆனால் .. .. .. ..

ஒரு பாவமும் அறியாத—ஒரு தீங்கும் புரியாத—என் அருமை அக்காள் உருக்குலைந்து, உடல் சிதைந்து நிற்பதைக் கண்ட போது—

'' அய்யோ! கடவுளே! உனக்குக் கண்ணே இல்லையா? கருணையே இல்லையா? என் அப்பா கும்பிடாததற்கெல்லாம் சேர்த்து வைத்துக் காலையும் மாலையும் உன்னைக் கும்பிட்டோமே! கொண்டாடினோமே! காணிக்கையெல்லாம் செலுத்தினோமே! அதற்கெல்லாம் பலனே இல்லையா? உனக்குப் பரிவே கிடையாதா? என் அக்காளின் வாழ்க்கையே இருளாகி விட்டதே! வருங் காலமே அழிந்துபோய் விட்டதே! அதற்கு ஏன் இந்தக் கொடுமை? ஏன் இந்தச் சித்திரவதை? இது உனக்கே அடுக்குமா?—என்றெல்லாம் அந்த ஆண்டவன் மீது எனக்கு ஆத்திரம் ஆத்திரமாகத்தான் வந்தது.

இனி நான் ஆத்திரப்பட்டு என்ன? ஆங்காரம் கொண்டு என்ன?

தெய்வங்களை நிந்தித்து என்ன? சிறு குழந்தையாக இருந்தபோது என் அக்காளைத் தூக்கிக் களித்தாராமே அந்த அடுத்த வீட்டுத் தொழுநோய்க்காரரை நொந்துகொண்டுதான் என்ன? பின்னர் கொல்லையிலே அதனைத் தீண்டிய புடையன் பாம்பு மீது பழிபோட்டுத்தான் என்ன?

என் அக்காளிடம் முன்பு பூத்துச் சிரித்த பழைய அழகு வரப்போகிறதா? பொலிவு வரப்போகிறதா? உருவம் வரப்போகிறதா? கண்ணிலே ஒளிதான் வரப்போகிறதா?

எல்லாமே இடிந்து, நொறுங்கி, தேய்ந்து, அழிந்து விட்டன!

இந்த மனிதப் பிறவிதான் எதற்கு? இதன்மீது இவ்வளவு கொடுமையான பிணிச்சுமைகள் தான் எதற்கு?

இனி, ஆயிரம் ஆயிரமாக நாங்கள், அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் என் அக்காளை எவனாவது மணக்கத் துணிவானா? மனம் வந்து ஏற்பானா? திரும்பித்தான் பார்ப்பானா?

நன்றாகச் செழித்து வளர்ந்து கொண்டிருந்த செந்நெற் பயிரில், கதிர்விடப்போகும் வேளையில் 'சூறைநோய்' விழுந்தால் எப்படி இருக்கும்?

என் அக்காளின் வாழ்க்கையும் அப்படித்தானே எரிந்து கரியாகிவிட்டது!

அந்தக் கோரமான வடிவத்தில் என் அக்காளைப் பார்க்கப் பார்க்க எனக்கே உயிரை விட்டு விட வேண்டும்போல் இருந்தது.

பிறகு நெடுநாட்கள் எங்கள் ஊரிலே நான் தங்கியிருக்கவில்லை.

நகரத்திற்குத் திரும்பி என் அக்காளுக்கு ஏற்பட்டுவிட்ட நரக வேதனையைப்பற்றிக் கூறிய பொழுது, உபதேசியார்—தாத்தா ஆருத் துயரத்தில் ஆழ்ந்தார். எனக்கு என்னென்னவோ ஆறுதல் மொழிகள் எல்லாம் கூறினார்.

'' நீயே உன் உள்ளத்தை உடைய விட்டுவிட்டால், பிறகு உன்னையே துணையாக நம்பியிருக்கும் உன் அன்னையின் கதியும் அக்காளின் கதியும் என்னதான் ஆவது?'' என்று —எடுத்துக் காட்டித் தேறுதல் மொழிந்தார்.

'' கவலைப்படாதே, மாதவா! இந்தக் கொடிய நோயைக் குணமாக்குவதற்கு நம்முடைய மருத்துவ விஞ்ஞானிகள் ஏதாவது கண்டுபிடிக்காமல் இருக்க மாட்டார்கள். சுவீடன் நாட்டிலே எனக்குத் தெரிந்த பாதிரி யாருக்கு இதைப்பற்றி எழுதிப் கேட்போம். அவர் எப்படியாவது உதவி செய்வார்.'' —என்று நம்பிக்கையும் ஊட்டினார் உபதேசியார் தாத்தா.

அவர் அளித்த ஆறுதலும் நம்பிக்கையும் என் மனத்திலே சிறிது மாறுதலை உண்டு பண்ணின.

என் கல்லூரிப் படிப்பும் வழக்கம்போல் தொடர்ந்தது.

வழக்கம்போல் விடுமுறை நாட்களில் நான் எனது ஊருக்கும் போய் வந்தேன்.

என் அக்காளுக்குப் பூச்சுட்டியும் விட்டேன்.

ஆனால், முன்பெல்லாம் அதனுடைய சொறி பிடித்த கையைப் பார்த்துவிட்டுப் பூவைச் சூட்டி விட்டதற்கும், இப்போது பெருநோய் வந்து குறுகிப்போன அதன் விரல்களைப் பார்த்துக் கொண்டே பூவைச் சூட்டுவதற்கும் ஒரு பெருத்த வேறுபாட்டினை உணர்ந்தேன் என் மனநிலையில். அந்தத் துயரத்தின் அழுத்தத்தைத் தாங்க முடியாமல் என் நெஞ்சம் விம்மிப் புடைத்து வீரிட்டு அழுதது உள்ளுக்குள்.

ஒரு சமயம் நான் என் அக்காளுக்குப் பூச்சூட்டி விடும் பொழுது, உடைந்த உள்ளத்துடன் என் அம்மாவே இப்படிச் சொன்னார்கள்:

'' ஏம்பா, மாதவா! எதுக்கு இப்படிப் பூ மேலே எல்லாம் காசைக் கொண்டுபோய்ப் போட்டுத் தெண்டமாக்கணும்? உன் அக்காள் இருக்கிற அழகிலே அவள் பூ இல்லையேன்னு தான் அழுகிறாளா?''

'' என்னம்மா நீங்களே இப்படிச் சொல்றீங்க?''

—என்று திடுக்கிட்டுப் போய்க் கேட்டேன் நான்.

'' பின்னே என்னப்பா? அவள் இனிமேலே பூவையோ பொட்டையோ வைத்துக் கொண்டு என்ன ஆகப்போகிறது? எவனுக்குக் கழுத்தை நீட்டப் போகிறாள்? அவளைப் பொறுத்த வரைக்குந்தான் எல்லாமே முடிஞ்சு போச்சே! . . . . . .முடிஞ்சு போச்சே!

'' இன்னொருதரம் அக்கா முன்னாலே இப்படியெல்லாம் பேசாதீங்க, அம்மா! என் அக்காளுக்குப் பூக்கள் மேலே எவ்வளவு ஆசை என்கிறது எனக்குத் தெரியாதா? . . . . இந்த உலகத்திலே நீங்கள் சொல்கிறபடியே வேறே எதைத்தான் அது ஆண்டு அனுபவிக்கப் போகிறது? எதுக்குத்தான் ஆசைப்படப் போகிறது? . . ... இருந்திருந்து கேவலம் இரண்டு முழப் பூ! ... ... அதைக்கூட அது சூடிக்கக்கூடாது என்று ஏனம்மா நீங்க தடுக்கிறீங்க?''

—இப்படிச் சொல்லும்பொழுது எனக்கே அழுகை பீரிட்டுக் கொண்டு வந்தது.

என்னைப் பார்த்து என் அக்காள், அம்மா இருவருமே விம்மி விம்மித் தேம்பினர்.

சில மணித்துளிகள் அந்தக் கண்ணீர் வெள்ளத்திலே கரைந்தன.

பிறகு, என் தொண்டையைக் கனைத்துக் கொண்டு என் அக்காளிடம் இப்படி ஆறுதலாகக் கூறினேன்:

'' நீ அழாதே, அக்கா! மேனாட்டிலிருந்து மருந்துகளை வரவழைத்தோ வேறெ எந்த வகையிலேயோ உன்னைக் குணமாக்கி விடலாம் என்று உபதேசியார் தாத்தா உறுதியாகச் சொல்லியிருக்கிறார். அப்படியே உனக்கு குணம் ஆனாலும் சரி, ஆகாவிட்டாலும் சரி; என் உயிர் உள்ளவரைக்கும் உன் ஆசைதீரப் பூக்களை வாங்கி உனக்குச் சூட்டிக் கொண்டு தான் இருப்பேன்; இது சத்தியம்! ''

—என்னுடைய சூளுரையைக் கேட்டதும் என் அன்னையார் ஏளனமாக நகைத்தார்கள்.

'' உன் சத்தியத்தைக் கேட்கும்போது எனக்குச் சிரிப்புத் தாம்பா வருகிறது! இப்போதே உன் அக்காளுக்கு நீ பூச்சூட்டுகிறதைப் பார்த்தால் அதை முறையானதாக ஊர்க்காரங்க ஒப்புக் கொள்ள மாட்டாங்க; அப்படி இருக்கிறபோது, உனக்கென்று ஒருத்தி வந்து விட்டால் அவள் எப்படி இன்னொரு பெண்ணுக்கு நீ பூச்சூட்டுவதை ஏற்றுக் கொள்வாள்—பொறுத்துக் கொள்வாள்? நானுந்தான் இனிமேலே எத்தனை காலத்துக்கு உயிரோடு இருந்து அவளுக்குப் பூச்சூட்டி விட முடியும்? அதனாலேதான், அந்த ஆசைகளையெல்லாம் இப்போதே உதறி எறிந்துவிடணும் என்று நான் சொல்ல வந்தேன்.''

'' இதோ பாருங்கள் அம்மா! என் அக்காளின் கைகள் இருக்கிற நிலையிலே அதுக்கு நான் பூச்சூட்டி விடுவதையே பொறுத்துக் கொள்ள முடியாத ஒருத்தியை நான் எதற்குத் தான் கட்டிக் கொள்ள வேண்டும்? என் இரத்தத்தின் இரத்தமான என் உடன் பிறந்த அக்காளை விட எங்கிருந்தோ வரப்போகிறவள்தான் எனக்கு உயர்ந்தவள் ஆகிவிடுவாளா? இன்னும் தெளிவாக—உறுதியாகச் சொல்கிறேன்: பெருநோய்க்கு இரையாகிவிட்ட என் அக்காளுக்குப் பூச்சூட்டிய இந்தக் கையாலே இனி இன்னொரு பெண்ணுக்கு நான் பூச்சூட்டவே மாட்டேன்; அதற்குச் சம்மதிக்காத ஒருத்தி—சகிப்புணர்ச்சி இல்லாத ஒருத்தி—எனக்குத் தேவையே இல்லை!''—என்று அழுத்தமாகவே ஆணையிட்டேன்.

(தேன்மொழி! உன் கூந்தலுக்கு அன்று நான் பூச்சூட்ட மறுத்ததற்கான காரணம் இப்தாவது உனக்குத் தெளிவாக விளங்குகிறதா?)

* * *

அடுத்தாற்போல் ஒரு விடுமுறையில் நான் ஊருக்குப் போயிருந்தபோது—

ஒருநாள் மாலை ஐந்துமணி இருக்கும்.

தெருவை ஒட்டிய எங்கள் அறையில் அமர்ந்து உருசிய நாட்டின் இலக்கிய மேதை டால்ஸ்டாய் அவர்கள் தீட்டிய 'புத்துயிர்' என்னும் புதினத்தை ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தேன்!

'பூவோ, பூ! பூவோ, பூ!' —என்று உரக்கக் குரல் கொடுத்துக் கொண்டு சென்றாள் சிறுமி ஒருத்தி.

அவளைக் கூப்பிட்டு இரண்டு முழம் மல்லிகைச் சரம் வாங்கினேன்.

என் அக்காளை அழைத்து அதன் தலைமுடியிலே பூச்சரத்தைச் செருகியபோது யாரோ இருமியவாறே எச்சிலை உமிழ்கின்ற ஒலி கேட்டது.



அறைச்சன்னல் வழியாகத் தெருப்பக்கம் என் பார்வையைத் திருப்பினேன்.

அங்கே இரண்டு மூன்று ஆட்கள் நின்று கொண்டு எங்களையே கூர்ந்து கவனிப்பது போல் தெரிந்தது.

சிறிது நேரத்தில் அந்த ஆட்கள் எங்கள் வீட்டினுள்ளே வந்து விட்டனர். அவர்களைக் கண்டதும் என்னுடைய அம்மா மிகுந்த மரியாதை அளித்து வரவேற்றார்கள்; கூடத்திலே பாயை எடுத்து விரித்து அமரச் சொன்னார்கள்; தாம்பூலத் தட்டைக் கொண்டுபோய் வைத்துப் போட்டுக் கொள்ளச் சொன்னார்கள்; அறையினுள்ளிருந்த என்னையும் அழைத்து அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள்.

வந்திருந்தவர்களுள் சற்று வயது முதிர்ந்தவராகக் காணப்பட்ட ஒருவர்,

'' என்ன காவேரியம்மா! எங்களுக்கெல்லாம் அழைப்புக் கொடுக்காமலே காரியத்தை முடிச்சிட்டீங்களே! ''—என்று வெற்றிலையை எடுத்துச் சுண்ணாம்பைத் தடவிய வண்ணமே கேட்டார்.

''நீங்க என்ன சொல்றீங்க?'' புரியாமலே வினவினார் என் அம்மா.

'' அதுதாம்மா, உங்க பையனுக்கு எங்க கிராமத்திலே பெண் பார்க்கச் சொல்லிவிட்டு, இப்போ வேறெங்கோ முடிச்சிட்டதா தெரியுதே!''

'' அதெல்லாம் ஒண்ணும் இல்லேங்க; உங்க மாதிரி அடுத்தடுத்த கிராமத்திலே இருக்கிற உறவுக்காரங்க எல்லாரையும் ஒதுக்கித் தள்ளிட்டு என் ஒரே பையனுக்கு அப்படியெல்லாம் செய்திடுவேனா?''

'' ஏம்மா பொய் சொல்றீங்க? பெண்ணும் பிள்ளையும் அந்த அறைக்குள்ளே ஒண்ணா நின்னுகிட்டு இருந்ததை நாங்க நாலுபேரும் எங்க கண்ணாலே பார்த்துவிட்டுத்தான் வருகிறோம். இவங்களையும் வேறே யாரோன்னு நினைச்சிடாதீங்க; கொஞ்ச நாளைக்கு முந்தி உங்க பையனுக்குப் பெண் பார்க்கச்

சொன்னீங்களே, அந்த வார்த்தையை நம்பி எங்க கிராமத்திலே நான் பார்த்து வச்சிருக்கிற ஒரு பெண்ணோட தாய் மாமன்தான் இவர்; இவர் சிற்றப்பா ; அவர் பெண்ணோட பெரியப்பா மகன். மாப்பிள்ளைப் பையனோட வீடு—வாசல்—மாடு—மனையெல்லாம் எப்படி இருக்குங்கிறதை அவங்களும் நேரில் பார்த்துத் தெரிஞ்சுக்கட்டுமேன்னு சாதாரணமாகத்தான் அழைச்சுக்கிட்டு வந்தேன். அவங்களும் உங்க பையன் இருந்த நிலையைப் பார்த்திட்டு அசந்து போயிட்டாங்க! நீங்க என்னடான்னா இன்னும் என் கிட்டே கதை விடுறீங்களே !''—என்று எகத்தாளமாய்ச் சிரித்தார் அந்தப் பெரியவர்.

அவருடைய வார்த்தைகளைக் கேட்டு—சிரிப்பைப் பார்த்து—என் இரத்தமெல்லாம் கொதித்தது.

என் அம்மாவோ,

'' நான் அப்போதே சொன்னேனே கேட்டியா ?''

—என்று பற்களை 'நறநற' வென்று கடித்துக் கொண்டு பார்வையால் அனலை வீசினார் என்மீது.

என் அக்காளுக்குப் பூச்சூட்டியதைப் பார்த்துவிட்டுத்தான், அந்தப் பெரிய மனிதர்கள் முடிச்சுப் போட்டுப் பேசுகிறார்கள் என்பதை நானும் புரிந்து கொண்டேன். அதற்கு மேல் நிலைமையைத் தெளிவாக்காமல் நான் இருக்கலாமா? என் அக்காளை அவர்கள் முன்னால் வரச் சொன்னேன்.

'' அய்யா, பெரியவரே, அறைக்குள்ளே என்னோடு இருந்தது இந்தப் பெண்தான் ; என் உடன்பிறந்த அக்கா! இதனுடைய கைகள் இருக்கிற நிலையிலே நான் இதுக்குப் பூச்சூட்டியதிலே என்ன தப்பு ?''—சற்றுச் சூடாகவே கேட்டேன் நான்.

'' ஏன் உங்க அம்மாவை விட்டுப் பூ வைக்கச் சொல்றது ?''—என்றார் வந்திருந்தவர்களுள் இளவட்டமான ஆள்.

'' ஏன், அண்ணன்—தம்பிகள் தங்கள் அக்கா—தங்கைகளுக்குப் பூச்சூட்டக் கூடாது என்று எங்காவது சட்டம் இருக்கிறதா ?''



**'' நீங்க படிச்ச பையனா இருக்கிறதாலே சட்டத்தைப்** பத்தியெல்லாம் பேசுறீங்க ! ஆனா, நம்ம சமுதாயத்திலே—கிராமங்களிலே—நமக்குன்னு சில பழக்க வழக்கங்களைத் தொன்று தொட்டு கடைப்பிடிச்சு வருகிறோம். அதுகளையெல்லாம் ஒரே நாளிலே மாத்திப் போட்டு விட முடியுமா ? உங்க அப்பாகூட என்னென்னமோ புரட்சியெல்லாம்தான் உங்க ஊரிலே பண்ணிப் பார்த்தார் ; கடைசியிலே அதுவே அவர் உயிருக்கு உலை வைக்கலையா ? 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்'—அப்படீன்னு திருவள்ளுவரே சொல்லியிருக்கலையா ? ......''—அந்தப் பெரியவர் இவ்வாறு எனக்குந் தேவையில்லாத அறிவுரையைப் பகரும்பொழுதே எனக்காக அவர் பார்த்திருந்த பெண்ணின் மாமன் என்று சொல்லப்பட்ட மனிதர் எரிச்சல் கொண்டவராக எழுந்து விட்டார்.

'' எதுக்கண்ணே இந்த வளவளப் பேச்செல்லாம் ? இப்படி ஒரு பெருநோய் பிடித்த பெண் இருக்கிற வீட்டிலே எவனாவது அறிவுள்ளவன் பெண்ணைக் கொடுக்க ஆசைப்படுவானா ? வாங்க, போகலாம். ''—என்று அவர் கத்தரித்துப் பேசிய சொற்களைக் கேட்டு நான் இடிந்தே போனேன்.

* * *

அடுத்த நாள் காலையிலே என் அக்காளைக் காணோம்.

தான் இருக்கிற வரையில் எனக்கு யாரும் பெண்தர மாட்டார்கள் என்கிற எண்ணத்தில்தான் அது ஓடிப்போயிருக்க வேண்டும்.

அதற்குப் பிறகு ..........

என் வாழ்க்கையில் எத்தனையோ பாதைகள்—பயணங்கள்—சூழல்கள்—சூறாவளிகள்!

சிலர் சொன்னார்கள் ;

' சென்னையில் உள்ள புகை**வண்டி நிலையங்களில்தான்** தொழுநோயாளிகள் பெரும் எண்ணிக்கையில் உறைந்து போயிருக்கிறார்கள்'—என்று.

அதனால்தான் சென்னையிலே என் அக்காவைத் தேடிக் கண்டுபிடித்து விடலாம் என்று வந்தேன். ஆனால் சென்னையோடு மட்டும் நான் நின்றுவிடவில்லை. தமிழ்நாட்டின் தலையாய நகரங்கள்—சிறப்பான ஆலயங்கள்—எங்கும்போய்த் தேடி அலைந்தேன். கால்கள் இற்றுவிழ—இடுப்பே ஒடிவதுபோல—நான் ஏறி இறங்கியதுதான் மிச்சம். என் அக்காளைக் காணவே முடியவில்லை.

ஊருக்குச் செல்லவோ அங்கே என் அக்கா இல்லாமல் வெறித்துக் கிடக்கும் எங்கள் வீட்டைப் பார்க்கவோ எனக்கு மனமே வரவில்லை.

கடைசியில், எப்படியோ சென்னையிலேயே வந்து தங்கி விட்டேன் ; வயிற்றுப்பாட்டுக்காக ஒரு நண்பரின் உதவியால் 'பேரின்பமுத்து நிறுவன'த்திலே வேலையிலும் அமர்ந்து விட்டேன்.

எத்தனையோ ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

என் அக்காளை என்னால் மறக்கவே முடியவில்லை. ; எப்படி முடியும் ?

அதனால்தான் இன்று கண்ணம்பாடி அணைக்கட்டிலே என் அக்காளைப் போலவே தோற்றம் அளித்த அந்தக் கன்னடக்காரியைக் கண்டதும் நான் என் நிதானத்தையே இழந்து ஒரு பைத்தியமாகவே ஆகி விட்டேன். ... ... ... ... ..

என் அருமை வள்ளியக்காள் இன்னும் உயிரோடுதான் இருக்கிறதோ ? இல்லை இறந்துதான் போய்விட்டதோ ? ஆனால் நான் சாவதற்குள்ளே அதைச் சந்தித்துவிட மாட்டோமா என்று என் நெஞ்சம் எப்படித் துடிதுடிக்கிறது தெரியுமா? ... ...

* * *

**மா**தவனின் நாட்குறிப்பு தேன்மொழியைக் கண் கலங்கச் செய்துவிட்டது. இனம் விளங்காத உணர்வுகள் எல்லாம் ஒன்று கூடி அவளது இதயமலரை அப்படியே பாறாங்கல்லாய் அழுத்தின.

(வளரும்)




தண்டராம்பட்டு கடை வீதி. 26—9—71 அன்று காலை வேளை .. அலங்கரிக்கப்பட்ட கார் ஒன்று.. அதோ வண்ணப் பூக்களாலும், பன்னிறத் தோரணங்களாலும் புனையப்பெற்று வந்து கொண்டிருக்கிறது. ஒலி பெருக்கியும் அதனுள் பொருத்தப்பட்டுள்ளது.

சீமான் வீட்டு மணமக்கள் ஊர்வலமா? அல்லது தேர்தல் பிரச்சாரமா? இல்லை அதன் வெற்றிப் பெருமிதமா?

''என்ன அது?'' முதியவர் ஒருவர் ஒன்றும் புரியாமல் விழிக்கிறார். அருகிலிருந்த இளைஞர் ஒருவர் அவரது ஐயத்தை அகற்றுகிறார்.

''தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு இராதாகிருஷ்ணன் அவர்களும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரும், மற்றும் எட்டுப் பேர்களும் குடும்ப நலத்திட்டப் பிரச்சாரம் செய்து கொண்டு வருகிறார்கள். அதுமட்டுமல்ல. வேலூர் பெண்ட்லண்டு மருத்துவமனை சென்று அவர்கள் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளவும் புறப்பட்டு விட்டார்கள்'' என்கிறார்.

''இதெல்லாம் எனக்கு அப்போதே தெரியாமல் போய் விட்டதே!'' என்று பெருமூச்சு விடுகிறார் பெரியவர். ஆமாம். இவரைப் போல் பலருக்கும் தெரியாமல் போய்விட்டதால் தான் இன்று இந்திய மக்கள் தொகை 56 கோடி அளவில் ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரோடிக் கிளைத்திருக்கிறது. இல்லையென்றால், பாரதி சொன்னதுபோல் அதே 'முப்பது கோடி'யே நீரில் போட்ட கல்லைப்போல் நிலைத்திருக்கும். இன்று பெருகிவிட்ட பலகோடி மக்கள் தொகையை எண்ணியெண்ணி, இன்னும் மேன்மேலும் பெருகாதிருக்க, அரசு இன்று பலகோடி ரூபாய் செலவு செய்துகொண்டிருக்கும் நிலையும் ஏற்பட்டிராது என்று நினைத்துக் கொண்டேன்.

"இப்படிக்குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்வதற்கா விளம்பரம்?'' என்று கேட்கிறார் பெரியவர்.

''விளம்பரப் படுத்தியதால் தானே உங்களுக்குப் புரிந்திருக்கிறது. அதுபோலவே மற்றவர்வர்க்கும் புரியக் கூடும். அறுவைச் சிகிச்சை செய்து அதன் மூலம் குழந்தைகள் பிறப்பைத் தடுப்பது மட்டும் அரசின் நோக்கமல்ல. அதனால் குடும்பத்தினர் அனைவரும் நலமும், வளமும் அடைய வைப்பதே பெரு நோக்கம் ஆகும். முதல்வர் கலைஞர் அவர்கள் சொல்வதுபோல் இது குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் அல்ல. குடும்ப நலத்திட்டம்.'' குடும்ப நலத் திட்டம்'' என்று நாசூக்காகப் பதிலளிக்கிறார் இளைஞர்.

''ஆகா'' என்று வியந்தபடியே போகிறார் முதியவர். மக்கள் நல்வாழ்வு பெற வேண்டுமெனில், அவர்களிடத்தே குடும்ப நலத் திட்டம் முதலில் வேரூன்ற வேண்டும் என்பதை உணர்ந்துள்ளது இன்றைய அரசு. அந்த எண்ணத்தை உறுதிப்படுத்த, வலுப்படுத்த, ஒவ்வொரு மாவட்டமும் இரண்டிரண்டு மாதங்களை எடுத்துக் கொண்டு விழாவாக எடுத்துச் சிறப்பித்து வருகிறது. அதன் அடிப்படையில் அமைந்ததே குடும்ப நலத் திட்டத் தீவிர இயக்கம் ஆகும்.

12,148·2 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டு, 37,38,273 மக்கள் வாழும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் கடந்த 1—8—1971 முதல் 31—10—1971 வரை குடும்ப









நலத் திட்டத் தீவிர இயக்கம் நடைபெற்றது.

7,51,689 தகுதி வாய்ந்த தம்பதிகள் வாழும் இம்மா வட்டத்தில் குடும்ப நலத் திட்டத் தீவிர இயக்கம் தொடங்கு முன்னர் (1961 முதல் 1–8–1971 வரை) நடைபெற்றுள்ள அறுவைச் சிகிச்சைகள் 1,08,379 ஆகும். ஆனால், தீவிர இயக்கம் ஆரம்பித்த பிறகு இரண்டு மாத காலத்தில் நடந்துள்ள அறுவைச் சிகிச்சைகள் மட்டும் 14,382 ஆகும்.

'பசுமைப் புரட்சி' என்று ஒரு புறத்தில் உற்பத்தியைப் பெருக்கி வருகின்றோம். ஆனால், இதன் முழுப்பயனை அடைய, மக்கள் உற்பத்தியைப் குறைத்தால்தானே முடியும். நாள் தோறும் வீட்டுக்கும், நாட்டுக்கும் புதிய புதிய பிரச்சினைகளை உருவாக்குவது மக்கள் தொகைப் பெருக்கமே என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இல்லை.

ஆகவே, இந்தத் தீவிர இயக்க காலத்தில் மட்டும் பெண்களுக்கான அறுவைச் சிகிச்சைகள் சுமார் 2,000-க்கும் மேலாகும். இப்படி ஏராளமான பெண்டிர்க்கு அறுவைச் சிகிச்சை செய்ததிலும், ஆடவர்க்கும் சேர்த்து மொத்தம் 15,000 அறுவைச் சிகிச்சைகள் செய்து தமிழ் நாட்டிலுள்ள மாவட்டங்களுள் வட ஆர்க்காடே முதன்மை வகிக்கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவரும், குடும்ப நலத் திட்ட மாவட்ட விளம்பர அதிகாரியும் பெருமையோடு கூறுகின்றார்கள்.

இத்துணைச் சிறப்போடு இந்த இயக்கம் வெற்றி பெறுவதற்கு, அம்மாவட்டத்தில் நடத்தப்பட்ட விளம்பர—பிரச்சாரப் பணி முக்கிய காரணம் என்றால் மிகையாகாது.

தீ பரவுகிறது. தடுத்து விடுகின்றோம். தொற்று நோய் பரவுகிறது. தடுத்து விடுகின்றோம். ஆனால், இவை எங்கோ எப்போதோ ஒரு முறை. இந்தத் தீயைவிடத் தொற்று நோயைவிட நிமிடந்தோறும் மிக வேகமாகப் பரவி வருவது மக்கள் தொகைப் பெருக்கமே.

இது ஓர் அபாய அறிகுறி . . . .!

இது ஓர் எச்சரிக்கை . . . . . .!

குழப்பம் விளைவிப்பது . . . .!

அந்நிய ஆக்கிரமிப்பைக் காட்டிலும் அபாயம் மிகுந்தது . . . . . .என்பதை நாமுணர வேண்டும். இதைத் தெள்ளத் தெளிய விளங்க வைக்கும் சிறந்த பிரச்சாரப் பணியைக் குடும்ப நலத்துறை மேற்கொண்டுள்ளது.

இந்நாளில் திரைப்படம் மிகச் சிறந்த பிரச்சார சாதனம் என்பது மறுக்க முடியாத உண்மை. 1–8–1971 முதல் 15–8–1971 வரை நடைபெற்ற விளம்பரப் பிரச்சாரப் பணியில், வேலூர் மக்கள் தொடர்பு அலுவலர், அவ்வலுவலகத்தைச் சார்ந்த செய்தி உதவியாளர், விளம்பர உதவியாளர், வேலூர், சென்னை, செங்கை மாவட்டங்களின் குடும்ப நலத் திட்ட விளம்பர அதிகாரிகள், மைய அரசின் சென்னை, சேலம் களப்பணி அலுவலர்கள் ஆகிய இந்த எண்மரும், பேரூர், சிற்றூர் தோறும் இரவு பகல் இரு வேளையும் குடும்ப நலத் திட்டத்தின் குறிக்கோளையும் சீரிய பணியினையும் மக்களிடத்தில் விளக்கி உரைத்தனர்.

> வட ஆர்க்காடு மாவட்டத்தில் குடும்பநலத் திட்டத் தீவிர இயக்கம் கடந்த அக்டோபர் திங்கள் நடைபெற்றது. அப்போது நேரில் பார்வையிட்டுக் கண்டறிந்த விளக்கம் இங்கே சுருக்கித் தரப்படுகிறது.

இவர்களுக்கு உறுதுணையாக வேலூர் மக்கள் தொடர்பு அலுவலகத்தைச் சார்ந்த திரைப் படப் பிரிவுகள் நான்கும், வேலூர் சென்னை, செங்கை மாவட்டங்களின் குடும்ப நலத் திட்ட அலுவலகத்தைச் சார்ந்த திரைப்படப் பிரிவுகள் மூன்றும் மைய அரசின் சென்னை, சேலம் களப்பணி அலுவலர்களைச் சார்ந்த திரைப்படப் பிரிவுகள் இரண்டும், கோட்டாட்சித் தலைவர்களின் பொறுப்பிலுள்ள திரைப்படப் பிரிவுகள் இரண்டும் ஆக 11 திரைப்படப் பிரிவுகள் பதினைந்து நாட்களில் ஒரு நாளைக்கு இரண்டு காட்சிகள் வீதம் 330 படக் காட்சிகள் நடத்தின. பிரச்சாரக் காலத்திற்குப் பிறகும் 50 படக்காட்சிகள் நடத்திக் காட்டி 380 படக் காட்சிகளுக்கு வழி வகுத்தன.

1. உலகுக்குத் திருக்குறள், உரிமைக்கு இரு குரல்.
2. குறளின் சிறப்புக்கு [இரண்டு அடிகள். குடும்பச் சிறப்புக்கு இரு [குழந்தைகள்.

[illegible]
கென்ருல், அதை விடுத்து வீட்டிலே உற்பத்தி பெருக்குகின்ருர்.

4. ஏழையின் சிரிப்பிலே
இறைவனைக் காண்போம்

என்றெழுதப்பட்ட 654 சிலேடுகள் மாவட்டம் முழுவதும் உள்ள திரைப்பட அரங்குகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

இப்படிப் பணயளவாகச் செய்யப்படும் விளம்பரத்தால் தினையளவு நன்மையல்ல ; அதை விடப் பெருமளவில் நன்மைகள் கிட்டி வருகின்றன என்கிருர் குடும்ப நலத் திட்ட மாவட்ட விளம்பர அலுவலர்.

'' பிறப்பைத் தடுப்பது '' என்பது தங்களது இனத்துக்கு, மதத்துக்கு மாறுபட்ட கருத்துடையது என்று இதுகாறும் கருதி வந்த கிறித்தவரும், முஸ்லீம்களும், 200-க்கும் மேற்பட்டோர் இந்தத் தீவிர இயக்க காலத்தில் தாமே முன்வந்து அறுவைச் சிகிச்சை செய்துள்ளனர் என்று பூரிப்புடன் கூறுகின்ருர் மாவட்ட ஆட்சித் தலைவர்.

''மாநிலத் திட்டக் குழு அமைத்திருக்கிறோம். இது இன்னும் விரிவாக மக்கள் அளவிலிருந்து மாவட்ட அளவிலிருந்து வர வேண்டும் என்று விரும்புகின்ருேம். அதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்கின்ருேம்'' என்று கூறும் நம் முதல்வரின் எண்ணம் ஈடேறக் குடும்ப நலத் திட்டம் முன்னோடியாக இருந்து செயல்பட வேண்டும்.

ஆகவே, குடும்ப நலத் திட்டத் தீவிர இயக்க காலத்தில், நாடகம், வில்லுப்பாட்டு, தெருக்கூத்து என 175 கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. அவ்வப்போது நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் மேதகு ஆளுநர் அவர்களும், நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்களும், உணவமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்துக் குடும்ப நலக் கொள்கைகளை விரிவாக எடுத்து விளக்கினர். இந்நிகழ்ச்சிகள் பற்றிய அறிவிப்புகள் பல தமிழ் ஏடுகளில் 66 நாட்கள் வெளியிடப்பட்டன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள, 36 ஊராட்சி ஒன்றியங்களும், 11 நகராட்சி மன்றங்களும், 13 வட்டங்களும் 38 ஆரம்பச் சுகாதார நிலையங்களும், 16 அரசினர் மருத்துவ மனைகளும், 3 தனியார் மருத்துவ மனைகளும் தீவிர இயக்கத்தில் பங்கு கொண்டன. ஒவ்வொன்றும் தத்தம் திறமையைக் காட்டின என்ருலும், தங்களுக்குத் தரப்பட்ட குறியீட்டையும் தாண்டி, நெமிலி ஊராட்சி ஒன்றியமும், அரக்கோணம் நகராட்சி மன்றமும், சத்தியவிஜயநகரம் ஆரம்பச் சுகாதார நிலையமும், திருவண்ணுமலைக் கோட்டமும் அதிகமான அறுவைச் சிகிச்சைகளைச் செய்து சாதனைகள் புரிந்து காட்டியுள்ளன.

சட்டத்தின் துணையோடு ஏழை எளிய மக்களுக்கு நிலப் பட்டா, வீட்டு மனைப் பட்டா வழங்குதல் ; தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தனிச் சலுகைகள் ; தொழி துறையில் புதிய, புதிய முயற் கள் ; மாணவர்களுக்குப் பு முக வகுப்புவரை இலவச கல்வி ; எல்லா ஊர்களுக்கு குடிநீர், வடிகால், திட்டங்கள் பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டங்கள் என்று எண்ணற் அரசின் ஆக்கப்பணிகள் அனை தும் வலிவும் பொலிவும் பெற் விளங்கக் குடும்ப நல திட்டம் முதலில் சிறப்பு வேண்டும். அது தன் இலட் யத்தில் வெற்றி பெற வேண்டும் இதை மனத்தில் கொண்டு வ ஆர்க்காடு மாவட்டம் கடந் ஒரு மாத காலத்தில் 15,00 அறுவைச் சிகிச்சைகளைச் செய் பிற மாவட்டங்களுக்கு ஓ எடுத்துக்காட்டாக விளங்குகிறது

'' அளவான குடும்பமே
ஆனந்தமான குடும்பம் '' இந்த அளவான என்பது அளவுதான் என்ன ?

கிறித்தவருக்குக் கூறப்பட் பத்துக் கட்டளைகள் போல முஸ்லீம்களுக்குச் சொல்ல பட்ட ஐந்து கட்டளைகள் போல அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் மக்களுக்குத் தந் மூன்று கட்டளைகள் போல குடும்ப நலத் திட்டத்திற்கா நம் முதல்வர் கலைஞர் அவ கள் தந்த ஒரே ஒரு கட்டளை தான்.

'' நாம் இருவர்—
நாம் பெறுவதும் இருவர்''

—இளங்கோ

## பிழைபட எழுதேல்!

### அக்கறை

அக்கறை என்னும் சொல்லைப் பயன்படுத்துவதில் பலர் அக்கறை காட்டுவதில்லை—அக்கரை என்றே பலரும் எழுதி வருகின்றனர். அக்கரை என்பது அந்தக் கரை என்றே பொருள்படும். அது, ஈடுபாடு கவனம் என்னும் பொருளில் வராது. எனவே, ஈடுபாடு கவனம் என்னும் பொருள்பட வேண்டுமானல் அக்கறை என்றே எழுத வேண்டும்—அக்கறையும் அக்கரையும் ஒன்றன்று.

### பசுப்பால்

பசுவின் பால் என்பதனைப் பசும்பால் என்றே பலர் எழுதுகின்றனர். பசும்பால் என்ருல், பசுமை+பால்= பசுமையான பால் என்றுதான் பொருள்படும். பசுவின் பால் என்பதை புணர்த்துப் பசு+பால் பசுப்பால் என்றுதான் எழுதவேண்டும். பசுப்பால்தான் பசுவின் பால்.

"அகிலமெங்கும் வாழும் மனித இனத்தில் ஆறில் ஒரு பங்கைக் கொண்டுள்ள இந்தியாவில், பெருகிவரும் மக்களினத்திற்குத் தேவையான உணவை எதிர் காலத்தில் வழங்க முடியுமா?''

இப்படியொரு ஐயம் பலநாட்டைச் சேர்ந்த அரசியல் வாதிகள், அறிஞர்கள், அறிவியல் வித்தகர்கள், பொருளாதார வல்லுநர்கள் ஆகியோர் உள்ளத்தில்

''இந்தியாவிலேயே, இந்தியாவிற்குத் தேவையான உணவை உற்பத்தி செய்ய முடியாதா?'' என்னும் கேள்வி ஓர் இளம் இந்திய வேளாண்மை விஞ்ஞானியின் உள்ளத்தில் எழுந்தது.

''முயற்சி திருவினை ஆக்கும்'' என்ற அவரது தாய்த்திருநாடாம் தமிழ் நாட்டின் முதுமொழி நினைவுக்கு வந்தது. முயற்சியில் ஈடுபட்டார். பிறநாட்டில்



# சாமிநாதன் சேவை சமுதாயத்திற்குத் தேவை!

ண்ட நாட்களாக நிலவி வந்தது: ந்த ஐயம் நாளுக்கு நாள் வளர்ந்து, ந்தியாவின் எதிர்காலம் மிகவும் யங்கரமாக இருக்கும் என்று அவர்களை ண்ண வைத்தது. அவர்கள் அந்த ண்ணத்தை எழுத்தின் மூலமும், பச்சின் மூலமும் வெளிப்படுத்தி ந்தனர்.

அவர்கள் கூறிய அபாய அறிவிப்பைக் கட்டு இந்திய அரசுக்கு உள்ளூரப் யமேற்பட்டதால், உணவு உற்பத் யைப் பெருக்கும் முயற்சிகளில் தீவிரக் வனம் செலுத்த முன் வந்தது.

வளர்ந்துள்ள அறிவியலை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சியில் நாட்டம் செலுத்தினர். ஆராய்ச்சி தொடங்கிய சில நாட்களிலேயே, அவருக்குத் தன் முயற்சி வெற்றி பெறும் என்னும் நம்பிக்கை ஏற்பட்டது.

''இந்தியாவில் பெருகிவரும் மக்களினத்திற்குத் தேவையான உணவை— அதுவும் குறிப்பாக ஊட்டச் சத்து மிகுந்த உணவை இந்தியாவிலேயே உற்பத்தி செய்ய முடியும்'' என உலகுக்கு அறிவித்தார். அவரது அறிவிப்பைக் கேட்டுப் பலர் 'பைத்தியக்

பகல் முழுதும்
கடினமான வேலைக்குப் பிறகு...

புத்துயிரளிக்கும்
நெஸ்கா:பே ஒரு கப்
அருந்துங்கள்
– 5 செகண்டில் தயார்!











NCE 6369

# நெஸ்கா:பே

உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே
ஊக்கமளித்திடும் நெஸ்கா:பே!

முற்றிலும் சுத்தமான காப்பி–
தென்னிந்திய காப்பி
விதைகளிலிருந்து
தயாரிக்கப்பட்டது

ஒரு நெஸ்லே தயாரிப்பு

காரத்தனம்'' எனக் கேலி பேசினர்; பலர், ''வீண் முயற்சி'' என்று விதண்டாவாதம் பேசினர். இவ்வாறு பேசியவர்களில் பெரும்பாலோர் நமது நாட்டவர் என்பதே வேதனைக்குரியது. இந்திய அரசும் இவரது கூற்றை நம்பத்தயங்கியது. ஆனாலும் ஊக்கம் இழந்துவிடவில்லை.

''ஊக்கமது கைவிடேல்'' என்ற பழமொழிக்கிணங்க, உள்ளம் உடையாது உறுதியோடு ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அவரது ஊக்கத்தைத் தூண்டுவதாக, அவருடன் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஆராய்ச்சியாளர்களின் ஒத்துழைப்பு இருந்தது. காலச் சக்கரம் சுழன்று ஓடியது. கடைசியில் ''முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்'' என்பதற்கேற்ப வெற்றியும் பெற்றார்.

குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் அளிக்கும் ஊட்டச் சத்து மிகுந்த குட்டை ரகக் கோதுமையைக் கண்டுபிடித்தார். அதன் பின்புதான் அவருடைய திறமையை இங்குள்ளவர்கள் உணர முற்பட்டனர்.

அப்பொழுது இந்திய அரசின் வேளாண்மை அமைச்சராக இருந்த திரு சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு அந்த இளம் வேளாண்மை விஞ்ஞானியிடம் நம்பிக்கை ஏற்பட்டது; உணவு உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களைத் தீட்டச் சொன்னார்.

உயர் விளைச்சல் ரகத் திட்டம் (High yielding varieties programme) உருவாகியது.

உயர் விளைச்சல் ரகத் திட்டத்தினால் ஏற்படவிருக்கும் நன்மைகளை உணர்ந்து கொண்ட திரு சி. சுப்பிரமணியம் அவர்கள், ''உயர் விளைச்சல் ரகங்களை ஏற்றுக்கொண்டு சாகுபடி செய்ய உழவர் பெருமக்கள் முன் வருவார்களா ?'' என்றார்.

ஆராய்ச்சியில் கண்ட பலனை நாட்டின் ஏழை எளிய உழவர்களுக்கும் விளக்கி உயர் விளைச்சல் ரகங்களில் நம்பிக்கை ஏற்படுத்துவதற்காகத் தேசீய செயல் விளக்கம் ( National Demonstration ) அமைக்கும் திட்டத்தை அந்த விஞ்ஞானி உருவாக்கினார். அத்திட்டத்தின்படி ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி நிலையத்தை விட்டு வெளியே சென்று, உழவர்களின் வயலிலேயே செயல் விளக்கத்தளைகள் அமைத்து உயர் விளைச்சல் தரும் தானிய வகைகளின் நன்மையை விளக்கிக் காட்டினர். அதன் பயனாய் உழவர்கள் தெளிவு பெற்று உயர் விளைச்சல் ரகங்களைப் பெரும்பரப்பில் சாகுபடி செய்ய முற்பட்டனர். உயர் விளைச்சல் ரகச் சாகுபடியால் இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி பெருகியது.

அந்த விஞ்ஞானி அடுத்து மானாவாரி சாகுபடி மேம்பாட்டுத் திட்டத்தையும் (Dry-and development scheme) உருவாக்கினார். பலபயிர் சாகுபடித் திட்டமும் (Multiple cropping scheme ), சிறு நிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டமும் (Small farmers development scheme) அந்த விஞ்ஞானியின் சிந்தையில் உருவாகியவையே!

அவருடைய அரும் முயற்சியால் டெல்லிக்கு அருகில் உள்ள ஒரு கிராமம், டெல்லி மாநிலத்திற்குத் தேவையான தரமான விதைகளை உற்பத்தி செய்து கொடுக்கும் கிராமமாக வளர்ச்சி பெற்றது.

பிலிப்பைன்சு நாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவர் '' ரமோன் மாக்சேசே '' அவர்கள் நினைவாக சமுதாயத் தலைமைப் பொறுப்பேற்றுச் செயற்கரிய செய்துள்ளவர்களுக்கு அளிக்கப்படும் பரிசு (Award for community Leadership ) அந்த இளம் விஞ்ஞானிக்குக் கொடுக்கப்பட்டது. ஆசியாவின் நோபெல் பரிசு ( Asian Nobal Prize ) என்று புகழப்படும் ''மாக்சேசே'' பரிசை அவர் 1971-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ஆம் நாள் மணிலா கில்டன் எனும் இடத்தில் நடைபெற்ற பரிசு அளிப்பு விழாவில் பெற்றுக்கொண்டார்.

ரூபாய் 75,000 பரிசுத் தொகையும், கேடயமும் அவருக்கு வழங்கப்பட்டது.

அந்த விஞ்ஞானியைப் பாராட்டுவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவு அமைச்சர் திரு சி. பா. ஆதித்தனார் அவர்கள் முன்னின்று ஒரு பாராட்டு விழாவை ஏற்பாடு செய்தார். தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையின் சார்பாக, 15-11-1971 அன்று, சென்னை தீவுத் திடலின் எதிரே அமைந்துள்ள கூட்டுறவு ஒன்றியம் கட்டடத்தில் ஓர் பாராட்டு விழா நடைபெற்றது. அந்தப் பாராட்டு விழா மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் அன்பில் தருமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

''யார் அந்த விஞ்ஞானி?'' எனக் கேட்கத் தோன்றுகிறதா?

டெல்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநராகப் பணியாற்றும் டாக்டர் சாமிநாதன் அவர்களே அந்த விஞ்ஞானி.

''வழக்கமாகவே நம்மவர்களின் திறமையை உணர்ந்துகொள்வதில் நாம் பின்தங்கியே உள்ளோம். பிற நாடுகள் நம்மவர்களின் திறமையைப் பாராட்டிப் புகழும்வரை, நம்மவர் திறமையை நாம் உணராமல் இருக்கின்றோம். இந்த நிலை மிகவும் வருத்தப்படக் கூடியதொன்றாகும். எடுத்துக்காட்டிற்குச் சொல்ல வேண்டுமானால் டாக்டர் எம். என். சாமிநாதன் அவர்கள் திறமையை நாம் உணராமல் இருந்துவிட்டோம். அவரது திறமையை நாம் பாராட்டத் தவறிவிட்டோம். அவர் ''மாக்சேசே'' பரிசு பெற்ற பின்புதான் நாம்

# முன்னேற்றத்திலும் செழிப்பிலும் எமது பங்கு

# TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழி-ற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

## தொழில்

* கட்டுமான கட்டமைப்புகள்
* தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
* எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக் கப்பட்ட உறுப்புகள்
* மின் தடுப்புச் சாதனங்கள்
* விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
* இனுமல், டிசிசி கம்பிகள்

## விவசாயம்

* வேளாண்மைக் கருவிகள்
* பயிர் பாதுகாப்பு கருவிகள்
* டிராக்டர் தொடர்பு வண்டி
* மோட்டார் விசை யேற்றங்கள்
* கரும்பாலை
* வடிமுனைக் குழாய்கள்

## அன்றாட உபயோகப் பொருட்கள்

* எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
* மருத்துவமனை சாமான்கள்
* கதவுகளுக்கான பூட்டு
* தாழ்ப்பாள்கள்
* சுகாதார வசதி பொருட்கள்
* பீங்கான் பொருட்கள்
* காலணிகள்
* தோலணிப் பொருட்கள்

## ஏற்றுமதி

* பல வண்ண சாதாரண தோல்கள்
* நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
* கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

# தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

துள்ளோம். ஒன்றுமே செய்யா திருப்பதைவிட காலங்கடந்து செய்வது சிறந்தது (Late is better than never) என்ற பழமொழிக் கேற்பவே இப் பாராட்டு







விழாவை ஏற்பாடு செய்துள்ளோம்'' என்று வரவேற்புரை நிகழ்த்திய மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் சி. பா. ஆதித்தனார் அவர்கள் மிகவும் உருக்கமாகக் குறிப்பிட்டார்.

''தமிழ்நாட்டில் போதிய மழை வளம் இல்லை; நிலத்தின் அடியில் உள்ள நீரை வெளியே கொண்டுவந்து பசுமைப் புரட்சியைத் தீவிரப்படுத்தத் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது. எனவே, கிடைக்கும் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகளைப் பற்றியும் குறிப்பிட்ட பாசன முறைக்கு எந்தப் பயிர் மிகவும் ஏற்றது என்பதையும் ஆராய்ச்சி செய்து, அதை உழவர்களிடையே பரப்புவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று டாக்டர் சாமிநாதன் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.



... அவர் வேளாண்மையில் தலை சிறந்த ஒரு நிபுணராகும்'' என்று குறிப்பிட்டு விட்டு, ''தமிழ்நாடு அரசுச் சார்பாகவும், தமிழ்நாட்டின் மக்கள் சார்பாகவும் டாக்டர் சாமிநாதன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்றார் மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள்.

''டாக்டர் சாமிநாதன் சமுதாயத்திலே உயிரைப் பாதுகாக்கும் முறையில் இருந்து வேறுபட்டுப் பயிரைப் பாதுகாக்கும் முறைக்கு வந்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கதாகும். அவர் நம்மவர், நம் நாட்டைச் சேர்ந்தவர் என்பதைவிட, எங்கள் சோழமண்டலத்தைச் சேர்ந்தவர் என்பதைச் சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். டாக்டர் சாமிநாதனுக்கு உலகப் பரிசு கிடைத்திருக்கிறது என்றால், இதில் அவரைவிட நமக்குத் தான் பெருமை அதிகம்''.

'தமிழன் என்றோர் இனம் உண்டு

தனியே அவர்க்கொரு குணம் உண்டு'

என்பார்கள். அதற்கேற்ற வகையில் தமிழனுக்குத் தனித்திறன் உண்டு என்பதை அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

''அவரை உலகம் பாராட்டிய பின்தான் நாம் இன்று பாராட்டுகிறோம். முன்னாலேயே அவரை நாம் பாராட்டி இருக்கவேண்டும்.

''அடுத்த வீட்டுக்காரனின் அருஞ்செயலை அமெரிக்கர்கள் பாராட்டினாலும் பக்கத்து வீட்டுக்காரர்கள் பாராட்ட முன்வராத நாடு இது. பாராட்டாவிட்டாலும் பழியாவது கூறாமல் இருப்பார்களா என்றால் இல்லை. இது பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். நம் நாட்டில் பிறந்தவர்களைப் பாராட்டுவதில் கூட நம்மவர்களுக்கு பஞ்சைப் புத்தி தான் இருக்கிறது என்பார்.

''செயற்கரிய காரியம் செய்துள்ளவர்களைப் பாராட்டாவிட்டால் நாம் கடமை தவறியவர்களாவோம். எனவே, டாக்டர் சாமிநாதன் அவர்களை முதன் முதலில் நாம் பாராட்டத் தவறிவிட்டோம். நாம் பாராட்டியதற்குப் பின்புதான் மற்றவர்கள் பாராட்டியிருக்க வேண்டும்'' என்று பாராட்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் அன்பில் தருமலிங்கம் அவர்கள் கூறினார்.

அவர் தமிழ்நாடு வேளாண்மைத்துறையின் சார்பில் டாக்டர் சாமிநாதனுக்கு நெல்மாலை அணிவித்து வெள்ளிக் கேடயம் ஒன்றை பரிசாக வழங்கினார்.

''வெளிநாட்டில் உலகப் பரிசு பெற்றபோது கூட ஏற்படாத ஒரு மகிழ்ச்சியை, தாய்நாட்டில் பாராட்டுப் பெறுகிற இந்த நேரத்தில் அடைகிறேன்'' என்று டாக்டர் சாமிநாதன் குறிப்பிட்டார்.

டாக்டர் சாமிநாதன் அவர்கள் 7-8-1925 அன்று ...தையில் டாக்டர் சாம்பசிவன்—...கம்மாள் அவர்களது புதல்வராய்ப் பிறந்தார். ஆரம்பக் கல்வியைக் குடந்தையிலேயே முடித்துக்கொண்ட இவர் 1944-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியில் சேர்ந்தார். 1947-ல் பி.எஸ்சி. (வேளாண்மை) பட்டம் பெற்ற இவர் டெல்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்படிப்பிற்காகச் சேர்ந்தார்.

1948-ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பதவிகளுக்கான போட்டித் தேர்வு எழுதித் தேர்வு பெற்றார். ஐ.பி.எஸ். பதவியில் அமர்ந்து பணியாற்றுமாறு அவருக்கு அரசு ஆணை கிடைத்தது. ஆனால், இவர் அந்தப் பதவியை விரும்பாமல், அதே சமயத்தில் கிடைத்த 'யுனெஸ்கோ' படிப்பு உதவித் தொகையைக் கொண்டு நெதர்லாண்டிலுள்ள வேகன்னிங்கன் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மேற்படிப்புப் படித்தார்.

அதன்பின் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்து 1952-ல் பி.எச்டி. பட்டம் பெற்றார். பிறகு அமெரிக்காவில் உள்ள 'விஸ்கான்சின்' பல்கலைக் கழகத்தில் இனவழி ஆய்வியல் பிரிவில் பணியாற்றினார். 1954-ஆம் ஆண்டில் இந்தியா திரும்பி, கட்டாக்கில் உள்ள மைய நெல் ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றினார். அதே ஆண்டில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் உயிரணு ஆய்வியல் வல்லுநராகச் சேர்ந்தார். தனது அயராத உழைப்பினால் 1961-ஆம் ஆண்டில் தாவரவியல் தலைவராகப் பொறுப்பேற்ற அவர் 1966-ஆம் ஆண்டில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநராகப் பதவி உயர்வு பெற்றார்.

இவர் சிவப்பு நிறமாக உள்ள கோதுமையை, அம்பர் நிறத்திற்கு மாற்றி, 10.5 சதபுரதச் சத்தும், 3 சத லைசின் சத்தும் அடங்கிய சர்பதி சோனரா என்ற மிகு விளைச்சல் தரும் குட்டை ரகக் கோதுமையை உருவாக்கியுள்ளார். ஆனால் இச்சாதனைக்குத் தான் மட்டும் காரணமல்ல, தனது உதவியாளர்களே காரணம் என்று பெருமையுடன் கூறிக்கொள்ளும் அவரிடம் எனது ஆசையைத் தெரிவித்தேன்.

''தாங்கள் இன்னும் பல புதுமைகளை ஏற்படுத்தி விரைவில் நோபல் பரிசும் பெற்று தமிழனின் திறமையை, இந்தியாவின் பெருமையைத் தரணியெங்கும் பரப்ப வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தேன். அவர் அமைதியாக இருந்தார். ''இது என் ஒருவனின் வேண்டுகோள் மட்டுமல்ல பல்லாயிரக் கணக்கானவர்களின் விருப்பமும் ஆகும் என்றேன். ''முயற்சிக்கின்றேன்'' என்றுகூறி முறுவலித்தார்.

உழவர் சமுதாயத்தின் உயர்வுக்கு வழி வகுத்த ஒரு நிபுணரைச் சந்தித்ததில் எனக்கு முழுத் திருப்தி!



# சிறுவர் கலைவிழா

இவ்வாண்டு சென்னையில் நடைபெற்ற சிறுவர் கலை விழாக்களில் குறிப்பிடத்தக்க சிறப்புடன் இருந்தது, சென்னை வானொலிச் சிறுவர் கலைவிழா.

நேரு அவர்களின் பிறந்த நாளாகிய நவம்பர்த் திங்கள் 14-ஆம் நாள் குழந்தைகள் நாளாகக் கொண்டாடும் மரபின்படி, நவம்பர் 14-ஆம் நாள் வானொலியில் ஒலிபரப்ப, நவம்பர் 11-ஆம் நாள் சென்னை சங்கீத அகாடமி அரங்கில் ரசிகர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தக் கலை விழாவைச் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மகராஜன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

குழந்தை வித்துவான்களின் நாதசுர இன்னிசையுடன் துவங்கிய இந்த ஆண்டின் விழாவில் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம், குஜராத்தி, வங்காளம் ஆகிய மொழிகளில் பாடல்கள், நாட்டியங்கள், நாடகம் முதலிய பலவகை நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டிருந்தன.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா இயற்றியுள்ள 'மனிதருள் மாணிக்கம்' என்ற பலகுரல் பாடல், என். வி. சந்தானம் எழுதியுள்ள 'நிதானம் பிரதானம்' என்ற நாடகம், தணிகை உலகநாதரின், 'ஒரு நாள் வேலை' என்ற அபிநயப் பாடல், வி. ஆர். ராஜனின் விகடக் கச்சேரி, சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டு, ராஸ்கர்பா நடனம், பெசன்ட் தியாசுபிகல் பள்ளி மாணவ மாணவியர் நிகழ்த்தும் 'காலையில் கண்ணன்', பாம்பாட்டி நடனம், அம்புலி ஆராய்ச்சி பற்றிய கதாகாலசேபம், சிறுவர் கலைப்பூங்காவின் தாள வாத்தியக் கச்சேரி, கணேஷ் வானொலிச் சிறுவர் சங்கம் அளிக்கும் காவடி ஆறுபடைவீடு நடனம், பத்மாலயா குழுவினரின் சிங்கன்-சிங்கி நடனம், பஞ்சாப் நாட்டுப்புற சித்தா நடனம், கன்னட நாட்டு அறுவடை விழாப்பாடல் முதலியன இடம் பெற்றன.

அனைத்தும் சுவைக்கத்தக்க விதத்தில் இருந்ததைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.




நீங்கள் எல்லாரும் இங்கே கூடுனதை யாரும் சொல்லலியே? வேலன்தான் வந்து சொன்னான்!
வேலனுக்கும் நாங்க சொல்லலே அண்ணா!
ஏன் எங்களுக்குத் தெரியாமே கூட்டம் நடத்தத்
திட்டம் போட்டிருந்தீங்களா?
முள்ளே முள்ளாலேதானே அண்ணா எடுக்கணும்?
அண்ணா! மன்ற ஆண்டு விழா ஒழுங்காக நடப்பது இவர்களுக்குப் பிடிக்க வில்லை அதை எதிர்க்கத்தான் இப்படி.....
ஏன் வேலா உன்னைப் போல எல்லாரையும் நினைக்கிறே... நாங்க கவலைப்படுவது முத்துவைப் பற்றி....
அப்பொழுது இளங்கோ வருகிறான்...
அண்ணன் காட்டிய வழி
11
முத்து இங்கேயும் வரமாட்டானாம்!
கதை: நம்பியின்தம்பி. படம்: குமார்
உண்மையாகவா?
முத்து ஒரே பிடிவாதமாக இருக்கிறான்!
முத்துவே அப்படி இருக்கும் போது உங்களுக்கு என்ன? வேலன் சொல்றபடி நடந்து கொள்ளுங்க!
சரி அண்ணா!
அண்ணா வரும் வரைக்கும்தான் நாம் வீரமா பேசிக்கிட்டு இருந்தோம்.... இப்போ எல்லாரும் தலையை ஆட்டுறோம்!
தொடரும்

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்)
# வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவமனைக்குத் தேவையான உணவுப் பொருள்கள் முதலிய வற்றை சப்ளை செய்வதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள்.

1972 ஏப்ரல் 1ஆம்தேதிமுதல், அல்லது ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் அதிகாரியால் ஒவ்வொரு விஷயத்திலும் திட்டமாக நிர்ணயிக்கப்படும் தேதியிலிருந்து தொடங்கி 1973 மார்ச்சு 31-ஆம் தேதி முடிய உணவுப் பொருள்கள் மற்றும் இதர மருத்துவமனை அவசியப் பொருள்கள் வழங்குவதற்கானமுத்திரையிட்ட ஒப்பந்தங்கள் தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவமனையின் கண்காணிப்பாளரால் மாநில ஆளுநரின் சார்பில் அவரது உத்தரவின்படி அவருக்காக 1972 ஜனவரி 3-ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

1971 டிசம்பர் 3-ஆம் தேதி முதல் அலுவலக எல்லா வேலை நாட்களிலும் காலை 10—30 முதல் மாலை 5-00 மணிவரை ஒப்பந்த பாரமும் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரதியும் தேவைப்படும் பொருள்களின் அட்டவணையும் இராசா மிராசுதார் மருத்துவமனை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் பாரத்திற்கான விலை ரூபாய் ஐந்தும் இதற்கான விற்பனைவரி சர்சார்ஜ் உட்பட 0·20 காசும் முறையே ''XXIII Medical Miscellaneous'' என்றும் ''XII Sales Tax Receipt Under the State Sales Tax Act—General Sales Tax'' என்ற தலைப்புக்களில் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா விலோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எந்தக் கிளையிலுமோ அல்லது அரசாங்க கருவூலம் எதிலுமோ தமிழ்நாடு அரசின் கணக்கில் செலுத்தியதற்கான சலான்களுடன் மேலே குறிப்பிட்ட ஒப்பந்தப் பாரங்களைப்பெற மனு செய்து, பெற்றுக் கொள்ளவேண்டும்.

ஒப்பந்ததாரர்கள் தங்கள் ஒப்பந்தங்களை கண்காணிப்பாளர் இராசா மிராசுதார் மருத்துவ மனை, தஞ்சாவூர்-1 (தமிழ்நாடு ஆளுநர்க்காக) என்று விலாசமிட்டு அனுப்பும்படியாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் ரொக்கமாக பணம் ஏற்கப்படமாட்டாது.

குறிப்பு :—(1) 1971 அக்டோபர் 1-ஆம் தேதிக்குப் பிற்பட்டு, தாசில்தார் ஒருவரால் கையெழுத்திடப்பட்ட நிர்ணய பாரத்திலமைந்த சால்வன்சி சர்டிபிகேட்டோ அல்லது கெஜட் பதிவுபெற்ற அதிகாரி ஒருவரால் சரியான முறையில் அத்தாட்சி இடப்பட்ட அதன் உண்மை நகலோ ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் சேர்ந்து அனுப்ப வேண்டும்.

(2) ஒப்பந்தத்தின் தொகை மதிப்பு ரூ. 10,000-க்கு அதிகப்படுமானல் வருமான வரி ஒப்பாய்வு சர்டிபிகேட்டை தாக்கல் செய்ய வேண்டும்.

(3) ஒப்பந்தத்தின் தொகை மதிப்பு ரூ. 1,000-க்கு மேலானல் விற்பனை வரி கணக்குத் தீர்ப்பு சர்டிபிகேட்டை ஒப்பந்தத்துடன் சேர்த்துத் தாக்கல் செய்ய வேண்டும்.

(4) தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரி ஒருவரிடமிருந்து அல்லது தாசில்தார் சார்பில் தலைமையக டெபுடி தாசில்தாரிடமிருந்து) 1971 அக்டோபர் 1-ந் தேதிக்குப் பிறகு பெறப்பட்ட ஒரு நேஷனலிட்டி சர்டிபிகேட்டை அல்லது கெஜட் பதிவு பெற்ற ஒரு அதிகாரியால் அத்தாட்சி இடப்பட்ட அதன் உண்மை நகலை ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் சேர்த்து அனுப்பவேண்டும்.

டாக்டர் **டி. பூபதி, எம்.டி.**

கண்காணிப்பாளர்,
இராசா மிராசுதார்
மருத்துவமனை தஞ்சாவூர்.

(த. 24)

### ஜீப் பொது ஏல விற்பனை

தஞ்சாவூர் மாவட்டம், ஆவுடையார் கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குரிய ஜீப் எம்.எஸ்.ஒய். 9821-ஐ 1971 டிசம்பர் 10-ந் தேதி அன்று தஞ்சாவூர் மாவட்ட அபிவிருத்தி அலுவலரால் தஞ்சாவூர்மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் மாலை 3-00 மணிக்கு பொது ஏலத்தில் விற்கப்படும். ஷி ஜீப்பைப் பார்வையிட விரும்புபவர்கள் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் பார்வையிடலாம். ஏல சம்பந்தமான விதிகளைக் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**டி. செல்லையா,**

மாவட்ட அபிவிருத்தி
அலுவலர் 1.,
பனகல் கட்டடம்,
தஞ்சாவூர்.

(த.1)

### உதகமண்டலம் நகராட்சி

1971-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 15-ஆம் தேதி புதன் கிழமை மாலை 3·30 மணிக்குள் டைகர்ஹில் அணைக்கட்டைப் பழுதுபார்ப்பதற்கும் மராமத்து செய்வதற்கும் உதகை கமிஷனர் அவர்களால் ஒப்பந்தங்கள் வாங்கப்படும். ஒப்பந்த நிபந்தனைகளும் ஒப்பந்தப் பத்திரங்களும் 13—12—1971 மாலை 4·00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 10·30 செலுத்தி அன்று மாலைக்குள் ஒப்பந்தப் பத்திரங்களை முனிசிபல் பொறியாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 10·30, 13—12—1971-ஆம் தேதிக்குள் முனிசிபல் கருவூலத்தில் செலுத்தப்படவேண்டும்.

**ஆணையர்,**

உதகமண்டலம். நகராட்சி.

(த;28)

## ஒப்பந்தப் புள்ளி

மேட்டூர் மின் இயக்குத் திட்டம், மேட்டூர் அணை-1.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பொருட்டுக் கீழே காணும் பொருட்களை வழங்குவதற்கான மூடிமுத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தங்கள் அடியிற் கையொப்பமிட்டவரால் மேட்டூர் அணை-1-ல் உள்ள அவரது அலுவலகத்தில் முடிவு நாள் பிற்பகல் 1 மணிவரைபெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும் பெயரும். | அளவு. | சாமான்கள் விநியோகிக்க வேண்டிய இடம். | முடிவுத் தேதி. |
|---|---|---|---|
| 1. ஓ.டி.எஸ்./1/71-72 ஜி. ஐ. பைப்புகள் 20 மி.மீ. | 10,000 மீட்டர்கள். | மேட்டூர் அணை-1. | 20-12-1971 |
| 2. ஓ.டி.எஸ்./2/71-72 ஜி. ஐ. பைப்புகள் 20 மி.மீ. | 10,000 மீட்டர்கள். | சேலம். | ஷை |
| 3. ஓ.டி.எஸ்./3/71-72 ஜி. ஐ. பைப்புகள், 25 மி.மீ. | 10,000 மீட்டர்கள். | மேட்டூர் அணை. | ஷை |
| 4. ஓ.டி.எஸ்./4/71-72 ஜி. ஐ. பைப்புகள், 32 மி.மீ. | 20,000 மீட்டர்கள். | ,, | ஷை |
| 5. ஓ.டி.எஸ்./5/71-72. ஜி. ஐ. பைப்புகள், 40 மி.மீ. | 10,000 மீட்டர்கள். | ,, | ஷை |
| 6. ஓ.டி.எஸ்./6/71-72 எம். எஸ். பட்டைகள் 25 × 3 மி.மி. | 25 மெட்ரிக் டன்கள். | ,, | ஷை |
| 7. ஓ.டி.எஸ்./7/71-72 எம். எஸ். பட்டைகள் 25 × 6 மி.மி. | 25 மெட்ரிக் டன்கள். | ,, | ஷை |
| 8. ஓ.டி.எஸ்./8/71-72 எம். எஸ். பட்டைகள் 32 × 10 மி.மி. | 25 மெட்ரிக் டன்கள். | ,, | ஷை |
| 9. ஓ.டி.எஸ்./9/71-72 எல். டி. பின் இன்சுலேட்டர் (ஷெல் மட்டும்). | 5,000 டஜன். | ,, | ஷை |
| 10. ஓ.டி.எஸ்/10/71-72 எல். டி. பின் இஞ்சுலேட்டர் (ஷெல் மட்டும்). | 5,000 டஜன். | சேலம். | ஷை |
| 11. ஓ.டி.எஸ்./11/71-72 ஜி. ஐ. எல்.டி. பின்ஸ் 250 × 16 மி.மி. | 2,500 டஜன். | மேட்டூர் அணை. | ஷை |
| 12. ஓ.டி.எஸ்./12/71-72 ஜி. ஐ.எல். டி. பின்ஸ் 250 × 16 மி.மி. | 2,500 டஜன். | சேலம். | ஷை |
| 13. ஓ.டி.எஸ்./13/71-72 எல். டி. சேக்கில் இன்ஸ்லேட்டர் (ஷெல் மட்டும்). | 5,000 டஜன். | மேட்டூர் அணை. | ஷை |
| 14. ஓ.டி.எஸ்./14/71-72 எல். டி. சேக்கில் இன்ஸ்லேட்டர் (ஷெல் மட்டும்). | 5,000 டஜன். | சேலம். | ஷை |
| 15. ஓ.டி.எஸ்./15/71-72 எல்.டி. செக்கில் இன்சுலேட்டருக்கு வேண்டிய ஹார்டுவேர்கள். | 2,500 டஜன். | மேட்டூர். | ஷை |
| 16. ஓ.டி.எஸ்./16/71-72 எல். டி. செக்கில் இன்சுலேட்டருக்கு வேண்டிய ஹார்டுவேர்கள். | 2,500 டஜன். | சேலம். | ஷை |

சாற்றுக்குறிப்புப் பிரதி ஒன்றுக்கு ரூ. 5 [(ரூபாய் ஐந்து மட்டும்) (திருப்பித்தரத்தக்க தல்ல)] பணம் அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ மேட்டூர் மின் இயக்கத்திட்ட தலைமைக் கணக்காயரிடம் (செலவினம்) செலுத்தி 17-12-1971 தேதி வரை மட்டும் பெற்றுக்கொள்ளக் கோரப்படுகிறது. வேண்டிய சாற்றுக் குறிப்பின் எண் விவரமாக இருக்க வேண்டும். அஞ்சல் மூலமாக பணம் அனுப்பினவர்களுக்கு சாற்றுக் குறிப்புகள் சாதாரண தபாலில் (under certificate of posting) தான் அனுப்பப்படும். சாற்றுக் குறிப்புகள் கிடைக்காவிட்டாலோ அல்லது தாமத மாகக் கிடைத்தாலோ தமிழக மின்சார வாரியம் பொறுப்பேற்காது. மேற்படி சாற்றுக் குறிப்புகள் பிறருக்கு மாற்றிக்கொள்ளத் தக்கதல்ல.

ஒவ்வொரு குத்தகை ஒப்பந்தத்திற்கும் ரூ. 250 (ரூபாய் இருநூற்றம்பது மட்டும்) கட்டுத்தொகையாக மேட்டூர் மின்திட்ட அலுவலகத்தில் நேரில்செலுத்தி ரசீது பெற்றோ அல்லது ஷெட்யூல்டு வங்கியில் செலுத்திய (Demand draft) பணமாற்றோலை இணைக்கப்பட்டோ அனுப்பப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. பெறும் குத்தகைகள் உரிய முடிவு தேதிஅன்று மாலை 3.00 மணியள வில் வந்துள்ள குத்தகைதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். குறிப்பிட்ட தேதி கடந்து பெறப்படும் குத்தகைகள் நிராகரிக்கப்படும்.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா ஒப்பந்தங்களை யுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கிடையே உத்திரவைப் (Order) பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவ ராவார்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
மேட்டூர் இயக்கத் திட்டம், மேட்டூர் அணை-1.

(தூ. 13)

## ஒப்பந்தப் புள்ளி

பாளையங்கோட்டைப் பெருந்திடலில் உள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்து வச் சாலைக்கும், மருத்துவ மனையைச் சேர்ந்த செவிலியர் பொது உணவு விடுதிக்கும் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி அல்லது ஒப்பந்தம் அங்கீகரிக்கும் அதி காரி குறிப்பிடும் தேதியிலிருந்து 1973-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி வரை தேவைப்படும் முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி தமிழ்நாடு அரசினரின் ஆளுநருக்காக மேடி மருத்துவ நிலையத்தின் கண்காணிப்பா ளரால் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆம் தேதி திங்கட் கிழமை பிற்பகல் 2—00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் பாரங்கள், தேவைப்படும் சாமான் களின் பட்டியல் விதிகள் அடங்கிய அட்ட வணை முதலியவைகளைப் பெற்றுக் கொள் வதற்கு ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்)

"XXIII Medical Miscellaneous II. D.M.E." என்னும் தலைப்பில், விற்பனை வரி 20 காசு மட்டும் "XII Sales Tax" என்ற தலைப்பிலும், ரிசர்வ் பாங்கிலோ அல்லது ஸ்டேட் பாங்கி யிலோ அல்லது அரசுக் கருவூலங்களிலோ செலுத்தி மேற்படி இரண்டு செலான்களை யும் மேடி கண்காணிப்பாளரிடம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு :—(1) ஒவ்வொரு ஒப்பந்தத்துடன் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப்பின் தாசில்தார் கையொப்பமிட்ட சொத்துக்களின் பெறுமான சான்றிதழ் (Solvency Certificate) அல்லது அதன் உண்மை யான நகல் அரசிதழ் பதிவான அலுவலரால் கையொப்பமிட்டாவது அனுப்ப வேண்டும்.

(2) ஒப்பந்தம் கொடுக்கப்படும் சாமான் களின் மதிப்பு ரூ. 10,000-க்குமேற்படுமானால் வருமானவரி பாக்கியில்லாமல் செலுத்துதற் குரிய அத்தாட்சியும், ரூ. 1,000-க்கு மேற்பட் டால் விற்பனை வரி கட்டி முடித்த அத் தாட்சியும் தேசிய இனச் சான்றும் (Nationality Certificate) சேர்த்து அனுப்பப் படவேண்டும்.

(3) ஒப்பந்த நிபந்தனை நகலினையும் பொருள்களின் அட்டவணையையும் கையெழுத் திட்டு ஒப்பந்தத்துடன் திருப்பித் தர வேண்டும்.

டாக்டர் **கே. எஸ். வாசுதேவன்,**
எம்.எஸ்., எப்.ஏ.வி.எஸ்.
கண்காணிப்பாளர்.
திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி
மருத்துவமனை,

(தூ. 9)

## ஒப்பந்தப் புள்ளி

## கோதையாறு நீர் மின் திட்டம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட தனித் தனியான ஒப்பந்தங்களை அதன் முக உறையில் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர் மின் திட்டம், 34-ஏ, பெருமாள்புரம், திருநெல் வேலி-7, திருநெல்வேலி மாவட்டம் என முக உறை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் அந்தந்த வேலைகளுக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் மாலை 3-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். அவைகளை அதே நாட்களில் மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

| எண். | குறிப்பிடுகை எண். | வேலையின் பெயர். | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை விற்பனை வரி உள்பட ரூபாய். | கட்டுத் தொகை ரூபாய். | ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளும் கடைசித் தேதி. |
|---|---|---|---|---|---|
| 1 | K/C. 295 | கோதையாறு மேல் தங்கலில்உள்ள சின்னக்குட்டியார் அணையில் Ch 420 முதல் 500 வரை அஸ்திவாரத்திற்கு மண்தோண்டுதலும் ( Excavation for foundation ) Ch. 404 முதல் 504 வரை பிளாக் நெ. V-ல் R. L. 4120 முடிய கட்டுமான வேலை (Building masonry) செய்தலும். | 10.35 | 23,750 | 10-12-71 |
| 2 | K/C. 296 | கோதையாறு மேல் தங்கலில்உள்ள சின்னக் குட்டியார் அணையில் 500 முதல் 640 வரை அஸ்திவாரத்திற்கு மண் தோண்டுதலும் (Excavation for foundation) பிளாக் நெ. VI-ல் ch 504 முதல் 604 வரை அணைக்கட்டு மேல் தளம் வரை கட்டுமான வேலை ( Building masonry ) செய்தலும். | 10.35 | 16,000 | 10-12-71 |
| 3 | K/C. 297 | கோதையாறு மேல் தங்கியில்உள்ள சின்னக்குட்டியார் அணையில் ch.640 முதல் 740 வரை அஸ்திவாரத்திற்கு மண் தோண்டுதலும் Excavation for foundation பிளாக் நெ. VII-ல் ch. 604 முதல் 704 வரை அணைக்கட்டு மேல் தளம் வரை கட்டுமான வேலை (Building masonry) செய்தலும். | 10.35 | 12,500 | 27-12-71 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | K/O. 298 | கோதையாறு மேல் தங்கலில் உள்ள சின்னக்குட்டியார் அணை யில் ch. 740 முதல் 890 வரை அஸ்திவாரத்திற்கு மண் தோண்டுதலும் (Excavation for foundation) பிளாக் நெ. VIIIலும், IX-லும், ch. 704 முதல் 890 வரை அணைக்கட்டு மேல் தளம் வரை கட்டுமான வேலை (Building masonry) செய்தலும். | 10.35 | 20,000 | [illegible] |

ஒப்பந்தப் பத்திரங்களின் நகல்களை (மாற்றத் தகாதவை) ஒவ்வொரு வேலைக்கும் எதிரில் குறிப்பிட்டுள்ள தன் விலையைக்கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

இவ்வலுவலகத்தின் மனுப் பாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களையும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வரும் ஒப்பந்தகளையும் கட்டுத் தொகை (Earnest money deposit) இரசீது இணைக்கப்படாத ஒப்பந்தங்களையும் கண்டிப்பாகநிராகரிக்கப்படும். கட்டுத்தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான இரசீதைப்பெற்றுஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் காசோலைகள் (Cheques) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கட்டுத் தொகைக்கான டிமாண்டு ட்ராப்டை முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தங்களுடன் அனுப்பக்கூடாது.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளைக் காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தத்தையோ சில அல்லது எல்லா ஒப்பந்தங்களையுமோ நிராகரிக்கக் கீழே கையொப்பமிட்டவருக்குப் பூரண உரிமையுண்டு.

ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும் போது இடையில் உண்டாகும் காலதாமதம் அல்லது காணாமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

கோதையாறு நீர் மின் திட்டம்.

34-ஏ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7.

(து. 12)

## ஏல விற்பனை

### காவல் துறை

கீழ்க்கண்ட காவல்துறை மோட்டார் லாரி வட ஆர்க்காடு மாவட்ட ஆயுதப்படை அலுவலகத்தில் 27-12-1971 திங்கட்கிழமை காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்:

| வண்டி எண். | வண்டியின் விபரம். |
|---|---|
| எம்.டி.ஜே. 3477. | பெட்போர்டு, ஓபன் டைப் லாரி, 1961 ஆம் ஆண்டில் தயாரித்தது. |

2. மேற்கண்ட வண்டியை வேலூர் ஆயுதப்படைத் தலைமையலுவலகத்தில் பார்வையிடலாம்.

3. விற்பனை நிபந்தனைகளை ஆயுதப்படை தலைமையலுவலக ஆய்வாளரிடம் தெரிந்து கொள்ளலாம்.

**கே. வி. உன்னிகிருஷ்ணன்,**

கண்காணிப்பாளர், வட ஆர்க்காடு, வேலூர்.

(து. 16)

## ஒப்பந்தப் புள்ளி

### அச்சகத் துறை

தமிழ்நாடு அரசினர் (எழுது பொருள் மற்றும்) அச்சகத் துறைக்காக ஒரேஒரு "மின்சார உலோக மறு-உருக்கு அடுப்பு" (One Number of Electric Metal Remelting Furnace) விற்பனை செய்வதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வியாபாரிகளிடமிருந்து, இயக்குநர், அரசினர் எழுது பொருள் மற்றும் அச்சகத் துறை, சென்னை-1 அவர்களால் 16—12—1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். இது சம்பந்தப்பட்ட முழு விவரங்களைத் தேவையுள்ளவர்கள் மேற்படி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**ஜி. ரங்காராவ்,**

இயக்குநர்.

அரசினர் எழுது பொருள்அச்சுத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-1.

(து 17)

## மருத்துவமனைக்கு உணவு வழங்கல்

எண் : 27670/க/71, நாள் : 9–11–1971.

1972–73-ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட மருத்துவ மனைக்கும் இதர அரசினர் மருத்துவ மனைகளுக்கும் ஆகாரப் பொருட்கள் முதலியவை விநியோகம் செய்தலுக்கான ஒப்பந்தம்.

1972 ஏப்ரல் 1-ந் தேதி முதல் அல்லது அதற்குப் பிந்தைய தொரு தேதி முதல் 1973 மார்ச் 31-ந் தேதி வரையில் சேலம் மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கும் மற்றும் இம் மாவட்டத்திலுள்ள இதர மருத்துவமனைகளுக்கும் ஆகாரப் பொருட்களையும் இதர மருத்துவமனை தேவைப் பொருட் களையும் விநியோகம் செய்வதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சம்பந்தப்பட்ட மருத்துவ மனைகளின் மேற்பார் வையாளர்கள் அல்லது மருத்துவ அதிகாரிகள் 1972 ஜனவரி 7-ந் தேதி வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் 2 மணி வரையில் பெற்றுக் கொள்வார்கள்.

2. ஒப்பந்த நிபந்தனைகள், ஒவ்வொரு மருத்துவமனைக் கும் தேவைப்படும் பொருட்களின் பட்டியல் ஆகியவற்றை யும் ஒப்பந்த நமூனுவையும் அந்தந்த மருத்துவமனைக்கு விண் ணப்பம் செய்து பெறலாம். ஒப்பந்தம் செய்ய விரும்பு பவர் மூன்றரை சதவிகிதம் விற்பனை வரி உட்பட ஒப்பந்த நமூனு முதலியவற்றிற்கு விலையான ரூ. 5.20 (ஐந்து ரூபாய் இருபது காசு) தொகையை ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா விலோ, அல்லது அரசினர் கருவூலம் ஒன்றிலோ தமிழ்நாடு அரசின் கணக்கில் செலுத்த வேண்டும். ஒப்பந்த நமூனு வுக்கான விலைத் தொகையை "XXIII Medical—g.Micsellaneous—I. Director of Health Services and Family Planning....other Receipts" என்ற தலைப் பிலும், விற்பனைவரியை "XII. Sales tax—Receipts under the State Sales tax Act—general Sales-tax" என்ற தலைப்பிலுமாக ஒரே சலானில் செலுத்த வேண்டும். ஒப்பந்த நமூனு செய்யக்கோரி செய்து கொள்ளப்படும் விண்ணப்பத்துடன் கூட, அசல் சலானைச் சேர்த்து அனுப்ப வேண்டும். இந்தத் தொகை எக்காரணம் கொண்டும் திருப் பித்தரப்படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளி அளித்த பின்பு, ஒப்பந்தப் புள்ளி சம்மந்தமாக எந்தவிதமான கடிதப் போக்குவரத்தும் மேற்கொள்ளக்கூடாது.

### சேலம் மாவட்டம்

1. அரசினர் தலைமை மருத்துவமனை, சேலம்.
2. அரசினர் மருத்துவமனை, ஆத்தூர்.
3. ஷை மேட்டூர் தேக்கம்.
4. ஷை ஓமலூர்.
5. ஷை நாமக்கல்.
6. ஷை இராசிபுரம்.
7. ஷை திருச்செங்கோடு.
8. ஷை ஏத்தாப்பூர்.
9. ஷை சேந்தமங்கலம்.
10. ஷை வேலூர்.
11. ஷை ஏர்க்காடு.
12. ஷை ஜலகண்டாபுரம்.
13. ஷை மோகனூர்.
14. ஷை குமாரபாளையம்.
15. ஷை வேம்படிதாளம்.
16. ஷை சங்ககிரி.
17. ஷை வெண்ணந்தூர்.
18. ஷை ஆலம்பட்டி.
19. ஷை தம்மம்பட்டி.
20. அரசினர் தொழுநோய் மருத்துவ மனை, ஏத்தாப்பூர்.

குறிப்பு:—ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் செய்து கொள் ளப்படும் ஒவ்வொரு ஒப்பந்தத்துடன் 1971 அக்டோபர் 1-ஆம் தேதியன்றோ, அல்லது அதற்குப் பிறகோ பெறப்பட்டு தாசில்தார் ஒருவரால் கையொப்பமிடப்பட்ட ஒரு சால்வன்சி சர்ட்டிபிகேட்டும், நேஷனலிடி சர்ட்டிபிகேட்டும், ஒப்பந் தத்தின் மொத்தத் தொகை மதிப்பு ரூ. 10,000-க்கு அதிக மானுல் வருமானவரி வெரிபிகேஷன் சர்டிபிகேட்டும் மற்றும் ஒப்பந்தத்தின் மொத்தத் தொகை மதிப்பு ரூபாய் 1,000-க்கு அதிகப்படுமானுல் விற்பனை வரி கிளியரன்ஸ் சர்டி பிகேட்டும் அல்லது தமிழக அரசின் அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரி ஒருவரால் அத்தாட்சியிடப்பட்ட அவற்றின் உண்மை நகலும் ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்பப்பட வேண்டும்.

**வி. செல்வராசு,**
எம்.பி.பி.எஸ்.,
மாவட்ட மருத்துவ அலுவலர், சேலம்.

(த. 4)

## செங்கை மருத்துவக் கல்லூரி

மாநில ஆட்சித் தலைவருக்காகவும், அவர் சார்பிலும், அவர் ஆணைப்படியும், செங்கற்பட்டு அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம்தேதி முதல் அல்லது, நிர்ணயிக்கப்படும் தேதி முதல் 1973-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம்31-ஆம்தேதி வரையுள்ள காலத்திற்கு சில உணவுப் பொருட்களும் மற்றும் சில வைத்தியத்திற்குத் தேவையான பொருட்களும் விநியோகிப்பதற்காக முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் இம்மருத்துவமனைக் கண்காணிப்பாளரால் சென்னை மாநில ஆளுநர் அவர்கள் சார்பில் நாளது 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆம் தேதி திங்கட் கிழமையன்று பிற்பகல் 2 மணி வரை வரவேற்கப் படுகின்றது.

ஒப்பந்த நமூனுவும், மருத்துவமனைக்கு விநியோகிப்பதற்கு வேண்டிய பொருட்கள் அடங்கிய பட்டியலும் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய நமூனுவும் வேண்டுவோர் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா அல்லதுஅரசாங்க ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா அல்லது அதன் கிளைகளிலோ அல்லது அரசாங்க கருவூலத்திலோ ''XXIII Medical — J. Miscellaneous'' என்ற பிரிவின் கீழ் ரூபாய் 'ஐந்து மட்டும்' கட்டி சலானைக் கண்காணிப்பாளர் (சூப்பரிண்டெண்டெண்ட்)அவர்களிடம் அரசாங்க அலுவல் நாட்களில் சமர்ப்பித்து மேற்கண்ட நமூனுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் பாரம் வாங்குவதற்கு 3½ சதவீதம் (பதினெட்டு காசு மட்டும்) விற்பனை வரியை ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா அல்லது அதன் கிளை பாங்குகளிலோ ''XII Sales tax—Receipt under Sales tax Act'' என்ற பிரிவின்கீழ் கட்டி அந்தச் சலானையும் கண்காணிப்பாளர் அவர்களிடம் மேற்சொன்ன ரூபாய் ஐந்துக்கான சலானுடன் சேர்ப்பித்து மேற்கண்ட நமூனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு :—

(1) ஒப்பந்தங்களுடன் அவரவர்கள் சொத்து மதிப்புச் சான்றிதழ், தேசிய இனச் சான்றிதழும், அதற்குரிய நமூனுவும் சேர்த்து அனுப்ப வேண்டும். இந்தச் சொத்து மதிப்புச் சான்றிதழ் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப் பின்வாங்கியதாகவும் தாசில்தார் அவர்களால் கொடுக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். இதனுடைய உண்மை நகலை அரசிதழ் பதிவு அதிகாரிகளின் கையொப்பம் பெற்றும் சமர்ப்பிக்கலாம்.

(2) ஒப்பந்த நிபந்தனையின்படி வருமான வரி, விற்பனை வரி, சான்றிதழ்கள் ஒப்பந்தத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியும் மொத்த ஒப்பந்தத் தொகையில் ஐந்து சதவீதத்திற்குச் சமமான வைப்புத் தொகையைப் (Deposit) பிணைப்பணமாக (Earnest Money) விலக்களிக்கப்பட்டத் தொகை போக அனுப்ப வேண்டும்.

4. ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் திரும்பப் பெறப்படுமானால் அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் பிணைப்புத்தொகை செலுத்தத் தவறினால் அவர் செலுத்திய பிணைப்பணம் திருப்பித் தரப்படமாட்டாது.

**டாக்டர் ஹெச். கிருஷ்ணராவ்,**
எம்.எஸ்.,
கண்காணிப்பாளர்,
செங்கை மருத்துவக் கல்லூரி,
மருத்துவமனை செங்கற்பட்டு.

30—10—1971.

(கு.15)

---

## நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

### தேசிய நெடுஞ்சாலை வட்டம் சென்னை—1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அவர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 8—12—1971 மாலை 3 மணிவரை கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக்கொள்ளப் படும்.

வேலையின் பெயர்:—சென்னை–திருச்சி-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையின் (H.N. 45) கி.பி. 102-6-ல் உள்ள (மைல் 63–2-ல்) பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.

கட்டுத் தொகை—
ரூ. 7,600.

ஒப்பந்தப்புள்ளிகள் 8–12–71 அன்றே மாலை 3–15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சென்னை (சைதாப்பேட்டை) அலுவலகத்தில் 1—12—1971 முதல் 7—12—1971 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25·88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் சைதாப்பேட்டை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்தினுள்ளும், ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின்கீழ், கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் 11, சைதாப்பேட்டை பெயரில் செலுத்திச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

**தி. மு. அ. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை), சென்னை-1.

(கு. 18)

# ஒப்பந்தப் புள்ளி

## எண்ணூர் அனல் மின் திட்டம்

## (இயக்குதல், பேணுதல் பிரிவு)

குறிப்பு எண் PT 3/71-72.

தமிழக மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் தமிழக மின்சார வாரியம்—எண்ணூர் அனல் மின் திட்டம் (இயக்குதல், பேணுதல் பிரிவு) குறிப்பு எண் P.T. 3/71-72 எனவும், மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் 20-12-1971 மாலை 3-30 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

2-0] தேவையான பொருள்கள் :—

| *Serial number and Description.* (1) | *Quantity.* (2) |
|---|---|
| 1 Heat resisting grade grey paint .. | 260 litres (in 20 lit. containers) |
| 2 Heat Resisting grade Aluminium paint. | 200 litres. (in 20 lit. containers) |
| 3 Anticorrosive Red paint (I.S.158). | 400 litres. (in 20 lit. containers) |
| 4 Best Quality grey paint .. .. | 160 litres. (in 20 lit. containers) |
| 5 Enamel Aluminium .. .. | 200 litres. (in 20 lit. containers) |
| 6 Enamel Ballstop grey (IS2932/1964). | 300 litres. (in 20 lit. containers) |
| 7 Enamel Azure Blue (IS 2932/1964). | 100 litres. (in 20 lit. containers) |
| 8 Enamel Black .. .. .. | 60 litres. (in 20 lit. containers) |
| 9 Post office Red Enamel (IS-2939/1964. | 25 litres. (in 1 lit. containers) |
| 10 Thinner .. .. .. .. | 300 litres. (in 20 lit. containers) |
| 11 Anticorrosive Black (IS-158) .. | 760 litres. (in 20 lit. containers) |
| 12 Red oxide paint (IS-123) .. | 600 litres. (in 20 lit. containers) |
| 13 Aluminium paint (IS-2339/1964) .. | 200 litres. (in 20 lit. containers) |
| 14 Desustofcs .. .. .. | 200 litres. (in 20 lit. containers) |
| 15 Grey Enamel paint (IS 2932/1964.) | 460 litres. (in 20 lit. containers) |
| 16 Green Enamel paint (IS 2932/1964.) | 1000 litres. (in 20 lit. containers) |
| 17 Red Enamel paint (IS 2932/1964.) | 120 litres. (in 20 lit. containers) |
| 18 White Enamel (IS 2432/1964) .. | 46 litres. |

3-0] ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

4-0] இந்த வேலைக்கான முன்பணம் ரூபாய் 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு) இந்தத் தொகையை ஒப்பந்தப் பிரதியில் கூறியுள்ளபடி முன் செலுத்த வேண்டும்.

5-0] துறையினரைச் சார்ந்த நமூனக்களில் இல்லாத ஒப்பந்தங்களும் இறுதித் தேதிக்கும், நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ, காரணம் காட்டாது நிராகரிக்கவும், வேலையை ஒப்பந்தக்காரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் கீழ்க்கையொப்பமிட்டவர் உரிமையுடையவர்.

6-0] அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத் தக்கவையல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
எண்ணூர் அனல் மின் திட்டம்.

எண்ணூர், சென்னை-57,
தொலைபேசி எண்: 59569,
தந்தி: ENTERMAL (Operation)

(த. 6)

காவல்துறை மருத்துவ மனை, கோயம்புத்தூர், மற்றும் இம் மாவட்டத்திலுள்ள மற்ற மருத்துவ மனைகளுக்கு, தேவையான உணவுப் பொருள்கள் முதலான சாமான்களை 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்தோ அல்லது ஒப்பந்தப் புள்ளியை ஒப்புக் கொள்பவர் குறிப்பிடும் தேதியிலிருந்தோ 1973-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி முடிய வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தேவை. மருத்துவ நிலையங்கள் சம்பந்தப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அந்தந்த நிலைய மருத்துவ அலுவலகரால் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00மணிவரை சென்னை மாநில ஆளுநர் சார்பாகப் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், தேவையான பொருள்களின் பட்டியல்கள், ஒப்பந்த நமூனு முதலான வேண்டுவோர் இவற்றின் கிரயமான ரூ. 5-20 (ரூபாய் ஐந்தும் காசு இருபது மட்டும்) செலுத்தி, செலுத்துச் சீட்டுடன் அந்தந்த மருத்துவ நிலைய அதிகாரிகளுக்கு விண்ணப்பம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகையை ரிசர்வ் பாங்கியிலாவது, மாகாண பாங்கியின் ஏதாவதொரு கிளையிலாவது அல்லது ஏதேனும் அரசாங்கக் கருவூலத்திலாவது XXIII. Medical I-DHS FP.G.Misc. other receipts. என்ற தலைப்பின் கீழ் செலுத்தி தாக்கல் செய்யப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் இந்தத்தொகைத் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. மற்றும் தேவையான விவரங்கள் வேண்டுவோர் அந்தந்த மருத்துவமனை வைத்திய அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் பொருள்களின் விவரப்பட்டியல் ஆகியவற்றைப் படித்த பின்பு கையொப்பமிட்டு, ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்துக் கொடுக்க வேண்டும்.

**மாவட்ட மருத்துவ மனை அதிகாரி**

கோயம்புத்தூர்–18,
2–11–1971.

(கு. 39)

மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனை, அரசினர் தொற்றுநோய் மருத்துவமனை, தோப்பூர், அரசினர் க்ஷயரோக நிலையம், தோப்பூர், காலரா சேகரிப்பு நிலையம், மதுரை ஆகிய நான்கு மருத்துவ நிலையங்களுக்கும் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் அல்லது ஒப்பந்தம் அங்கீகரிக்கும் அதிகாரம் உடையவர்கள் குறிப்பிடும் தேதியிலிருந்து 1973-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி முடிய தேவைப்படும் உணவுப் பொருள்களும், இதரச் சாமான்களும் விநியோகம்செய்வதற்கானமுத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆம் தேதி பிற்பகல் 2 மணி அளவில் மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை டீன் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

குறிப்புகள்.

1. ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் தனித்தனியாக ஒப்பந்தப் பாரங்கள் அனுப்ப வேண்டும்.

2. ஒப்பந்தங்கள் அடங்கிய உறையின் மீது எந்த மருத்துவ மனைக்கு ஒப்பந்தம் என்பதைத் தெளிவாக எழுதவேண்டும். உதாரணமாக "மதுரை எர்ஸ்கின் மருத்துவமனைக்கு அல்லது தொற்று நோய் மருத்துவ மனைக்கு" என்று விவரமாக எழுத வேண்டும்.

3. ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் 1-ஆம் தேதியோ அல்லது அதற்குப் பின்னரோ வாங்கிய சால்வன்சி சர்டிபிகேட் அனுப்ப வேண்டும். மேற்படி சான்றிதழ் தாசில்தார் கையொப்பமிட்டதாகவோ அல்லது அதன் உண்மையான நகல்அரசிதழ் பதிவான அரசு அதிகாரியின் கையொப்பமிட்டதாகவோ இருக்க வேண்டும்.

3அ. ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந்தேதியோ அல்லது அதற்குப பின்னரோ வாங்கிய நேஷனலிடி சான்றிதழும்அனுப்ப வேண்டும். மேற்படி சான்றிதழ் தாசில்தார் கையொப்பமிட்டதாகவோ அல்லது தலைமை அலுவலக உதவித் தாசில்தார் கையொப்பமிட்டதாகவோ இருத்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு மருத்துவமனைக்கும் வேண்டிய சாமான்களின் அட்டவணை ஒப்பந்தப் பாரம் அடங்கிய செட் ஒன்று பெறுவதற்கான கட்டணம் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) XXIII. Medical Miscellaneous என்ற தலைப்பில் அரசுக்கருவூலத்திலாவது அல்லது ஸ்டேட் பாங்க் அதன் கிளைகளிலாவது செலுத்தி அதற்கு அத்தாட்சியான செலான் பாரத்தை மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனை ஆபீசில் கொடுத்து மேற்படி பாரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

5. ஒவ்வொரு செலானுடனும் விற்பனை வரியாக ரூபாய்க்கு $3\frac{1}{2}$ சதவிகிதம் "XII. sales tax receipts under the state sales tax Act—General sales tax" என்ற தலைப்பில் அரசுக் கருவூலத்திலாவது ஸ்டேட் பாங்கி அதன் கிளையிலாவது தனியாக செலுத்தி செலான் பாரத்தையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

6. ஒப்பந்தப் பாரங்கள் வாங்குவதற்காகச் செலுத்தின பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. மேலும் எக்காரணத்தைக் கொண்டும் பணம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7. ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் விற்பனை வரி வருமானவரி பாக்கி இல்லை என்பதற்குச் சான்றிதழ் அனுப்ப வேண்டும்.

8. ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் கீழே கண்ட அத்தாட்சி இணைக்கப்பட வேண்டும். அத்தாட்சி இல்லாமல் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தம் தள்ளுபடி செய்ய ஏதுவாகும்.

ஒப்பந்தப் புள்ளி, சம்பந்தப்பட்ட நிபந்தனையையும், உணவுப் பொருட்கள் பட்டியலில் கண்ட நிபந்தனைகளையும் பொருள்களின் அளவு, தராதரம் பற்றியும் படித்துப் புரிந்து கொண்டேன். இந்த நிபந்தனைக்கு உட்பட்டு நடக்கச் சம்மதிக்கிறேன்.

**டீன்,**

அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனை.

மதுரை.
3-11-1971.

(கு. 35)

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

(தேசிய நெடுஞ்சாலை)

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை அவர்கள் நெ. 11 ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 15—12—1971 புதன்கிழமை அன்று பிற்பகல் 3—30 மணி வரையில் (அலுவலகக்கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3·35 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | கட்டுத் தொகை | ஒப்பந்தப் புள்ளி கிடைக்கும் விலாசம். |
|---|---|---|
| 1. இராமநாதபுரம் மாவட்டம் | ரூ. | |
| தேசிய நெடுஞ்சாலை 49-ல் மைல் 64/6 (கி.மீ.103/6-ல் உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 5,100 | கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை வேலைகள் மதுரை. |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன்மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2 விலாசத்திலிருந்து 6—12—1971 முதல் 14—12—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகை டெபாசிட்டை மேற்கண்ட தனி கோட்டப்பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) அதிகார எல்லைக்குள்ளே உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
(தேசிய நெடுஞ்சாலை),
மதுரை-2

(த-33)

---

## பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவர் பொருட்டும், தமிழகப் பொதுப்பணித்துறை தஞ்சை மாவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அன்னாரது அலுவலகத்தில் 29—12—1971 மாலை 3·00 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்—தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினம் தாலூகா வேளாங்கன்னி மாதாகோவில் சமீபத்தில் வெள்ளையாற்றின் இடதுகரை மைல் 99/4-260-ல் தடுப்புச் சுவர்கட்டுதல்.

2. ஒப்பந்த வகை—கே. 2

3. வைப்புத் தொகை (கருவூல செலான் உருவில்) ரூ. 6,000.

4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலங்களில் பொதுப் பணித்துறை செலுத்துத் தொகை என்ற தலைப்பில் செயற்பொறியாளர் வெண்ணாறு கோட்டம், தஞ்சை அவர்களின் கணக்கில் கட்ட வேண்டும்—ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).

5. விற்பனை வரி ரூ. 0·88 (காசு எண்பத்தெட்டு மட்டும்)

(அரசினர் கருவூலங்களில் XII விற்பனை வரி (பி) பற்றுச்சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்)

6. ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்க ஆரம்பிக்கும் நாள் 10—12—1971.

**ஆர். வேணுகோபால்,**
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த.32)

## ஒப்பந்தப் புள்ளி

# பொதுப்பணித் துறை

## செங்கல்பட்டு வட ஆர்க்காடு பெருவட்டம்

வேலையின் பெயர்:—வட ஆர்க்காடு மாவட்டம் செங்கத்தில் அரசினர் மருத்துவ மனைக் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவருக்காகவும் பொதுப் பணித் துறை மற்றும் அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காகச் செங்கல்பட்டு வட ஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 15-12-1971 மாலை 3 மணி வரைக் கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் செங்கல்பட்டு வட ஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஒப்பந்த முறை | : | மொத்தத் தொகை. |
| 2 | முன்வைப்புத் தொகை | : | ரூ. 11,000 |
| 3 | ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை-வரைபடங்களுடன். | : | ரூ. 51.50 (விற்பனை வரி 3 சதவீதம் சேர்த்து.) |
| 4 | முடிக்கவேண்டிய காலம் | : | 10 மாதங்கள். |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள்செங்கல்பட்டு-வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1-12-1971 தேதிமுதல் 13-12-1971 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 50 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்க் ஆகியவற்றில் ''P.W.D. Remittances III Other Remittances'' என்ற தலைப்பின் கீழ் ''நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருவண்ணாமலைக் கோட்டம், திருவண்ணாமலை'' என்பவர் கணக்கில் செலுத்தப் பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 1.50 கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்கில் ''XII Sales Tax (B) Receipts under State Sales Tax Act-General Sales Tax'' என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படிக் கருவூலச் செலுத்துச் சீட்டுகளை, இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத்தொகை கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால்ரசீது டெபாசிட் வகையிலோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் டிமான்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம்குறைத்து ஏற்றுக்கொள்ளப்படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன்ஏற்றுக்கொள்ளப்படும்: மற்று எந்தப் படிவத்தில் செலுத்தினாலும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலையில் குறைந்த பட்சம் மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம், வேலூர்.1

(த.23)

## ஏல விற்பனை

ஒரு டெசோட்டா லாரி (எம்.எஸ்.ஒய். 2905 திறந்த மாடல்—11,226 கிலோ கிராம் கொள்ளளவு உள்ளது. 6 சிலிண்டர்கள்—பெட்ரோலால் இயங்குவது—இருக்கை வசதிகள் உள்ளது—1955-ல் தயாரிக்கப்பட்டது) 10-12-71 காலை 11 மணிக்கு அடியிற் கையொப்பமிட்டவரால் வைகை அணையிலுள்ள தமிழ்நாடு வனவளப் பயிற்சிப் பள்ளியில் பொது ஏலத்தில் விற்கப்படும். வண்டியைப்பார்வையிட விரும்புவோர்கள் அந்தப் பள்ளியில் அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். விற்பனை அறிவிப்புக்களை அப்பள்ளிக்கு நேராகச் சென்றோ அல்லது அடியில் உள்ள முகவரிக்கு 25 காசு அஞ்சல் வில்லை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

**எஸ். தேவராஜுலு,**
முதல்வர், தமிழ்நாடு
வனவளப் பயிற்சிப் பள்ளி,
வைகை அணை,
மதுரை மாவட்டம்.

(த.68)

## மறு ஒப்பந்தம்

நகராட்சி சுகாதாரப் பிரிவில் உபயோகப்படும் பென்ஸ் லாரியை (எம்.டி.ஆர். 4004) தேவையான புதிய சாமான்கள் மாற்றி ரிப்பேர் செய்து கொடுக்க மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 13-12-71-ஆம்தேதி மாலை 3-30 மணிக்குள்ளும் அதன் முன்பும் நகராட்சி ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களாலோ பெறப்படும். ஒப்பந்தம் அனுப்பும் கவர் மேல் ''பென்ஸ் லாரி ரிப்பேர் செய்ய ஒப்பந்தம்'' என்று குறிப்பிட வேண்டும். மேலும் அத்துடன் ரூ. 450 ஒப்பந்தம் டிபாசிட் தொகை நகராட்சி கருவூலத்தில் கட்டி அதன் அத்தாட்சியுடன் அனுப்ப வேண்டும். ஒப்பந்தங்கள் 13-12-71 மாலை 3-30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து அறிவிக்கப்படும். நகராட்சி ஆணையர் ஒப்பந்தங்களைக் காரணமின்றி ஒப்புக்கொள்ளவோ, நிராகரிக்கவோ செய்யலாம்.

**வி. பிருதிவி,**
ஆணையர் டெனிகேட்
இராஜபாளையம் நகராட்சி.

(த.30)

## ஒப்பந்தப் புள்ளிகள்

தஞ்சாவூர் வல்லம் சாலையில் உள்ள மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்குத் தேவையான உணவுப் பொருள்கள் முதலிய வற்றை வழங்குவதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி.

1972 ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் அல்லது ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் அதிகாரியால் ஒவ்வொரு விஷயத்திலும் திட்டமாக நிர்ணயிக்கப்படும் வேறொரு தேதியிலிருந்து தொடங்கி 1973 மார்ச்சு 31-ஆம் தேதி முடிய உணவுப் பொருட்கள் மற்றும் இதர ஆஸ்பத்திரி அவசிய தேவைப் பொருட்கள் வழங்குவதற்கான மூடிமுத்திரையிட்ட ஒப் பந்தங்கள் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியின் கண்காணிப்பாளரால் மேற்படி மருத்துவமனை அலுவலகத் தில் மாநில ஆளுநரின் சார்பில் அவர் உத்தரவின்படி அவருக் காக 1972 ஜனவரி 3-ஆம் தேதி திங்கட் கிழமை பிற்பகல் 2–மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

1971 டிசம்பர் 15-ஆம் தேதி முதல் எல்லா வேலை நாட்களிலும் காலை 11-00 மணி முதல் 4-00 மணி வரை வல்லம் சாலையில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை அலுவலகத்திலிருந்து ஒப்பந்தப் பாரமும், ஒப்பந்த நிபந்தனை களின் பிரதியையும் தேவைப்படும் பொருட்களின் அட்டவணை யையும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் பாரத்திற் கான விலை ரூபாய் ஐந்தும் இதற்கான விற்பனை வரி 3 சத விகிதமும் (0·18) முறையே "XXIII Medical Miscellaneous XXII Sales Tax Receipts under the State Sales Tax act General Sales Tax"—என்ற தலைப்புகளில் ரிசர்வ் பேங்க ஆப் இந்தியாவிலோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எந்தக் கிளையிலுமோ அல்லது அரசாங்கக் கருவூலம் எதிலுமோ தமிழக அரசின் கணக்கில் செலுத்தப் பட்டதற்கான சலான்களுடன் பாரங்களைப் பெற மனு செய்ய வேண்டும்.

ஒப்பந்ததாரர்கள் தங்கள் ஒப்பந்தங்களை சூப்பரன்டெண் டெண்ட் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரி தஞ்சாவூர் "(மாநில ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மற்றும் அவருடைய ஆணைக்கேற்பவும் செயல் புரிபவர்)" என்று விலாசமிட்டு அனுப்பும்படியாகக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் ரொக்கமாகப் பணம் ஏற்கப்பட மாட்டாது.

குறிப்பு :—1971 அக்டோபர் 1—ஆம் தேதிக்குப் பிற்பட்டுத் தாசில்தார் ஒருவரால் கையெழுத்திடப்பட்ட நிர்ணய பாரத் திலமைந்த சால்வன்சி சர்டிபிகேட்டோ அல்லது கெஜட் பதிவு பெற்ற அதிகாரி ஒருவரால் சரியான முறையில் அத் தாட்சி இடப்பட்ட அதன் உண்மை நகலோ ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் சேர்த்து அனுப்பப்பட வேண்டும்.

2. ஒப்பந்தத்தின் தொகை மதிப்பு ரூ. 10,000-க்கு அதிகப்படுமானால் வருமானவரி பாக்கி இன்றிச் செலுத்தி யுள்ளமைக்கான சர்டிபிகேட்டை தாக்கல் செய்ய வேண்டும்.

3. விற்பனை வரி பாக்கியின்றிச் செலுத்தியுள்ளமைக் கான சர்டிபிகேட்டை ஒப்பந்தத்துடன் சேர்த்துத் தாக்கல் செய்ய வேண்டும்.

4. தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாத ரெவினியூ அதிகாரி ஒருவரிடமிருந்து (அல்லது தாசில்தாரின் சார்பில் தலைமையக டெபுடி தாசில்தாரிடமிருந்து) 1971 அக்டோபர் 1-ம் தேதிக்குப் பிறகு பெறப்பட்ட ஒரு நேஷனலிட்டி சர்டி பிகேட்டை அல்லது கெஜட் பதிவு பெற்ற ஒரு அதிகாரியால் அத்தாட்சி இடப்பட்ட அதன் உண்மை நகலை ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் கோத்து அனுப்ப வேண்டும்.

**டாக்டர் டி. நாகராஜன், எம். டி.,**
எப். சி.சி.பி. (யு. எஸ். ஏ).,
சூப்பரன்டெண்டெண்ட், தஞ்சாவூர்
மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரி.

தஞ்சாவூர்,
5—11—1971.

---

### தமிழ்நாடு போக்குவரத்துத் துறை

"டர்ன் பட்டன்களுக்கு ஐலட் அண்ட் வாஷர்" வழங்குவதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந் தப்புள்ளிகள் அடியிற்கையொப்ப மிட்டவரால் 28-12-71 நண்பகல் 2 மணி வரை வர வேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி பற்றி விளக்கமான நிபந் தனைகளையும், பிற விவரங்களையும் பொருட்கள் வாங்கும் அலுவலர், தமிழ்நாடு போக்குவரத்துத் துறை, சென்னை-2 என்னும் முகவரியில் எல்லா அலுவலக நாட்களிலும் இலவசமாகப் பெற் றுக்கொள்ளலாம்.

**இயக்குநர்.**

(த.67)

### பொதுப்பணித் துறை

எண் 47

"பெட்ரோலால் இயங்கும் காங்க்ரீட் இம்மெர்சன் வைப ரேட்டர்ஸ்" ஐந்து வழங்கு வதற்கு மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அடி யிற் கையொப்பமிட்டவரால் 10-12-71 நண்பகல் 1 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

இதற்கான குறிப்புகளையும், நிபந்தனைகளையும் அடியிற் கை யொப்பமிட்டவரின் நேர்முக உதவியாளரிடம் மனு செய்து இலவசமாகப் பெற்றுக்கொள்ள லாம்.

**எஸ். சச்சிதானந்தம்,**
பொதுக் கண்காணிப்பாளர்
பொதுப்பணித் துறை
& கிடங்குகடை,
சென்னை-1.

(த.66)

1972–73 ஆண்டிற்கான உணவு, உணவல்லாத பொருட்கள் வழங்குவது குறித்து.

முதல்வர், அரசாங்க ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை-1, அவர்களால் 1–4–1972 முதல் 31–3–1973 முடிய உள்ள காலத்திற்குத் தேவையான உணவு, உணவல்லாத பொருட்கள்வழங்குவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்ப விவரங்கள் 3-1-1972 திங்கட்கிழமையன்று பிற்பகல் 2 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

(2) ஒப்ப அறிக்கையின்நகலும் பொருட்களுடைய விவர நகலும், முதல்வர் அரசாங்க ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை-1, அவர்களுடைய அலுவலகத்தில் ரூ. 5-ஐ "XXIII-Medical II D.M.E. J· Miscellaneous"என்ற தலைப்பின் கீழும் ரூ. 5-க்கான விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவிகிதத்தை ($17\frac{1}{2}$ அல்லது 18 காசு) அதற்குரிய வருமான மேல் வரி ( Surcharge ) 5 சதவிகிதத்தை "XXII Sales Tax-Receipts under S.T Act General S.T", என்ற தலைப்பின் கீழும் ரிசர்வ் வங்கியிலோ அல்லது ஸ்டேட் வங்கியிலோ அல்லது அரசாங்கக் கருவூலத்திலோ செலுத்தியதற்கான செல்லுச் சீட்டைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். ரிசர்வ் வங்கியில் பணம் கட்டினால் வங்கியினுடைய அசல் செல்லுச் சீட்டை இவ்வலுவலகத்தில் செலுத்த வேண்டும். ரிசர்வ் வங்கி அல்லாத மேற்சொல்லப்பட்ட மற்ற வங்கிகளில் பணம் செலுத்தினால் செல்லுச் சீட்டினுடைய எண், தேதி, செலுத்தப்பட்ட பணம், செலுத்துபவருடைய பெயர் போன்ற விவரங்களை ஒப்ப நமூனாவைப் பெறுவதற்கான விண்ணப்பத்தில் விவரமாகக் குறிப்பிட வேண்டும். மேற்கண்ட பணத்தை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

(3) ஒப்பந்தத்தினுடையமதிப்பு ரூபாய் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டால் வருமான வரி சரிபார்த்தல் சான்றிதழுடன் 1–10–1971 அன்றோஅல்லது அதற்குப்பிறகோ வட்ட ஆட்சியாளரிடமிருந்து பெறப்பட்ட பெறுமானச் சான்றிதழும் தேசியச் சான்றிதழும் ஒப்ப விவரங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஒப்ப விவரங்களுடைய மதிப்பு ஓராயிரம் ரூபாய்க்கும் மேற்பட்டால் விற்பனை வரி பாக்கியில்லை என்பதற்கான சான்றிதழும் இணைத்து அனுப்ப வேண்டும். மேற்கண்ட அசல் சான்றிதழ்களை அரசாங்க நிலை பெற்ற அலுவலரிடமிருந்து பெற்ற நகலையும் இணைத்து அனுப்பலாம்.

**எம். ஜி. பிரபு,**
எம்.டி.எப்.சி.சி.பி.(யு.எஸ்.எ.)
முதல்வர்.

(த. 50)

## போக்குவரத்துத் துறை.

அண்ணாசாலை, சென்னை-2.

தமிழ்நாடு அரசாங்க ஆளுநரின் சார்பில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து இலாகாவின் கட்டடப் பொறியாளரால் வரும் இரண்டு வருடத்திற்கு, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையிலுள்ள மாதவரம் பணிமனையில், சிற்றுண்டிச்சாலை, குத்தகைக்கு விடப்படும். முத்திரையிடப்பட்ட கவர்களில், கட்டடப் பொறியாளர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை-2ல் ஒப்பந்தங்கள் 9—12—1971 மாலை 3 மணி முடிய வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3–15 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்த விதிமுறைகள், கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1–04 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தரப்படமாட்டாது.

**இயக்குநர்.**

(த. 20)

## சத்தியமங்கலம் நகராட்சி.

சத்தியமங்கலம் நகராட்சி (கோவை மாவட்டம்) அலுவலக உபயோகத்திற்கு ஒரு தமிழ் டைப் அடிக்கும் கருவியும் (Typewriter—Tamil) ஒரு நகல் எடுக்கும் கருவியும் ( Duplicator ) உடனடியாகத் தேவைப்படுகின்றன. மேற்படி கருவிகளை விநியோகம் செய்யும் கம்பெனிகள் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை "தனி அதிகாரி", நகராட்சி அலுவலகம், சத்தியமங்கலம், கோவை மாவட்டம் என்ற விலாசத்திற்கு அனுப்பலாம். டைப் அடிக்கும் கருவி அல்லது டியூப்ளிகேட்டர் ( Duplicator ) ஆகியவற்றிற்கு அனுப்பப்படும் ஒவ்வொரு ஒப்பந்தத்துடன் ரூ. 125-00 பிணைப் பணம் ( Earnest Money Deposit ) அனுப்ப வேண்டும். மேற்படி பிணைப் பணம் மணி ஆர்டர் அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலமாக அனுப்ப வேண்டும். இந்த விளம்பரம் "தமிழரசு" பத்திரிகையில் வெளியான தேதியில் இருந்து 15-வது நாள் மாலை 3·00 மணிவரை மேற்படி ஒப்பந்தங்கள் வரவேற்கப்பட்டு, அன்று மாலை3·30மணிக்குத் தனி அதிகாரி அல்லது அவரால் அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும். மேற்படி 15-வது நாள் அரசாங்க விடுமுறையாக இருந்தால் அதற்கு அடுத்த நாள் மேற்படி நேரத்தில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும். காலம் கடந்து வரும் ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்த நிபந்தனைகளை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**கா. கலிபுல்லா,**
தனி அதிகாரி,
சத்தியமங்கலம் நகராட்சி.

(த.26)

## தேனி-அல்லிநகரம் நகராட்சி

(மதுரை மாவட்டம்)

பைப் லைன் பொருட்கள் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 14–12–1971 மாலை 4·00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த நிபந்தனைகள், மற்றும் இதர விவரங்களை நகராட்சி அலுவலகத்திற்கு மனுச் செய்தோ நேரிலோ பெறலாம்.

**கா. முகமது இப்ராஹிம், பி.ஏ.**
தனி அலுவலர்.

(த.29)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப் பணித்துறை

'' வைகைச் சீரமைப்புத் திட்டம் ''.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்கள் சார்பிலும் கீழ்க்காணும் வேலைகளுக்காக—கே. 2. ஒப்பந்த வகையில், அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுரை வட்டம், மதுரை அவர்களால், மதுரை-2-ல் உள்ள அவர்களது அலுவலகத்தில் 15—12—1971 அன்று மாலை 3—00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்பெறும். அதே நாள் மாலை 4-00 மணிக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், அப்போது வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|
| 1. இராமநாதபுரம் மாவட்டம். சிவகங்கை வட்டம், பார்த்திபனூர் அருகே, வைகை, நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 12, 13 மற்றும் 14—முதலியன கட்டுதல். | 12,100 |
| 2. இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டம், பார்த்திபனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 15, 16 மற்றும் 17 முதலியன கட்டுதல். | 12,100 |
| 3. இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டம், பார்த்திபனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 18, 19 மற்றும் 20 முதலியன கட்டுதல். | 12,100 |
| 4. இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டம், பார்த்திபனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 21, 22 மற்றும் 23 முதலியன கட்டுதல். | 12,100 |
| 5. இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டம், பார்த்திபனூர் அருகே வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 24 மற்றும் 25 கட்டுதல். | 8,100 |

ஒவ்வொரு வேலைக்கான, ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள் மற்றும் பத்திரங்களின் விலையான ரூ. 20-ஐ '' P. W. III. O. R. '' என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பொ. ப. து. தலைநிலை வேலைக் கோட்டம், வைகைச் சீரமைப்புத் திட்டம், பரமக்குடி அவர்கள் வரவில் சேரும் படியும், மேற்கண்ட ஒவ்வொரு ஒப்பந்தப் பத்திரத்தின் விலைக்கான விற்பனை வரி 70 காசுகளை '' XII. Sales Tax (d) Miscellaneous '' என்ற தலைப்பிலும் தனித் தனியே அரசுக் கருவூலங்களில் செலுத்தி அதற்கான ரசீதுகளைக் கொடுத்து, மதுரை வட்ட (பொ.ப.து.) மேற்பார்வைப் பொறியாளர், மதுரை-2 அலுவலகத்தில் 6—12—1971 தேதி முதல் 13—12—1971 தேதிக்குள், மேற்கண்ட ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு வேலைக்கான முன் வைப்புத் தொகையும் கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசீய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது '' செட்யூல்டு வங்கிகளின் கால் ரசீது டெபாசிட்டு '' வகையிலோ அல்லது செட்யூல்ட் வங்கிகளின் '' டிமாண்ட் டிராப்டுகளாகவோ '' ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்களும் மதிப்பில் ஐந்து விழுக்காடு குறைத்துப் பெற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த வடிவிலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**சி. தேசிகசங்கர்,**
மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, மதுரை வட்டம், மதுரை-2.

(த. 3)

---

## ஏல விளம்பரம்

தூத்துக்குடி துறைமுக வாரியத்திற்குச் சொந்தமான பழைய இரும்பு, மரம் முதலிய சாமான்களைத் தூத்துக்குடி துறைமுகத்திற்குள் வைத்து 10-12-71 அன்று காலை 10 மணிக்கு பகிரங்க ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகள், சாமான்களின் பட்டியல் முதலியவைகளை ''போர்ட் ஆபீஸர், தூத்துக்குடி-1'' என்ற விலாசத்திற்கு பங்களா தேஷ் அகதிகள் நிவாரண நிதிக்கான ஸ்பெஷல் 5 காசு தபால் தலை உட்பட 55 காசு மதிப்புள்ள தபால் தலைகள் ஒட்டப்பட்ட சொந்த விலாசமிடப்பட்ட உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

**டி. டி. ராமச்சந்திரன்,**
துறைமுக அதிகாரி
தூத்துக்குடி,

(த.56)

இரு நூறு காலி டிரம்கள் (205 லிட்டர்—கொள்ளளவு 6-12-1971-ஆம் தேதி மாலை [illegible] மணிக்கு கடனா நதி அணைப்பகுதியில் செயற்பொறியாளர் அவர்களால் ஏலம் விடப்படும். ஏல விதிகளை அம்பாசமுத்திரம் கடனா நதித் திட்ட கோட்டச் செயற்பொறியாளருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளவும்.

**செயற்பொறியாளர்,**
கடனா நதி திட்டக் கோட்டம்,
அம்பாசமுத்திரம்.

(த.51)

## ஒப்பந்தப் புள்ளி

1972—73-ஆம் ஆண்டில் இராமனுதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசினர் மருத்துவ மனைகளுக்கு தேவையான உணவுப் பொருள்கள் முதலியவை கொடுப்பதற்கான ஒப்பந்தப் புள்ளி.

இராமனுதபுரம் மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட அரசினர் மருத்துவ மனைகளுக்கு 1972—73 (1972-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் 1973-ம் வருடம் மார்ச்சு மாதம் 31-ம் தேதி முடிய அல்லது வேறு குறிப்பிட்ட தேதியிலிருந்து மார்ச்சு மாதம் 31-ம் தேதிமுடிய)ஒரு வருடத்திற்குவேண்டிய ஆகாரச் சாமான்களும் இதர சாமான்களும் வழங்குவதற்கு 1972-ஆம் வருடம் ஜனவரி மாதம் 7-ஆம் தேதி வெள்ளிக் கிழமைபகல் 2 மணிக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் சார்பில் அந்தந்த மருத்துவமனை அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்களுக்கு அந்தந்த சம்பந்தப்பட்ட மருத்துவமனை மருத்துவ அதிகாரிக்கு (Medical Officer) எழுதித் தெரிந்து கொள்ளவும்.

ஒப்பந்தப் பாரம் வேண்டுபவர்கள் '' XXIII. K. Medical miscellaneous '' என்ற தலைப்பில் ரூபாய் 5க்கு ஒரு செலான் அரசாங்க கருவூலத்தில் கட்டி ஒப்பந்தப் பாரங்களை சம்பந்தப்பட்ட மருத்துவமனை அதிகாரிகளிடமிருந்து வாங்கிக் கொள்ள வேண்டும்.

மேலும் 15 காசுகள் ஒப்பந்தப் பாரத்தின் விற்பனை வரிக்காக '' XII. Sales tax–Receipts under the State Sales tax Act—General Sales tax '' என்ற தலைப்பின்கீழ் மற்றொரு செலானில் சர்க்கார் கஜானுவில் கட்டவேண்டும். ஒப்பந்தப் பாரத்தின் விலையையும், அதற்குரிய விற்பனை வரியையும் ரொக்கமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மருத்துவ மனைகளின் பட்டியல்

1. அரசினர் தலைமை மருத்துவமனை, இராமனுதபுரம்.
2. அரசினர் மருத்துவமனை, இராமேஸ்வரம்.
3. அரசினர் மருத்துவமனை, சிவகெங்கை.
4. அரசினர் மருத்துவமனை, விருதுநகர்.
5. அரசினர் மருத்துவமனை, ஸ்ரீவில்லிபுத்தூர்.
6. அரசினர் மருத்துவமனை, சாத்தூர்.
7. அரசினர் மருத்துவமனை, அருப்புக்கோட்டை.
8. அரசினர் மருத்துவமனை, தேவக்கோட்டை.
9. அரசினர் மருத்துவமனை, முதுகுளத்தூர்.
10. அரசினர் மருத்துவமனை, ராஜபாளையம்.
11. அரசினர் மருத்துவமனை, சிவகாசி.
12. அரசினர் மருத்துவமனை, பனைக்குளம்.
13. அரசினர் மருத்துவமனை, கீழசெவல்பட்டி.
14. அரசினர் மருத்துவமனை. திருப்புவனம்.
15. அரசினர் மருத்துவமனை, கண்டனூர்.
16. அரசினர் மருத்துவமனை. கீழக்கரை.
17. அரசினர் மருத்துவமனை, காளுடுகாத்தான்.
18. அரசினர் மருத்துவமனை, திருவாடானை.
19. அரசினர் மருத்துவமனை, வத்திராயிருப்பு.
20. அரசினர் பெண்கள் சிசு மருத்துவமனை, பாகனேரி.
21. அரசினர் பெண்கள் சிசு மருத்துவமனை, பரமக்குடி.
22. அரசினர் பெண்கள் சிசு மருத்துவமனை, இளையாங்குடி.
23. அரசினர் பெண்கள் சிசு மருத்துவமனை, சிவகெங்கை.
24. அரசினர் பெண்கள் சிசு மருத்துவமனை, பள்ளத்தூர்.
25. அரசினர் மீனுக்ஷி சொக்கலிங்கம் மருத்துவமனை, பூலாங்குறிச்சி.
26. அரசினர் மருத்துவமனை, புதுமடம்.
27. அரசினர் காசநோய் நிலையம், சோமநாதபுரம்.
28. அரசினர் மருத்துவமனை, சிங்கம்புனரி.
29. அரசினர் மருத்துவமனை, தொண்டி.
30. அரசினர் மருத்துவமனை, காரைக்குடி.
31. அரசினர் இராமனுதன் பெண்கள் சிசு மருத்துவமனை, பூலாங்குறிச்சி.

ஒப்பந்தம் போடுபவர்கள் அவரவர் சொத்து விவரங்களைப் பற்றி, சால்வென்சி சர்ட்டிபிகேட் அந்தந்த தாசில்தாரிடமாவது அல்லது கெஜெடெட் ஆபீசர் கையொப்பமிட்ட நகலையாவது வாங்கி ஒப்பந்தப் பாரங்களுடன் மேற்கண்ட தேதியில் கொடுக்க வேண்டியது.

மேலும் இந்திய குடிமகன் என்பதற்குச் சான்று அந்தந்த தாசில்தாரிடமிருந்து சர்ட்டிபிகேட் வாங்கி அனுப்ப வேண்டும்.

சால்வென்சி சர்ட்டிபிகேட் 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப் பிறகு வாங்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

வருடாந்திரத் தேவை ரூபாய் 10,000-க்கு மேற்பட்டால் வருமான வரி பரிசிலனை சர்ட்டிபிகேட் குறிப்பிட்ட பாரத்தில் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். காண்ட்ராக்டின் மதிப்பு ரூபாய் 1,000-க்கு மேற்பட்டால் விற்பனை வரி எடுப்பு சான்று ஒப்பந்தத்துடன் அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தங்கள் அடங்கியுள்ள கவர்களின்மேல் '' ஆகாராதி மற்றும் இதர சாமான்களுக்கான ஒப்பந்தம்'' என்று குறிப்பிட்டு அந்தந்த மருத்துவமனை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**டாக்டர் அ. பொன்னுசாமி,**
மாவட்ட மருத்துவ அலுவலர்,

இராமனுதபுரம்.
7—11—1971
(த.19)

## ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கோதையாறு நீர்-மின் திட்டத்தைச் சேர்ந்த நிராகரிக்கப்பட்ட உந்து வண்டிகள் (Lorries):—

| | | |
|---|---|---|
| 1 | எம்.டி.என். 3982 | அவைலிங் பெட்போர்டு டம்பர் 1956 மாடல் டி.பி. ஸ்பெசிபிக்கேசன் எண் K. C. 300 |
| 2 | எம்.டி.என். 5602 | ருசியன் டம்பர்—1961 மாடல் டி.பி. ஸ்பெசிபிக்கேஷன் எண் K. C. 299 |
| 3 | எம்.டி.என். 5634 | ருசியன் டம்பர்—1961 மாடல் டி.பி. ஸ்பெசிபிக்கேஷன் எண் K. C. 302 |
| 4 | எம்.டி. என். 5636 | ருசியன் டம்பர்—1961 மாடல். டி,பி. ஸ்பெசிபிக்கேஷன் எண் K. C. 301 |

அவைகள் இருக்கின்ற நிலையில் வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 27–12–1971 மாலை 3 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் 27–12–1971 மாலை 3-30 மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இந்த ஒப்பந்த சம்பந்தப்பட்ட முழு விவரங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகள் அனைத்தும் எண் 34-ஏ, பெருமாள் புரம், பாளையங்கோட்டையில் இயங்கிவரும் கோதையாறு நீர்-மின்திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் அலுவலகத்தில் 10–12–1971 முதல் எல்லா வேலை நாட்களிலும், வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலே கண்ட ஒப்பந்தத்திற்குக் கட்டுத் தொகை ரூ. 500 (ரூபாய் ஐந்நூறு மட்டும்) ஒவ்வொரு உந்து வண்டிக்கும் தனித்தனியாக கோதையாறு நீர்-மின்திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் ரொக்கமாகவோ அல்லது ட்ராப்ட் (draft) மூலமாகவோ செலுத்திச், செலுத்தியதற்கான இரசீது அல்லது ட்ராப்டை ஒப்பந்தப் புள்ளி சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளோடு அனுப்பி வைக்க வேண்டும்.

ஒப்பந்த நிபந்தனைகள் கொண்ட தஸ்தாவேஜுகள், நிராகரிக்கப்பட்ட உந்து வண்டிகளின் முழு விவரங்களையும் அறிய விரும்புவோர் நேராகவோ அல்லது பணவிடைத்தாள் மூலமாகவோ ரூ. 5-15 (ரூபாய் ஐந்து காசு பதினைந்து மட்டும் விற்பனை வரி உட்பட) ஒவ்வொரு வண்டிக்கும் தனித்தனியாக கோதையாறு நீர்-மின்திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்த விலையான ரூ. 5-15 (ரூபாய் ஐந்து காசு பதினைந்து மட்டும்) திருப்பித்தரத் தக்கதல்ல. ஒப்பந்த நகல் விண்ணப்பதாரர்களுக்குச் சாதாரண அஞ்சலில் அனுப்பிவைக்கப்படும். அஞ்சல் பிரயாணத்தின்போது ஒப்பந்த நகல் தவறினால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

உந்து வண்டிகளைப் பார்வையிட விரும்புவோர் கோதையாறு நீர்-மின்திட்ட கீழ்த்தங்கலில் உள்ள தலைமைப் பண்டக சாலைப் பொறுப்பாளரின் அலுவலகத்தில் அலுவல் நாட்களில் வேலை நேரங்களில் அனுமதிக்கப்படுவார்கள். ஒருவர் பெயருக்கு வாங்கிய ஒப்பந்த நகல் மற்றவர் பெயருக்கு மாற்றத் தக்கதல்ல.

பாளையங்கோட்டை,
2—11—1971.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
கோதையாறு நீர்-மின்திட்டம்.

(த.5)

## ஏல விற்பனை

பழுதடைந்த நிலையிலுள்ள குளித்தலை வட்டார ஜீப் எம். எஸ்.ஒய். 7809—15–12–71-ஆம் தேதி புதன்கிழமை காலை 11 மணிக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சித் தலைவர்) அவர்களால் அரசினர் விதிமுறைகளின்படி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏல சம்பந்தமான விவரங்களை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மோட்டார் வாகனத்தை நேரில் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

**மாவட்ட ஆட்சியாளர்,**
திருச்சிராப்பள்ளி

(த.64)

## ஒப்பந்தப் புள்ளி

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

தமிழக ஆளுநருக்காகக் கீழ்க் கையொப்பமிட்டவரால் முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி 15–12–71 மாலை 3 மணிவரை ''சீத்தாவுட் பார் மவுண்டிங் பிளாக்ஸ்'' தமிழ்நாடு அரசாங்க அச்சகத்திற்கு 1971–72-ம் ஆண்டில் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் டைப் செய்து அனுப்பப்பட வேண்டும். மேற்கொண்டு விவரங்களுக்கு இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை-1 அவர்களுக்கு எழுதவும்.

**ஜி. ரெங்கா ராவ்,**
இயக்குநர்,
எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, சென்னை-1.

(த.55)

## ஒப்பந்தப் புள்ளி

1. கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைக்குத் தேவையான உணவுப் பொருட்கள் முதலான சாமான்களை 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்தோ அல்லது ஒப்பந்தப்புள்ளி ஒப்புக் கொள்பவர் குறிப்பிடும் தேதியிலிருந்தோ 1973-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் 31-ம்தேதி முடிய வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தேவை. ஒப்பந்தப் புள்ளிகள், கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிபாளரால் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிவரை தமிழக ஆளுநர் சார்பாக பெற்றுக் கொள்ளப்படும். பின்புவரும் ஒப்பந்தப் புள்ளிகள் எக்காரணத்தைக் கொண்டும், ஏற்றுக்கொள்ளப்படமாட்டது.

2. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், தேவையான பொருட்களின் பட்டியல்கள், ஒப்பந்த நமூனு முதலியன வேண்டுவோர் அவற்றின் கிரயமாய் ரூ. 5.20 (ரூபாய் ஐந்தும், காசுகள் இருபது மட்டும்) செலுத்திச் செலுத்துச்சீட்டுடன், கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அலுவலகத்திற்கு நேரில் வந்தோ அல்லது விண்ணப்பம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகையை ரிசர்வ் பாங்கியிலோ வது அல்லது ஏதேனும் ஒரு அரசாங்கக் கருவூலத்திலாவது கீழ்க் குறிப்பிட்டுள்ள தலைப்பின் கீழ் * (XXIII Medl I Directer of Medl Education—g Mise other receipts) செலுத்தி தாக்கல் செய்யப்பட வேண்டும் எக்காரணத்தைக் கொண்டும் இந்தத் தொகை திரும்பக் கொடுக்கப்படமாட்டாது. மற்றும் தேவையான விவரங்கள் வேண்டுவோர் மருத்துவ மனை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், பொருள்களின் விவரப்பட்டியல் ஆகியவற்றை படித்த பின்பு கையொப்பமிட்டு, ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்துக் கொடுத்து விடவேண்டும்.

குறிப்பு : ஒப்பந்தப்புள்ளிகளைச் சீலிட்டு உறையிலிட்டு, கண்காணிப்பாளர் கோவை மருத்துவக் கலலூரி மருத்துவ மனை, கோவை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மீது'' 1972-73-ம் வருடத்துக்கு உணவுப் பொருட்களும், மற்ற சாமான்களும் வழங்க ஒப்பந்தப் புள்ளி என்று '' என்று குறிப்பிட வேண்டும்.

**டாக்டர் டி. லட்சுமணன்,**
எம். எஸ்.

கோவை மருத்துவக் கல்லூரி
மருத்துவமனை, கோவை.

(த. 38)

## ஏல விற்பனை

மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், 16, சௌத் போக் ரோடு, தி. நகர் சென்னை-17-ல் உள்ள ஜீப் எம்.டி.எச். 2648 (வில்லீஸ் 1959 டூரர்) 15-12-1971 அன்று 11 மணிக்கு உள்ள இடத்தில் இருக்கும் நிலையில்பகிரங்க ஏலத்தில்விடப்படும். பின்குறிப்பு :

1. மேற்படி வண்டியை மேலே கண்ட விலாசத்தில் எல்லா வேலை நாட்களிலும் பார்வையிடலாம்.
2. மற்ற நிபந்தனைகளுக்கும், விபரங்களுக்கும் கூட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலர், செங்கை மாவட்டம், சென்னை-17 அவர்களை அணுகவும்.

**ஆணையாளர்,**
வட்டாரப் போக்குவரத்துந் துறை.

(த-48)

## விற்பனை

## வீட்டு வசதி வாரியம்

**கோவை புதூர்.**

'' குறைந்த தவணை முறையில் வீட்டுமனைகள், வீடுகள் விற்பனை ''

1. தண்ணீர் வசதியுடன் கூடியது.
2. தெருவிளக்குகள் அமைக்கப் பட்டுள்ளன.
3. தார் சாலைகள் போடப்பட்டுள்ளன.
4. போக்குவரத்து வசதிகள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

வீட்டு மனைக்கான விண்ணப்பங்களை ரூ. 3 (அஞ்சலில்அனுப்ப ரூ. 4) வீடுகளுடன் கூடிய விண்ணப்பங்களை ரூ. 5 (அஞ்சலில் அனுப்ப ரூ. 6) மேற்படி அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 15-1-1972 வரை பெற்றுக்கொள்ளப்படும்.

இதனைப் பற்றிய மேலும் விவரங்களை ஆர்.எஸ். புரத்தில் அமைந்துள்ள கோவை வீட்டு வசதிப் பிரிவு அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

**எல். ஆர். சாஸ்திரி,**
நிர்வாக அதிகாரியும்,
செயற்பொறியாளரும்,
கோவை வீட்டுவசதிப்பிரிவு.

11-22, திவான் பகதூர் சாலை,
ஆர். எஸ். புரம், கோவை-2,

தொலைபேசி எண் : 25811.

(த. 43)

## ஏல விற்பனை

## தீயணைப்புத் துறை

கண்டம் செய்யப்பட்ட கீழ்க் கண்ட வண்டி வேலூர் தீயணைப்பு நிலையத்தில் 21-12-71 அன்று காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். மேற்படி இடத்தில் வண்டியைப் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகளைக் கீழே கையொப்பமிட்டவர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவு எண்—
எம்.எஸ்.ஓய். 9247

வருடம், மாடல்—
ஸ்டுடிபேக்கர், வி '8,

1952 மாடல்
பெட்ரோலில் ஓடுவது.

**கோட்டத்தீயணைப்பு அலுவலர்,**
வேலூர் கோட்டம்.

(த. 52)

# நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை

## தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அவர்கள் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15-12-1971 மாலை 3 மணி வரை குறளகத்தின் 4-வது மாடியிலுள்ள அலுவலகத்தில் கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் பெயர். | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|
| சென்னை, திருச்சி, திண்டுக்கல் (தே.நெ. 45) சாலையின் கி.மீ. 104/4 (மைல் 64/2) உள்ள பாலத்தைத் திருப்பிக் கட்டுதல். | 6,610 |

ஒப்பந்தப் புள்ளிகள் 15—12—1971 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப் படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரை படங்கள் முதலிய வற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் 11, கிண்டியிலுள்ள நெடுஞ்சாலைக் கட்டட அலுவலகத்தில் 6-12-1971 முதல் 14-12-1971 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25.88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். அப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன் வைப்புத்தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் 11, கிண்டி அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்தினுள்ளும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை தேசிய நெடுஞ்சாலை) கோட்டம் 11, கிண்டி, சென்னை-25. பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கிப் பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

**தி. மு. அ. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.).

(த.47)

தமிழ்நாடு மாநில ஆளுநருக் காக மதுரை நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை கோட்டப் பொறியாளர் அவர்களால் 72—73-ஆம் ஆண்டு அரசாங்கச் சாலைகளின் பரா மரிப்பு வேலைகளுக்கு முத்திரை பதிக்கப்பெற்ற சதவீத ஒப் பந்த விவரங்கள் கோட்டப் பொறியாளர் (நெகிப்) அலு வலகத்தில் '' சொர்ணு '' கட்ட டத்தில் 15—12—1971-ஆம் தேதி பிற்பகல் 3-00 மணி வரை (அலுவலகக் கெடியார நேரப் படி) பெற்றுக்கொள்ளப்படும். மேற்கண்ட ஒப்பந்த விவரங்கள் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற வர்கள் முன்னிலையில் அன்று பிற்பகல் சரியாக 3-15 மணி அளவில் கோட்டப் பொறியா ளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்த விவரங்கள் கோட்டப் பொறியாளர் அலு வலகத்தில் ஒவ்வொரு வேலைக் கும் ரூபாய் 3-15 வீதம் செலுத்தி (விற்பனை வரி உட்பட) (இந்தத் தொகை திருப்பித்தரப்பட மாட்டாது) எல்லா வேலை நாட் களிலும் அலுவலக நேரங்களில் (அதாவது காலை 10-30 மணி முதல் மாலை 5-00 மணிவரை) 6—12—1971 முதல் 13—12—1971 வரை விண்ணப் பித்துப்பெற்றுக் கொள்ளலாம் ஒப்பந்த விவரங்கள் பெறப் படும் 13—12—1971-ஆம் தேதிக்குப் பின் எக்காரணத்தை முன்னிட்டும் ஒப்பந்த விவரங் கள் விற்பனை செய்யப்பட மாட்டது.

முன் பண வைப்புத் தொகை மதுரைக் கோட்டப் பொறியாளர் சார்பில் மதுரைக் கோட்ட எல் லைக்குள் இருக்கும் அரசாங்கக் கருவூலத்தில் வருவாய் வைப்புத் தொகை என்ற தலைப்பில் ரெவின்யூ டெப்பாசிட் செலுத்தி அதற்கான கருவூலச் செலுத்துச் சீட்டை (சலான்) ஒப்பந்த விவரத்துடன் இணைக் கப்பட வேண்டும். டேவணித் தொகையை எந்த ஷெட்யூல் பாங்கிலும், டிமாண்டு டிராப் டாகவும், பாங்கி கியாரண்டி ஆகவும் பெற்றுக் கொள்ளப் படும். டிமாண்டு டிராப்டுகள் (ஸ்டேட் பாங்க் அல்லது இதர பாங்குகளால் கொடுக்கப்படும்) பணமாக்கப்பட்டவுடன் ஒப் பந்தம் ஏற்றுக்கொள்ளப்படும். தேசிய பாதுகாப்புப் பத்திரங் கள், தேசியக் கடன் பத்திரங்கள் தமிழ்நாடு மின்சாரவாரியப் பத்திரங்களும் முன்பண வைப்பு களாக ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்படி மின்சார வாரியப் பத்திரங்கள் கோட்டப் பொறி யாளரின் பேரில் மாற்றப்பட்டி ருக்க வேண்டும். தவிரப் பணமோ காசோலையோ (செக்) முன் பண வைப்புக்காக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. (Vide G.O.MS.No.1077, P.W.D. dated 1—7—1969) முன் பண வைப்புத் தொகைக்காகசெலுத்துச்சீட்டின் றியும் வருமானவரி, விற்பனைவரி செலுத்தியதற்கான சான்றிதழ் கள் சம்பந்தப்பட்ட அதிகாரி களிடமிருந்து பெற்றும் இணைக் கப்படாத ஒப்பந்த விவரங்கள் தள்ளுபடி செய்ய ஏதுவாகும்.

**எஸ். எம். சுப்பிரமணியம்,**
கோட்டப் பொறியாளர்,
நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை),
மதுரை.

(த.76)

தமிழ்நாடு மருத்துவத் துறையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்ய 16—12—1971 மாலை 5 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. அரசு மருத்துவ மனைகளில் டயட்டீசியன் பதவிகள் :

தேவைப்படும் இடங்கள்-3.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 425—20—5 525—25—700.

கல்வித் தகுதிகள் : 1. பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி. பட்டப் படிப்பில் இரசாயனம் அல்லது மனை இயல் பாடமாக படித்திருக்க வேண்டும். அல்லது மனை இயல், நர்சிங் மருத்துவம், அறுவைச் சிகிச்சையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

2. அனைத்திந்திய மக்கள் நல்வாழ்வுத் துப்புரவு நிறுவனத்தில் டயட்டீசியன் டிப்ளமா, கல்கத்தா அல்லது அங்கீகாரம் பெற்ற நிறுவனம் அல்லது அமைப்பொன்றில் மனை இயல் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

மக்களுடைய தேவைக்குத் தகுந்தாற்போல் பழகியவர்களுக்கும் சமூகத் தொண்டு புரிந்திருப்பவர்களுக்கும் முதலிடம் கொடுக்கப்படும்.

வயது : 1—7—1972-ல் 40 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

2. அரசு மருத்துவக் கல்லூரிகளில் ' நான்மெடிகல் டியூட்டர்ஸ்.'

(தற்காலிக நியமனம்).

| உத்தியோகத்தின் பெயரும் தேவையான இடங்களும். | |
|---|---|
| உடற்கூறியல் நான்மெடிகல் டியூட்டர். | 14 |
| உடல் அமைப்பியல் டியூட்டர்கள். | 11 |
| கிருமி இயல் நான்மெடிகல் டியூட்டர். | 11 |
| பார்மகாலஜி நான்மெடிகல் டியூட்டர். | 1 |
| பயோ கெமிஸ்ட்ரி நான் மெடிகல் டியூட்டர். | 2 |
| மொத்தம் ... | 39 |

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு 575—25—600—40—1,000.

தகுதி : பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றில் உடற்கூறியல், உடல் அமைப்பியல் மைக்ரோபயாலஜி அல்லது பயோ கெமிஸ்ட்ரியில் எம். எஸ்ஸி. பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச் சாதி வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு கிடையாது. அங்க ஈன மானவர்களுக்கு வயது வரம்பு 10 ஆண்டுவரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், மகன்கள், மணமாகாத மகள்கள், 1—1—1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீஸ் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ்டக்டராகப் பணிபுரிந்த முன்னாள் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவர்களாக இருந்தால், வயது விஷயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற் படை, விமானப் படை, ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1—7—1972 அன்று 40 வயதுக்குக் குறைவானவர்கள் 1—1—1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும் இலங்கை பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி, 23 செ. மீட்டர் உள்ள தன் முகவரி குறிப்பிடப்பட்ட 0·35 காசு அஞ்சல் வில்லை ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(த. 11)

## குடும்ப நலத் துறை

சென்னை மக்கள் நல்வாழ்வு—குடும்பநல இயக்குநர் (பொது நலப்பிரிவு) அலுவலகத்தில் தொழில் நுட்பப்பணியாளர் (சத்துணவு) பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதி—

கீழ்க்குறித்த தகுதிகள் உள்ளவர் இப்பதவியில் அமர்த்தத்தக்கவர்—

1. 25 வயதுக்குட்பட்டவர்.
2. எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு படித்து முடித்தவர். மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதியவர்.
3. நல்ல உடற்கட்டும், பார்வையும், வெளி வேலை செய்யத்தக்க திறனும் உள்ளவர்.
4. சென்னை மருத்துவக் கல்வி இயக்குநர் நடத்திய ஆய்வகத் தொழில் நுட்பச்சான்றிதழ்பெற்றவர்.

விண்ணப்பங்கள், மக்கள் நல்வாழ்வு—குடும்பநல இயக்குநர் (பொது நலப் பிரிவு) 81, அண்ணா சாலை, சென்னை-6 என்ற முகவரிக்கு 15-12-1971 தேதிக்குள் வந்து சேரவேண்டும். நேரில் காண அழைக்கப்படுவோருக்குப் பயணப்படித் தொகை ஏதும் தரப்படமாட்டாது.

**இயக்குநர்,**

மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத்துறை.

(த-60)

## ஏல விற்பனை

1957 வருட மாடல் பார்கோ லாரி எம்.டி.ஓ. 2422, பெட்ரோலில் இயக்கப்படுவதும், 153'' பேஸ் வீல் உடையதும் மூன்று நபர் அமர வசதியுள்ளதும், பின்புறம் திறந்த அமைப்பு உள்ளதுமான ஒரு லாரி கீழ்க்கண்ட அலுவலரின் அலுவலகத்தில் 15-12-1971 அன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மேற்கொண்டு தகவல்கள் மற்றும் நிபந்தனைகளைக் கீழ்க்கண்ட அலுவலரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கண்காணிப்பாளர்,**

மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு.

(த.53)

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில்வளர்ச்சித் துறை

வேலையின் பெயர் .. தொழிற்பேட்டையில், ஒன்றில் 4 L டைப் பணிக் கூடங்கள் அமைப்பதற்காக, பேட்டை, திருநெல்வேலி மாவட்டம்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காக பொருள்களை வழங்குவதற்காக தொழில்துறை மற்றும் இதர அரசுத்துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் 21-12-1971 அன்று மாலை 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3.10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை 2- அவர்களால் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்த வடிவம் .. ... | மொத்தத் தொகை. |
| 2. | கட்டுத் தொகை .. .. | ரூபாய் 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு). |
| 3. | மாதிரி வரைபடத்துடன் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலையும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலைக்குரிய விற்பனை வரியும் சேர்த்து. | ரூபாய் 10·40 காசு. |
| 4. | வேலையை முடிக்க வேண்டிய காலம். | 6 மாதங்கள். |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள், நிர்வாகப் பொறியாளர், அலுவலகம், தெற்குக்கோட்டம் தொழிற்பேட்டை, மதுரை என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர், (கட்டுமானம்), தெற்குக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் 10—12—71 அன்று முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக் குக் கிடைக்கும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10·40ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது). அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ " இண்டஸ்டிரீஸ் ஏனைய ரசீட்ஸ் " என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), தெற்குக் கோட்டம், தொழிற்பேட்டை, மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத்தொகையை சலான் வடிவிலோ, ' கால் டிபாசி ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிரா டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாள ' சி ' (கட்டுமானம்), தெற்குக் கோட்டம், மதுரை அவ ளது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியி டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படு மாநில அரசுக்கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரிய பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவீகிதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசி சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தி தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்க பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டு தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வகை யிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்று கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப் பகுதி.

சென்னை 2.
(த. 2)

### ஏல விற்பனை

கீழ்க்கண்ட தோராயமான அளவுள்ள மரங்கள் கார்குடி மத்திய மரக் கிடங்கிலும், ரோடு ஓர மரக் கிடங்கு தொரப் பள்ளியிலும் நீலகிரி வடக்குக் கோட்ட வன அலுவலர் அவர் களாலோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவல ராலோ 9-12-1971 காலை 9-00 மணிக்கு நடத்தப்படும்.

| இனங்கள். | தோராயமான அளவு. |
|---|---|
| 1. ஈட்டி .. .. .. .. | க. மீ. |
| 2. தேக்கு .. .. .. .. | 4 |
| 3. ஹொன்னே .. .. .. .. | 200 |
| 4. கிரிலியா .. .. .. .. | 50 |
| 5. வெண்தேக்கு .. .. .. | 60 |
| 6. நாவல் .. .. .. .. | 10 |
| 7. மத்தி .. .. .. .. | 10 |
| 8. தேக்குக் கால்கள் .. .. | 200 |
| ... .. | 1,214 |

ஏனைய பிற விவரங்கள் நீலகிரி வடக்குக் கோட்ட வன அலுவலகத்திலோ அல்லது முதுமலை வனச் சரக அலுவலகத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். சுப்ராயலு நாயுடு,
மாவட்ட வன அலுவலர்,
நீலகிரி வடக்குக் கோட்டம்.

(த.42)

## ஒப்பந்தப்புள்ளி

தமிழ்நாட்டில் மக்கள் நல் வாழ்வுப்பணிகள் :—
குடும்ப நலத்திட்ட இயக்குநர் அவர்களின் நிர்வாகத்திலுள்ள அரசாங்க மருத்துவ நிறுவனங்களுக்கு 1972—73-ஆம் ஆண்டுக்கு எக்ஸ்ரே டெவலப்பர்கள், ஃபிக்சஸ், அப்சார்பெண்ட் பஞ்சு ஆகியவைகளை வழங்குதல்.

1972 ஏப்ரல் 1 முதல் அல்லது அதற்குப்பிறப்பட்ட ஒரு தேதியிலிருந்து 1973 மார்ச்சு 31 வரை உள்ள காலத்துக்கு மக்கள் நல்வாழ்வு—குடும்பநலத்திட்ட இயக்குநர் நிருவாகத்திலுள்ள அரசினர் மருத்துவ நிறுவனங்களில் ஊராட்சி மன்றங்களால் நிருவகிக்கப்படுபவர்களின் தேவைக்காக எக்ஸ்ரே டெவலப்பர்கள், ஃபிக்சஸ் ஆகியவைகள் வழங்குவதற்கும், அப்சார் பெண்ட் பஞ்சு, கம்பளம் வழங்குவதற்கும், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் துணை இயக்குநர், மக்கள் நல் வாழ்வுப்பணி, குடும்ப நலத்திட்டம் (கணக்கு) அவர்களால் 1972 ஜனவரி 10-ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 2·00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் விவரங்கள், ஒப்பந்தப்புள்ளி வடிவங்கள் ஆகியவைகளுக்கு மக்கள் நல்வாழ்வுப்பணி குடும்ப நலத்திட்ட அலுவலகம், சென்னை-6க்கு 1971 டிசம்பர் 15-ஆம் தேதியிலிருந்து மனுச் செய்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை ரூ. 10·37 (ரூபா பத்து காசுகள் 37 மட்டும்) 3½ சதவிகித விற்பனைவரி மீது 5 சதவிகித சர்ச்சார்ஜ் வரி உள்பட) இக்கட்டணத்தை இந்திய ரிசர்வ் வங்கியிலோ அல்லது அரசுக் கருவூலத்திலோ தமிழ்நாடு அரசினர் கணக்கில் செலுத்த வேண்டும். இத் தொகை ஒரே சலானில் '' XXII '' மருத்துவம் ஜி. மிஸ்ஸலேனியஸ்—ஐ மக்கள் நலப்பணி குடும்ப நலத்திட்ட இயக்குநர்—இதர வரவினங்கள் '' என்ற தலைப்பில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரியை ''XII'' விற்பனை வரி அரசு விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் வரவினம்—பொது விற்பனை வரி '' என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளி வடிவத்தைக் கோரும் மனுவுடன் ஒரிஜினல் சலான்கள் இணைக்கப் படவேண்டும். எக்காரணம் கொண்டும் இத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

1971 அக்டோபர் 1-க்குப் பிறகு பெறப்பட்ட சால்வன்சி நேசனலிட்டி சான்றிதழ் தாசில் தாரால் கையொப்பமிடப் பட்டும், ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு ரூ. 10,000க்கும் மேல் இருக்குமானால் வருமான வரி வெரிபிகேசன் சான்றும், ஒப் பந்தப்புள்ளியின் மதிப்பு ரூ. 1,000க்கு மேற்பட்டிருக்குமானால் விற்பனை வரிச்சான்றும் அல்லது அரசிதழ் அலுவலரின் ஒப்பந்தத்துடன் கூடிய சரியான நகல்கள் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும்.

**எம். பழனிசாமி,**

மக்கள் நல்வாழ்வுப்பணி
குடும்ப நலத்திட்டம்,
(கணக்குகள்) உதவியாளர்—

(து. 22)

## ஒப்பந்தப் புள்ளி

தஞ்சாவூர் மாவட்டம் சாக் கோட்டை அரசினர் விதைப் பண்ணையில் விதை நெல் பதனப் படுத்தும் இயந்திர அமைப்புகளை வழங்கவும் நிருமாணிக்கவும் ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குக் கடைசி நாள் 6—12—1971 மாலை 3 மணி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3·30 மணிக்கு அடியிற் கையொப்ப மிட்டவரால் அவரது அலுவலகத்தில் பிரிக்கப்படும்.

**வளர்நிலை ஆராய்ச்சிப் பொறியாளர்.**

வட்டார ஆராய்ச்சி நிலையம்,
கோயம்புத்தூர்—3.

(து. 8)

## வேலை வாய்ப்பு

புதுக்கோட்டை, பார்ஸ்டல் பள்ளியில் புத்தகம் கட்டும் கண்காணிப்பாளர் (பைண்டிங் மேஸ்திரி) வேலை ஒன்று நிரந்தரமாகக் காலியாக உள்ளது. அதற்குக்கீழ்க்கண்ட தகுதியுள்ளவர்கள் '' கண்காணிப்பாளர், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை, திருச்சி மாவட்டம் '' என்ற முகவரிக்கு 6—12—1971-க்குள் விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

### தகுதி

1. வயது :—30 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும் (மலை ஜாதியினர், பிற்பட்ட வகுப்பினர்களுக்கு 35 வயதுக் குட்பட்டிருக்க வேண்டும்).

2. கல்வித்தகுதி :—அரசாங்க தொழில் நுட்பத் தேர்வில் தேறியிருக்க வேண்டும். இரண்டு ஆண்டுகள் புத்தகம் கட்டும் பணியில் செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

3. உடல் :—மருத்துவ பரிசோதனைகளில் உடல் தகுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

4. சம்பள விகிதம் :—ரூ. 140—3—155—4—175—5—210 பிரத்தியேகச் சம்பள மாதம் ரூ 5.

5. பதவி, வேலைத் திறனைப் பொறுத்து நிரந்தரமாக்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் நேர் முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் போது தங்கள் சொந்தச் செலவிலேயே வரவேண்டும்.

**ரா. சேரலாதன்,**
**கண்காணிப்பாளர்.**

இடம் : புதுக்கோட்டை,
15–11–1971.

(து. 27)

## தொழில் வணிகத் துறை

வேலையின் பெயர்: மதுரை, தொழிற்பேட்டை வட்டார சோதனைக் கூடத்திற்கு மின்சார வயரிங்குக்குப் பேனல் போர்டுகள் சப்ளை செய்வதற்காக.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற் கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காகப் பொருள்களை வழங்குவதற்காக தொழில்துறை மற்றும் இதர அரசுத்துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் 10—12—71 அன்று மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப் படும்.

1. கட்டுத் தொகை .. .. ரூ. 200 (ரூபாய் இரு நூறு மட்டும்).
2. மாதிரி வரைபடத்துடன் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலையும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலைக் குரிய விற்பனை வரியும் சேர்த்து. ரூ. 5-20 காசு.
3. வேலையை முடிக்க வேண்டிய காலம். 1 மாதம்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், (வி) தெற்குக் கோட்டம், தொழில்துறை, மதுரை-7 என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) தெற்குக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் 20—11—71 அன்று முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 5·20 ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது). அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ '' . இண்டஸ்டிரீஸ், ஏனைய ரசீட்ஸ் '' என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (வி) (கட்டுமானம்) தெற்குக் கோட்டம் தொழில்துறை, தொழிற்பேட்டை, மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத்தொகையை சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (வி) (கட்டுமானம்) தெற்குக் கோட்டம், தொழிற்துறை, மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக்கடன் பத்திரங்களும், தமிழ் நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சத விகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப் படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி மத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்
கட்டுமானப் பகுதி

சென்னை-2
(த. 14)

## குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்

எண். 1372/71/SD1

நாள் 19—11—1971.

பொருள் : கோயம்புத்தூர் சாக்கடைத் திட்டம்—மண்டலம் 3—பகுதி நான்கு—முதல் கட்டம்—சாக்கடை நீர் கொண்டு செல்லும் குழாய் போடுதலும் இணைத்தலும் அதன் சம்பந்தப்பட்ட வேலைகளும்.

பார்வை : இவ்வலுவலக ஒப்பந்தப் புள்ளி விவர அறிவிப்பு எண். 1372/எஸ்.டி.1 நாள் 21—10—1971.

மேற்படி வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெறும் கடைசித் தேதி 22—12—1971 மாலை மூன்று மணிவரை நீட்டிக்கப் பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனைத் தேதியும் 20—12—1971 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மற்ற நிபந்தனைகளில் மாறுதல் எதுவுமில்லை.

சே. ம. சாகுல் அமீத்,
மேற்பார்வைப்
பொறியாளர், கோவை.

(த.72 அ)

உணவுப் பொருள் வழங்கல்

காஞ்சிபுரம் மாவட்ட மருத்துவமனைக்கும், தாம்பரம், திருவள்ளூர், பொன்னேரி, மதுராந்தகம், திருத்தணி, பூந்தமல்லி, ஸ்ரீபெரும்புதூர், மாதவரம் பால் பண்ணை ஆகிய அரசினர் மருத்துவ மனைகளுக்கும் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம்தேதியிலிருந்து ஆரம்பித்தோ அல்லது அந்தந்த நிறுவனங்களுக்கு நிர்ணயிக்கப்படும் தேதி முதல் 1973-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம்தேதி வரையுள்ள காலத்திற்கு உணவுப் பொருட்களும் மற்றும் வைத்திய நிலையத்திற்கு தேவையான இதரப்பொருட்களும் சப்ளை செய்வதற்காக முத்திரையிட்ட ஒப்ப அறிவிப்புக்கள் (ஒப்பந்தங்கள்) வாங்கப்படும். ஒப்பந்த அறிவிப்புகள் (Tender) 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 2-00 மணி வரை அந்தந்த மருத்துவமனைக் கண்காணிப்பாளர் அல்லது மருத்துவ அலுவலர்களால், தமிழக ஆளுநர் அவர்களுக்காக வாங்கப்படும்.

ஒப்பந்த அறிவிப்பு நமூனவும் (Tender form) மருத்துவமனைக்குச் சப்ளை செய்ய வேண்டிய பொருட்கள் அடங்கிய பட்டியலும் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய நோட்டீசும் வேண்டுவோர் ரூ.5.00-ஐ ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா அல்லது ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா அல்லது அதன் கிளை பாங்குகளிலோ அல்லது அரசாங்கக் கருவூலத்திலோ " XXIII. Medical—J. Miscellaneous " என்ற பிரிவின் கீழ்ச் செலுத்தி அந்தச் சலானை அந்தந்த வைத்திய நிலையங்களில் அதிகாரிகளிடம் கொடுத்து மேற்கண்ட படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்த அறிவிப்பு நமூனு (Tender Form) வாங்குவதற்கு 3½ சதவீதம் விற்பனை வரியை ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா அல்லது ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா அல்லது அதன் கிளை பாங்குகளிலோ அல்லது அரசாங்கக் கருவூலத்திலோ " XII. Sales Tax —Receipts under the State Sales Tax Act—General Sales Tax " என்ற பிரிவின் கீழ் கட்டி அந்தச் சலானை அந்தந்த மருத்துவமனைகளில் மேற்குறிப்பிட்ட படி ரூ. 5 (ஐந்துக்கான) சலானுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

குறிப்பு

1. ஒப்பந்தங்களுடன் பெரும் புள்ளிச் சான்றிதழும், தேசிய இனச் சான்றிதழும் அதற்குரிய படிவத்தில் சேர்த்து அனுப்ப வேண்டும். இந்தப் (சால்வன்சி சர்டிபிகேட்) பெரும் புள்ளிச் சான்றிதழ் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப் பின் வாங்கியதாகவும், தாசில்தார் அல்லது தலைமையகத்துணைத் தாசில்தாரால் கொடுக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். இதனுடைய உண்மை நகலை அரசாங்கத்தினரால் பதிவு செய்யப்பட்ட அதிகாரிகளின் கையொப்பம் பெற்றும் சமர்ப்பிக்கலாம்.

2. ஒப்பந்த நிபந்தனைகளின் படி வருமான வரி, விற்பனை வரி சான்றிதழ்கள் ஒப்பந்தத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒப்பந்த அறிவிப்புக் கொடுக்க எவரும் ஒப்பந்த அறிவிப்புக் கொடுத்த பின் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலருடன் எந்தக்கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது.

**மாவட்ட மருத்துவ அலுவலர்,**

10–11–71 காஞ்சிபுரம்.

(த.61)

## தொழில் வணிகத் துறை

எண். 19427/டி.பி./டி.6/க்யூ/71, நாள் 15–11–1971.

வேலையின் பெயர் :ஒசூர், காட்பாடி, அரக்கோணம், திருவண்ணாமலை. அம்பத்தூர் பகுதிகளில் உள்ள பணிமனைக் கூடங்களுக்கு சுழற்கதவுகள் (ரோலிங் சட்டர்கள்) வழங்குதல்—நிறுவுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும், மேற் கண்ட பணிகளுக்காகத் தயாரிப்பாளர்கள் விற்பனையாளர்களிடமிருந்து 10–12–1971 மாலை 3 மணி வரை தொழில் வணிகத்துறையின் நிருமாணப் பிரிவு மேற்பார்வைப் பொறியாளரிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அதேநாள் மாலை 3-10 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளரால் (35–2, உட்ஸ்ரோடு, சென்னை-2), அப்போது வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்படும்.

1. ஒப்பந்த முறை—கே. 2.

2. கட்டுத் தொகை—ரூ. 625

3. வேலையை முடிக்க வேண்டிய காலம்—விநியோக ஆணைத் தேதியிலிருந்து ஒரு மாதம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 1–12–1971 முதல் அலுவலக நேரங்களில் நிருவாகப் பொறியாளர் (சி) அம்பத்தூர் கோட்டம், தொழில் வணிகத் துறை, 35-2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அலுவலகத்தில் இலவசமாகக் கிடைக்கும்.

கட்டுத் தொகை ஷெட்யூல்ட் பாங்குகளில் எடுக்கப்படும் டிமாண்ட் டிராப்டாகவும் கால் ரசீதாகவும், செல்லான்களாகவும் ஏற்றுக் கொள்ளப்படும்.

நிருவாகப் பொறியாளர் (சி) அம்பத்தூர் கோட்டம், சென்னை -2 என்பவர் பெயரில் இந்தக் கட்டுத் தொகைக்கான, ஷெட்யூல் பாங்குகளில் எடுத்து அனுப்பப்படும் டிமாண்ட் ட்ராப்டுகள், மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசின் செக்யூரிட்டி சம்பந்தப்பட்ட அஞ்சல் நிலையச் செக்யூரிட்டுகள் நடப்பு மதிப்பிற்கு 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்கள் சம்பந்தப்பட்ட அஞ்சல் நிலையங்களில் தகவலுடன் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிக் கேரண்டியும் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**மேற்பார்வைப் பொறியாளர் (சி)**

(த.65)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால், வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொது சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக் காரர்களிடமிருந்து எண். 17 சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப்பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 22—12—1971 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக் காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் .. கோவில்பட்டி குடிநீர்த் திட்டம்—மூன்றும் கட்டம் — தலைமை நீரேற்று நிலையம்—நீரேற்றிகளும் அதன் உபகரணங்களும் அளித்தல்—நிறுவுதல்.

ஒப்பந்த வகை .: மொத்தத் தொகை.

முன் வைப்புத்தொகை: ரூ. 5,640 (ஐயாயிரத்து அறுநூற்று நாற்பது).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசீய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் கோவில்பட்டி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு. ஆறு மாதம்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை. ரூ. இருபதும் காசு எழுபத்தி ஐந்தும் மட்டும். (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் கோவில்பட்டி பொதுச்சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து, 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 18—12—1971 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்

(த. 37)

## நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை
## பாம்பன் வட்டம்

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகட்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் நெ. 4, ஸ்ரீநகர் காலனி, சென்னை-15, மேற்பார்வைப் பொறியாளர், பாம்பன்வட்டம் அலுவலகத்தில் 8—12—1971 மாலை 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | கட்டுத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1 முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் கி.மீ. 43 (மைல் 26/7) பாலம் அமைத்தல். | 6,490 |

ஒப்பந்தங்கள் அன்று மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள், நமுனுக்கள், வரைபடங்கள், முதலியவற்றைத் தனிக் கோட்டப் பொறியாளர், திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூபாய் 25.90 செலுத்தி 1—12—1971 முதல் 7—12—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப் பணம் எக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்ட கட்டுத் தொகையைத் தனிக் கோட்டப் பொறியாளர், திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் தனிக் கோட்ட அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் தனிக் கோட்டப் பொறியாளர், திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் பெயரில் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினுல் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்பைத் தாங்கிய ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

குறிப்பிட்ட கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பாம்பன் வட்டம்.

(த.49)

## பொதுப்பணித் துறை

## செங்கற்பட்டு வட ஆர்க்காடு பெருவட்டம்

வேலையின் பெயர்—வடஆர்க்காடு மாவட்டம், அரக்கோணம் அரசினர் மருத்துவ மனையில் 32 படுக்கைகள் கொண்ட பிரிவுக் கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும் அரசின் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்டப் பணிக்காகச் செங்கற்பட்டு-வட ஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளரால் 10—12—1971 மாலை 3 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. அதே நாள் மாலை 3-15 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் செங்கற்பட்டு-வட ஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

1 ஒப்பந்த முறை ... .. மொத்தத் தொகை.

2 முன் வைப்புத் தொகை ..ரூபாய் 3,500.

3 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங் ரூ. 20.60 விற்பனை வரி 3 சதகளின் விலை வரை படத்துடன் விகிதம் சேர்த்து.

4 முடிக்க வேண்டிய காலம் 6 மாதங்கள் (ஆறு மாதங்கள்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு-வட ஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் (வேலூர்-1) அலுவலக நேரங்களில் 26—11—1971 முதல் 8—12—1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20.00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது). கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்க் ஆகியவற்றில் '' P. W. Remittances III Other Remittances '' என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை, கட்டடங்கள் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி ரூ. 0.60 (காசுகள் அறுபது மட்டும்) கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்கில் '' XII Sales Tax (b) receipt under State Sales Tax Act General Sales Tax Act '' என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்தில் விண்ணப்பத்துடன் அனுப்பினுல் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத் தொகை கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெட்யூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ அல்லது ஷெட்யூல்டு பாங்குகளின் டிமான்ட் டிராப்டாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக்கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் நடைமுறை விலையில் 5 சதவிகிதம் குறித்து ஏற்றுக்கொள்ளப்படும். தேசியச் சேமிப்பு நற்சான்று பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். மற்று எந்தப் படிவத்தில் செலுத்தினுலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,** (பொ.ப.து.)
செங்கற்பட்டு-வட ஆர்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த. 57)

ஒப்பந்தப் புள்ளி

அரசாங்கக் கீழ்ப்பாக்க மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்குத் தேவையான 1972 ஜனவரி 1-ஆம் தேதி முதல் 1972 ஜூன் 30-ஆம் தேதி முடிய உள்ள காலத்திற்கான மருந்து வகைகள், இரண சிகிச்சை உபகரணங்கள் முதலியவற்றின் தேவைகளை நிரப்புவது பற்றிய ஒப்பந்த அறிவிப்பு.

முத்திரை ஒப்பந்தங்கள் (2) நகல்களில்) 20—12—1971 அன்று பிற்பகல் 3 மணி வரை மருந்துகள், இரண சிகிச்சை உபகரணங்கள் முதலியவற்றின் தேவைகளின் நிரப்புவது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்களுக்காக ரூபாய் 2(ரூபாய் இரண்டு மட்டும்) ''XXIII. Medical Miscellaneous'' என்ற தலைப்பிலும் மேற்படி ரூபாய் இரண்டுக்கான விற்பனை வரியை '' XII. Sales Tax Receipt under the Sales Tax Act '' என்ற தலைப்பிலும் கட்டி மேற்படி இரண்டு வங்கி ரசீதுகளுடன் கூடிய விண்ணப்பத்தின் பேரில் இம்மருத்துவமனை அலுவலகத்திலே ஒப்பந்த பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரியப்படுத்தப்படுகிறது. மேற்படி ரூபாய் 2 (ரூபாய் இரண்டு மட்டும்) எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது என்றும் தெரியப் படுத்தப்படுகிறது.

குறித்த தேதியும், நேரமும் கடந்து வரும் ஒப்பந்தங்களும், முத்திரையிடப்படாத உறையில் வரும் ஒப்பந்தங்களும், முன்பண வைப்பு வங்கி இரசீதில் (சலான்) இல்லாத ஒப்பந்தங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டது.

**எச். டி. சிங்,**
கண்காணிப்பாளர்,
அரசினர் கீழ்ப்பாக்கம்
மருத்துவக் கல்லூரி
மருத்துவ மனை,

(த. 31)

## ஒப்பந்தப் புள்ளி

### பொறியியல் பணித்துறை.

திருச்சி வட்டம், திருச்சிராப்பள்ளி—1.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருச்சி வட்டம், திருச்சி அவர்களால் திருச்சியில் உள்ள அவரது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக்கொள்ளப்படும்.

| எண். | வேலையின் பெயர். | ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம். | பிணைத் தொகை. | ஒப்பந்த முறை. | முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. | விற்பனை வரி. | ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி. | விரும்பும் ஒப்பந்தக்காரர்களின் முன்பாக ஒப்பந்தம் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | | | ரூ. | | | ரூ. | ரூ. காசு. | | |
| 1 | திருச்சியில் உள்ள அரசினர் ரயில்வே போலீஸ் பிரிவில் ஒரு போலீஸ் தலைமைச் சேவகர் குடியிருப்பும், 20 போலீஸ் சேவகர்கள் குடியிருப்புகளும் கட்டுதல். | 24-12-71 மாலை 3 மணி. | 3,200 | எல்.எஸ். | பத்து மாதங்கள். | 25 | 0.88 | 13-12-71 | 24-12-71 மாலை 3-30 மணி. |
| 2 | திருச்சியில் உள்ள சிந்தாமணி போலீஸ் குடியிருப்புப் பிரிவின் 4 போலீஸ் தலைமைச் சேவகர்கள் குடியிருப்பும், 6 போலீஸ் சேவகர் குடியிருப்பு வீடுகளும் கட்டுதல். | 24-12-71 மாலை 3-00 மணி. | 2,500 | எல்.எஸ். | எட்டு மாதங்கள். | 25 | 0.88 | 13-12-71 | 24-12-71 மாலை 3-30 மணி. |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும், விற்பனை வரியையும் (ஒவ்வொரு வேலைக்கும் தனியே) முறையே அரசின் கருவூலத்தில் XXXVII Public works–State Revenue—Miscellaneous மற்றும் XII Sales Tax (b) receipts under the State Sales Tax Act—General Sales Tax" என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தி இந்தச் சலான் மேற்கண்ட வேலைகளுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமையுண்டு.

மற்ற விதிகளும், விவரங்களும் விரிவாக ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

நா. முத்துகிருஷ்ணன்,
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்.

(த.54)

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் : மதுரை மாவட்டம்--நிலக்கோட்டை தாலுகா- பட்டிவீரன்பட்டி—ஒரு போலீஸ் ஆய்வாளர், இரு போலீஸ் தலைமைச் சேவகர், பதின்மூன்று போலீஸ் சேவகர் ஆகியோருக்கான இருப்பிடக் கட்டடம் அமைத்தல்.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர் மதுரை வட்டம், மதுரை—2 அவர்களால் மேற்கண்ட வேலைக்கான முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 29-12-1971 மாலை 3·00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்பட்டு மாலை 4·00 மணிக்குத் திறக்கப்படும். 20—12—1971 முதல் 27—12—1971 வரை ஒப்பந்த தஸ்தாவேஜுகள் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்த முறை:—

தொகை மதிப்பு:

கட்டுத் தொகை ரூ. 4,300;

வேலை முடிவுக்கெடு—ஆறு மாதங்கள்.

ஒப்பந்த தஸ்தாவேஜுக்கு விலையான ரூ. 20 (ரூபாய் இருபது) தொகையை அரசினர் கருவூலம் ஒன்றிலோ அல்லது ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ P. W. Remittances III OR'' என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர் பெரியகுளம் கோட்டம்—பொதுப்பணித் துறை பெரியகுளம், அவர்கள் கணக்கில் வரவு செய்யும்படியாகவும், ரூ. 0·75 காசு விற்பனை வரியை 'XII Sales Tax (d) Miscellaneous' எனும் தலைப்பிலுமாக, ஒரே சலானில் செலுத்திச் சலானைத் தாக்கல் செய்து, ஒப்பந்த தஸ்தாவேஜுகளைப் பெற்றுக் கொள்ளலாம். சலானைத் தாக்கல் செய்த பிறகே ஒப்பந்த தஸ்தாவேஜுகள் வழங்கப்படும்.

சலான்கள் அல்லது ஷெட்யூல் பாங்கின் ''Deports Call'' இரசீது அல்லது மாநில அரசாங்க செக்யூரிடிகள் அல்லது ஷெட்யூல் பாங்குகளின் டிமாண்டு டிராப்டுகள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட 14 பாங்குகளின் உத்ரவாதம் ஆகிய உருவிலே கட்டுத் தொகை டிபாசிட் ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு மாநில மின்சார சர்டிபிகேட்டுகளும் கூட, மார்க்கட் மதிப்பில் 5 சத விகிதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற எந்த வகையில் செலுத்தினாலும் ஏற்கப்படமாட்டாது.

**சி. தேசிகசங்கர்,**

மேற்பார்வைப் பொறியாளர்
பொதுப்பணித்துறை,
மதுரை வட்டம், மதுரை.

(த. 79)

---

## கட்டடம் கட்ட..

வேலையின் பெயர்—

சென்னை அரசினர் மனநோய் மருத்துவ மனையில் பணிபுரியும் செவிலியர்களுக்கான (நர்சஸ்) குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி ஒத்திவைப்பு அறிக்கையின்படி 9-11-71 என்ற கடைசி நாள் 8-12-71, மாலை 3 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது, மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 1-12-71 முதல் 7-12-71 வரை எல்லா அலுவலக நேரங்களிலும் பெறலாம்.

மற்ற நிபந்தனைகளில் எந்த மாறுதலும் இல்லை.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
சென்னை, செங்கை வட்டம்

(த-63)

வேலையின் பெயர்—

நந்தனம் அரசினர் கலைக்கல்லூரியில் கூடுதல் கட்டடம் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப்புள்ளி தரக் கடைசி நாள் 15-11-71 மாலை 3 மணி என்றிருந்த கெடு 9-12-71 மாலை 3 மணி வரை ஒத்திவைக்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், சென்னை, செங்கற்பட்டு வட்டம், பொதுப்பணித் துறை, சென்னை, 5-ல் 1-12-71 லிருந்து 8-12-71 வரை எல்லா அலுவல் நேரத்தில் கிடைக்கும்.

இதர நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

**பி. கே. கந்தசாமி.**

மேற்பார்வைப் பொறியாளர்
சென்னை, செங்கை வட்டம்

(த-62)

---

சென்னை மியூசியம் தியேட்டர் அரங்கில் நவீன முறையில் இருக்கை வசதிகளைத் (புஷ்பேக் சேர்கள்)28, டிப அப் சேர்கள் 485, ஆக மொத்தம் 513 சேர்கள்) தயாரித்து அமைத்துக் கொடுப்பது பற்றிய வேலைகளுக்காக, உறையின் மீது வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்ட மூடி முத்திரையிட்ட தனித் தனி ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்ப மிட்டவரால் 20—12—1971 மாலை 4·00 மணிவரை வரவேற்கப் படுகின்றன. பல்வேறு வகைகளிலுமாக சேர் ஒன்றுக்கு விலை விகிதம் குறிப்பிடப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளி விவரங்களை இயக்குநர், அரசு அருங்காட்சியகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11·00 மணியிலிருந்து பிற்பகல் 3·00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**எஸ். டி. சத்தியமூர்த்தி,**
இயக்குநர்,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை—8.

(த. 25)

## ஒப்பந்தப் புள்ளி

### உணவுப் பொருள் வழங்குதுறை

1972-73-ஆம் ஆண்டுக்கு வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அரசினர் மருத்துவ நிலையங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

தமிழ்நாடு ஆளுநர் ஆணைப்படியும், அவர் சார்பாகவும், கட்டளைப்படியும், வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள அரசினர் மருத்துவ நிலையங்களுக்கு, உணவுப் பொருட்கள் முதலியவை கொடுப்பதற்கான ஒப்பந்த விவரப் பட்டியல்கள் (டெண்டர்) வரவேற்கப்படுகின்றன.

இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே கொடுக்கப் பட்டுள்ள மருத்துவ நிலையங்களுக்கு 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் தேதி முதல் அல்லது ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளும் அதிகாரியினால் தெரிவிக்கப்படும் தேதியிலிருந்து 1973-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ம் தேதி முடிய தேவைப் படும் உணவுப் பொருள்கள் மற்றும் மருத்துவ நிலையங்களுக் குத் தேவையான பொருட்களையும் அளிப்பதற்கான அனுப்ப வேண்டிய ஒப்பந்த விவரப் பட்டியலை (டெண்டர்) வரும் 1972-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 2 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். முத்திரை யிடப்பட்ட உறையினுள் வைக்கப்பெற்ற ஒப்பந்தப் புள்ளி யை அந்தந்த மருத்துவ நிலையத் தலைமை மருத்துவ அலு வலரிடம் கொடுத்துக் கொள்ளலாம்.

அரசினர் காவலர் மருத்துவ நிலையத்திற்கான ஒப்பந்தங் கள் வேலூரில் மாவட்ட மருத்துவ அலுவலரிடம் கொடுக்கப் பட வேண்டும்.

அரசினர் பெண்ட்லண்ட் மருத்துவநிலையம், வேலூர்.

அரசினர் காவலர் மருத்துவ நிலையம், வேலூர்.

அரசினர் எலும்புருக்கிநோய் நிலையம், பென்னாத்தூர்.

அரசினர் மருத்துவ நிலையம், திருவண்ணாமலை.

| | |
|---|---|
| ஷை | திருப்பத்தூர். |
| ஷை | குடியேற்றம். |
| ஷை | வாலாஜாப்பேட்டை. |
| ஷை | அரக்கோணம். |
| ஷை | வந்தவாசி. |
| ஷை | ஆரணி. |
| ஷை | செய்யார். |
| ஷை | போளூர். |
| ஷை | செங்கம். |
| ஷை | சோளிங்கர். |
| ஷை | ஆம்பூர். |
| ஷை | கலவை. |

அரசினர் பெண்கள் குழந்தைகள் மருத்துவ நிலையம், வாணியம்பாடி.

அரசினர் பெண்கள் குழந்தைகள் மருத்துவ நிலையம், பேர்ணாம்பட்டு.

அரசினர் மருந்தகம், மெயில்பட்டி.

| | |
|---|---|
| ஷை | சாத்தனூர் அணை. |
| ஷை | தனிப்பாடி. |
| ஷை | சேத்துப்பட்டு. |

அரசினர் தொழுநோய் தடுப்புக் காலனி, திருவண்ணாமலை

| | |
|---|---|
| ஷை | போளூர். |
| ஷை | அரக்கோணம். |

அரசினர் தொழுநோய் மருத்துவ நிலையம், திருவத்தி புரம்.

அரசினர் மார்பு மருத்துவ நிலையம், திருவண்ணாமலை.

அச்சிட்ட ''ஒப்பந்தப் படிவங்கள் ஒப்பந்த விதிகள்'' தேவைப்படும் பொருட்களின் பட்டியல் முதலியன பெறு வதற்கு ரூபாய் 5·18 (ரூபாய் ஐந்தும் பதினெட்டு காசும் விற்பனை வரி உட்பட) கீழ்க்கண்ட அலுவலகங்களுள் ஒன்றில் செலுத்தலாம்.

(1) ரிசர்வ் வங்கி.

(2) அரசு வங்கிகளின் ஏதாவதொரு கிளை (ஸ்டேட் வங்கி).

(3) அரசினர் கருவூலங்களுள் ஒன்று.

கட்டணத் தொகை ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) ''XXIII மெடிகல் ஜி. மிஸ்லேனியஸ்'' என்னும் தலைப்பின் கீழ் செலுத்தி அந்தச் சலானை மனுவுடன் கொடுத்துப் படிவங் களைப் பெற வேண்டும். பணம் ரொக்கமாகப் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது. (0·18 காசு) விற்பனை வரியைக் XII S.T. என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பு:—1. ஒவ்வொருவரும் தங்கள் ஒப்பந்தத்துடன் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ஆம் தேதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தாசில்தார் ஒப்பமிட்ட ''பொருளாதாரச் சான்றிதழ்'' (சால்வன்சி சர்டிபிகேட்) மூலப்படியோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் ஒருவரின் ஒப்பம் பெற்ற நகல் படியோ அனுப்பி வைக்க வேண்டும்.

2. ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தம் குறிப்பிட்ட தேதிகளில் பெறப்பட்டதும், பிறகு ஒப்பந்தக்காரர்களிட மிருந்து எவ்விதக் கடிதமும் பெறப்பட மாட்டாது. ஒப்பந் தங்களின் முடிவை அறிவிப்பதைத் தவிர வேறு எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் அனுமதிக்கப்பட மாட்டாது.

**எர்னஸ்ட் ஜே. டேவிட்,**
மாவட்ட மருத்துவ அலுவலர்,
வட ஆர்க்காடு, வேலூர்.

வேலூர் (வ.ஆ.),
12—11—1971.

(து. 44)

## மின்சார வாரியம்

—சுருளியாறு நீர்மின் திட்டம்—

குறிப்பு எண்: PS–SUR-1

Supply of Junglewood planks and scantlings

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், வாரியத்தின் சார்பிலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளுடன் ஒப்பந்ததாரரின் பெயரும், மேலுறையில் எழுதப்பட்டு, மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கீழே கையொப்பமிட்டுள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் அவரது அலுவலகத்தில் 27–12–1971 பிற்பகல் 3-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் இவ்வலுவலகத்தில் பிற்பகல் 4-00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததார்கள் அல்லது அவர்கள் பிரதிநிதிகளின் முன் திறக்கப்படும்.

(2) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 2·10 (ரூபாய் இரண்டும் காசு பத்து மட்டும் விற்பனை வரி உட்பட) வீதம் செலுத்திக் கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலிருந்து பெறலாம். இத்தொகையானது எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

(3) மேலே குறிப்பிட்டுள்ள சப்ளேக்கான கட்டுத் தொகை (earnest money deposit) ரூ. 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு மட்டும்) கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் செலுத்தப்பட்டு அதற்கான செலுத்துச் சீட்டு ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் செக்குகள் (cheques) ஏற்கப்பட மாட்டா. கட்டுத் தொகையின்றிச் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் கட்டாயமாக நிராகரிக்கப்படும். டிமாண்ட் டிராப்ட் (Bank Demand Draft) அனுப்புவதனால் ஒப்பந்த கொடுப்பதற்கு முன்னதாகவே அனுப்பப்பட வேண்டும். இந்த ஒப்பந்தத்துக்கான கட்டுத் தொகையை ஒப்பந்தத்துடன் செலுத்தாமல் வேறு ஒப்பந்தத்துக்காக ஒப்பந்ததாரரால் கட்டப்பட்டத் தொகையையோ, வேறு தொகையையோ, ஈடு செய்யக் கோரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(4) ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டவுடன் ஒப்பந்தத்துக்குரியவர் இவ்வலுவலகத்தால் குறிப்பிட்ட நாட்களுக்குள் பிணை வைப்புத் தொகையை (Surity Deposit) செலுத்த வேண்டும். இப்பிணை வைப்புத் தொகை கட்டுத் தொகையுயுடன் சேர்ந்து சப்ளை செய்ய வேண்டிய பொருளின் மதிப்பில் 5 சத வீதம் இருக்கும். இந்தப் பிணை வைப்புத் தொகைக்கும், கட்டுத் தொகைக்கும் வட்டி தரப்பட மாட்டாது. இந்த மொத்தத் தொகையும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்படி பொருட்களைத் திருப்திகரமாக சப்ளை செய்த பிறகு திருப்பித் தரப்படும்.

ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்குரியவர் குறிப்பிட்ட தினங்களுக்குள் பிணை வைப்புத் தொகையைச் செலுத்தத் தவறினாலும், ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு ஒப்பந்தப்படி சப்ளை செய்தலிலிருந்து பின்வாங்கினாலும் கட்டுத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

(5) இவ்வலுவலகத்தின் மனு பாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களும், குறித்த காலம் தள்ளி வரும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. மேலே குறிப்பிட்ட பொருட்கள் சப்ளை செய்தலை சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கு பகிர்ந்து வழங்குதற்கோ அல்லது சில ஒப்பந்தங்களையோ எல்லா ஒப்பந்தங்களையுமோ காரணம் தெரிவிக்காமல் நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமையுண்டு.

(6) ஒப்பந்தப் பிரதிகள் சாதாரண அஞ்சலிலேயே அனுப்பப்படும். தபால் போக்குவரத்தில் காலதாமதம் ஏற்படினும், ஒப்பந்தப் பிரதிகள் தொலைந்து போனாலும் இவ்வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பாரங்கள் ஒருவர் பெயரிலிருந்து மற்றொருவர் பெயருக்கு மாற்றுதலுக்கு உரியதல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
கோதையாறு நீர் மின் திட்டம், பெருமாள்புரம், திருநெல்வேலி-7.

(த.40)

---

## மறு ஒப்பந்தப் புள்ளி

## வனத்துறை

### வனப்பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை "வனப்பொறியாளர், திருச்சி" அவர்கள் தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

1. "சிக்கள்ளி—திக்னூரி சாலை அமைத்தல். 3·8 கிலோ மீட்டர் தலைமலை வனச்சரகம் கோவை வடக்கு வனக்கோட்டம்."

கட்டுத்தொகை ரூ. 1,530 (இ.எம்.டி)

ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளவும் திறக்கவும் கடைசி நாள் 8–12–1971 நேரம் முறையே மாலை 3·00 மணி, 3·05 மணி.

2. ஒப்பந்தப் பத்திரங்களை "வனப்பொறியாளர், 1–ஏ ராயல்ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி-1" எனும் முகவரியிலிருந்து ரூ. 1·04 நேரிலோ அல்லது பண ஆணை மூலமோ செலுத்தி 25-11-1971 முதல் 5–12–1971 முடிய அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**ச. சண்முகசுந்தரம்,**
வனப்பொறியாளர், திருச்சி.

17—11—1971.

(த. 78)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், கழிவு நீர் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 15—12—1971 (புதன் கிழமை) பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

| | |
|---|---|
| வேலையின் பெயர் .. | ஸ்ரீரங்கம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—முதல்நிலை—50,000 லிட்டர் கொள்ளளவுள்ள உயர்மட்ட நீர்த்தொட்டி கட்டுதல். |
| ஒப்பந்த வகை ... | மொத்தத் தொகை. |
| முன் வைப்புத் தொகை. | ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்). இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். காசோலை அனுப்புதல் கூடாது. |
| வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு. | நான்கு மாதங்கள். |
| ஒப்பந்தப் படிவங்களின் விலை. | ரூபாய் ஐந்து காசு பதினெட்டு மட்டும் (விற்பனை வரி உள்பட). |

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து பி-15, தில்லைநகர், மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 11—12—71 (சனிக்கிழமை) மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(த. 59) **மேற்பார்வைப் பொறியாளர்** (பொ. சு.)

## ஏல விளம்பரம்

### குழித்துறை நகராட்சி

இந்த நகராட்சிக்குச் சொந்தமான வெட்டு வெளி பஸ் நிலையம் இருக்கும் கேண்டீன் நடத்தும் உரிமையை 1971-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 10-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இந்த நகராட்சியில் வைத்துப் பகிரங்கமாக ஏலம் செய்யப்படும். ஏலம் கேட்கவிரும்புவோர் முன்பணம் செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ளலாம். காண்டிராக்ட் கமிட்டியின் ஒப்புதலுக்குப் பிறகுதான் மேற்படி கேண்டீனை அனுபவிக்கும் உரிமை வழங்கப்படும். இந்த நகராட்சியின் 20—1—1971-ஆம் தேதிய 1971-72-ஆம் ஆண்டு குத்தகை ஏல விளம்பரத்தில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் விடப்படும்.

| விவரம். | காலம். | கட்டுத் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கேண்டீன் I | 15—12—1971 முதல் 31—3—1972 வரை. | டெபாசிட் ரூ. 50. கரண்டு டெபாசிட் ரூ. 50. |

**டி. பி. கோபு,** பி.காம்.,
ஆணையர்.

குழித்துறை நகராட்சி,
குழித்துறை,
18—11—1971.

(த. 71அ)

## ஒப்பந்தப்புள்ளி

### குழித்துறை நகராட்சி

1971 டிசம்பர் மாதம் 13-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4 மணிவரை குழித்துறை நகரமன்றத்தின் தேவைக்கு 18×11 அங்குலம் அளவில் 60 கக்கூஸ் டின் சப்ளை செய்வதற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன. அன்று மாலை 4-30 மணிக்கு ஒப்பந்தங்கள் திறக்கப்படும். கூடுதல் விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொல்ளலாம். உத்திரவு கிடைத்த 15 தினங்களுக்குள் எல்லா டின்களையும் சப்ளை செய்து விட வேண்டும்.

| விவரங்கள். | எண்ணம். | கட்டுத் தொகை. |
|---|---|---|
| கக்கூஸ் டின் மூடி, கைப்பிடி உட்பட—24 கேஜ் 18×11 அங்குலம். | 60 | ரூ. 50 |

**டி. பி. கோபு,** பி.காம்.,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
குழித்துறை,
18—11—1971

(த. 71ஆ)

## பொதுப்பணித் துறை

பார்வை எண். ந. எஸ் 1651/66/வ 6/நாள் 18-11-71

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித் துறை காவிரி வளர்ச்சிப் பணி வட்டம் தனி மேற் பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 23-12-71 மாலை 4 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிப் பெற்றுக் படும்.

(ஒப்பந்த வகை—கே. 2)

| வேலையின் விவரம். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திரங் களின் விலை. | விற்பனை வரி. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. காசு. |
| வளவனுற்றின் குறுக்கே 22.4 கி. மீ-ல் (Regulator) கடை ஒழுங்கை கட்டுதல். | 6,000 | 10.00 | 0·35 |

1. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள் 6-12-71.

2. பிணைப்பணம் (E. M. D.) நிர்வாகப் பொறியாளர், பொ.ப.து. வடிகால் கோட்டம், திருவாரூர் அவர்கள் கணக் கில் அரசாங்கக் கருவூலத்தில் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும்.

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில் ''பொதுப் பணித்துறை செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை'' என்னும் தலைப்பில் நிர்வாகப் பொறி யாளர், பொ.ப.து. வடிகால் கோட்டம், திருவாரூர் என்ற கணக்கில் செலுத்த வேண்டும்.

4. விற்பனை வரி அரசாங்கக் கருவூலத்தில் ''XII—விற் பனை வரி பி. பற்று சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்—பொது விற்பனை வரி'' என்னும் தலைப்பில் செலுத்தப் பட வேண்டும்.

5. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பம் 21-12-71 தேதிக்குள் தனி மேற்பார்வைப் பொறியாளரின் நேர் உதவி யாளர், காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அதன் பிறகு வரும் விண்ணப்பங்கள் சாதாரணமாக கவனிக்கப்பட மாட்டாது.

**அ. சேஷாத்திரி,**
தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப் பணி வட்டம்,
தஞ்சாவூர்.

18—11—1971

(த.74)

## குடிநீர், வடிகால் வாரியம்

வேலையின் பெயர் :

காவேரிப்பாக்கம் குடிநீர் வழங்குத் திட்டம்—முதல்நிலை—1-வது பகுதிக்கு 2·50 இலட்சம் லிட்டர்கள் கொள்ளள வுள்ள ஆர்.சி.சி. நீர்த்தேக்கம் கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் மேற்கண்ட பணிக்காக இந்தத் துறை அல்லது இது போன்ற அரசு நிறுவனங்களில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்து துறையின் படிவத்தில் அனுப்பப்படும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரிய மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்ட மேற்பார்வைப் பொறியாளரால், எண். 52, கெங்கு ரெட்டி ரோடு, சென்னை-8 என்ற முகவரியில் உள்ள அவரு டைய அலுவலகத்தில் 29—12—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படும். அதே நாள் மாலை 3-30 மணிக்கு அப் போது வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

1. ஒப்பந்த முறை—முழுத் தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 1,620.
3. வேலையை முடிக்க வேண்டிய காலம்—6 மாதம்.
4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 10·35.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் தொகையை நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், வாணியம்பாடி என் பவர் கணக்கில், ''P.W. III O.R.'' என்ற தலைப்பிலும், விற்பனை வரிக்கான தொகையை''XII. Sales Misc. I—General Sales-tax'' என்ற தலைப்பிலும் தனித்தனி செலானில் செலுத்தவேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர் (ம.ந.வா.பொ.) கோட்டம், குடிநீர், வடிகால் வாரியம், 301, ஜமாத்ரோடு, வாணியம்பாடி என்ற முகவரிக்கு நேரக்க மாகவோ, மணியார்டர் மூலமாகவோ பணம் அனுப்பிப் பெற் றுக் கொள்ளலாம். இந்தப் பணம் எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது.

**மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா.பொ)**
குடிநீர், வடிகால் வாரியம்.

(த.69)

## ஒப்பந்தப் புள்ளி

# நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை
## (தேசிய நெடுஞ்சாலை)

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தப் பத்திரங்களை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மதுரை-2 அவர்கள் எண் 11 ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 22-12-1971 தேதி (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் (அலுவலகக் கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்கு திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | முன்பண வைப்புத் தொகை. | ஒப்பந்தப் பத்திரம் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|
| இராமநாதபுரம் மாவட்டம்— | ரூ. | |
| தேசிய நெடுஞ்சாலை 49-ல் கி.மீ. 100/7-ல் (மைல் 62/7)-ல் உள்ள பாலத்தை திரும்பக் கட்டுதல். | 4,400 | கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை வேலைகள்), மதுரை-2. |

ஒவ்வொரு கோப்புக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.70 வீதம் தொகை செலுத்தி எழுத்துமூலம் வேண்டிக்கொள்வதன்மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2 விலாசத்திலிருந்து 15-12-71 முதல் 21-12-71 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், வரைபடங்கள் முதலியனவற்றைப் பெறலாம். இத்தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள முன் பொருள் வைப்புத்தொகையை மேற்கண்ட தனி கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) அதிகார எல்லைக்குள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தப் பத்திரத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர சம்பந்தப்பட்ட கோட்ட பொறியாளரின் பெயரில் மாற்றப்பட்ட டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் வங்கி உத்தரவாதங்களையும், டிமாண்ட் பத்திரங்களையும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், முன்பொருள் வைப்புத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

வங்கி உத்தரவாதங்களை சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தப் பத்திரங்களுடன் இணைத்து அனுப்பவேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கென ரசீது இல்லாத ஒப்பந்தப் பத்திரங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**பி. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
(தேசீய நெடுஞ்சாலை), மதுரை-2.

(த.77)

## ஒப்பந்தப்புள்ளி

# குழித்துறை நகராட்சி

கீழ்க்கண்ட பணியைச் செய்வதற்கென மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு மேற்படாமல் ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். அதே தேதியன்று பிற்பகல் 4-30 மணிக்குத் திறக்கப்படும். குறிப்பிட்ட ஒப்பந்தப் புள்ளிகளும் முன் வைப்புத் தொகை செலுத்தாத ஒப்பந்தப் புள்ளிகளும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். இதர விவரங்கள் அலுவலக நாட்களில் வேலை நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

| வேலையின் விவரம். | முன் வைப்புத் தொகை. | ஒப்பந்தப் படிவம் விலை. | வேலை முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|
| | ரூ. காசு. | ரூ. காசு. | |
| மரக்கறி சந்தையின் ரோட்டிற்கு தார் தளம் அமைக்க. | 190 00 | 4 32 | 2 மாதம். |

**டி. பி. கோபு,** பி.காம்.,
ஆணையர்.

குழித்துறை நகராட்சி,
குழித்துறை,
18—11—1971

(த.71 இ)

# ஒப்பந்தப் புள்ளி

## தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொள்வதற்காகத் தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச்சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட தேதிகளில், மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்த சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில்துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

| தொடர் எண்ணும் வேலையின் பெயர். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை. | வேலையை முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி. | ஒப்பந்தப் புள்ளிப் பெறுங் கடைசி தேதி. |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | | |
| 1 திருச்சி— திருவெறும்பூர் துணைத் தொழில்கள் பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் உள்ளதாக, தொழிலாளர்களுக்கான மூன்று பிளாக்குகள் கட்டுதல். | 3,300 | 10·40 | 8 மாதங்கள். | 19—11—71 | 6—12—71 |
| 2 கும்பகோணம் தொழில் பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் உள்ளதாக தொழிலாளர்களுக்கான ஒரு பிளாக் கட்டுதல். | 1,100 | 10·40 | 6 மாதங்கள். | 22—11—71 | 7—12—71 |

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 63, ரங்கநாதபுரம், புத்தூர், திருச்சி என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), திருச்சிக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் மேலே குறிப்பிட்ட தேதி முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை அதற்குரிய விற்பனை வரி உட்பட்டத் தொகையான ரூபாய் 10·40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX, Industries and other Receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), திருச்சிக் கோட்டம், 63, ரங்கநாதபுரம், புத்தூர், திருச்சி, அவர்களது கணக்கில் செலுத்தவேண்டும்.

கட்டுத் தொகையை சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), திருச்சிக் கோட்டம் அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசீய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகைச் செலுத்தப்படுமானல் ஏற்றுக் கொள்ளப்படாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**சி. பி. மாத்யூ,**

மேற்பார்வைப் பொறியாளர்,
(கட்டுமானப் பகுதி).

(த. 92)

## ஒப்பந்தப் புள்ளி

### கோயம்புத்தூர் வீட்டு வசதிப் பிரிவு

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிளை)

எண் : 52/71—72

